Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா | செய்தி : 021 493 0000 | விளம்பரம் : 021 493 1111

சுடர் :35 கதிர் :63 தை 16ஆம் நாள் வியாழக்கிழமை 30 ஜனவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## ஆதனவரி அறவீடு: கரைச்சியில் கைகலப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 30

கரைச்சி பிரதேச சபையால் அறவிடப் பட்டு வருகின்ற ஆதன வரியை குறைக் குமாறு கோரிய விசேட சபை 04

முச்சந்தி முரளி



"அவர் கண்டுபிடிக்க ஏலாதென்றார், இவர் எதிர்க்கத் தயார் என்றார். இதில் எதை நம்புறது சொல்லுங்கோ?..."

# 'சப்ரிகம' திட்ட விதிகளை மீறி தன்னிச்சையான முடிவுகள்!

### அங்கஜன் மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜனவரி 30

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் நிறைவான கிராமம் (சப்ரிகம) திட்டத்துக்கான சுற்றறிக்கையைப் பகிரங்கமாகவே மீறியுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. திட்ட முன்மொழிவுகளுக்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி பெறப்பட வேண்டும். என்ற போதிலும், அதனைப் பெற்றுக் கொள்ளாது நிதி அமைச்சுக்கு அவை அனுப்பப்பட்டுள்ளன. நிதி அமைச்சுக்கு அனுப்பி, நிதி விடுவிக்கப்பட்ட பின்னரே, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு நாளை அவை சமர்ப்பிக்கப்படவுள்ளன. 04

## சீனப் பிரஜை நேற்றுப் பலி

### பதற்றத்தில் பதுளை

கொழும்பு, ஜன. 30

பதுளை அரசினர் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த சீனப்பிரஜை ஒருவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். இதனால் 'கொரோனா' அச்சம் அந்தப் பகுதியில் நேற்று வியாபித்தது. 08

## கொரோனாவை எதிர்க்க ஏற்பாடுகள் தயார்!

### மக்களிடம் அச்சம் வேண்டாம் என்று நம்பிக்கையூட்டுகின்றார் சத்தியமூர்த்தி

யாழ்ப்பாணம், ஜன. 30

கொரோனா வந்தால் அதனை எதிர்கொள்வதற்காக அனைத்தும் தயார்நிலையிலேயே உள்ளன. இதனால் மக்களிடம் அச்சம் தேவையில்லை இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி. 04

## முகக்கவசங்களுக்கு கட்டுப்பாட்டு விலை

கொழும்பு, ஜன. 30

உக்கிரமடைந்துள்ள கொரோனா வைரஸ் காரணமாக, முகக் கவசங்கள் அதிக விலைக்கு விற்பனை செய்வதாக ஊடகங்களில் வெளியான குற்றச் சாட்டுக்களை அடுத்து முகக் கவசங்களுக்கான கட்டுப் பாட்டு விலையை 08

## விபத்தில் மாணவர் உயிரிழப்பு

வவுனியா, ஜன. 30

வவுனியா ஓமந்தை விளக்கு வைத்தகுளம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் மாணவர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

குறித்த விபத்து தொடர்பாகத் தெரியவருவதாவது:

யாழில் இருந்து வவுனியா நோக்கிசென்ற பேருந்து ஓமந்தை விளக்குவைத்த குளம் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது எதிரே மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞருடன் மோதியதிலேயே குறித்த 06

## கொரோனாவை கண்டறிய இலங்கையால் இயலாது

### அகிலவிராஜ் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, ஜன. 30

உடல்வெப்ப நிலையை மட்டும் அடிப்படையாகக்கொண்டு 'கொரோனா' வைரஸால் பீடிக் கப்பட்ட நோயாளியை அடையாளம் காணமுடியாது. அதற்கு முறையான பரிசோதனைகள் அவசியம். அதற்கான ஆய்வு கூட வசதி இங்கு இல்லை என்று அதிர்ச்சித் தகவலை 06



## இராணுவம் மூர்க்கத்தனம்: 2 இளைஞர்கள் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜன. 30

இரு இளைஞர்களை பிடித்துச் சென்ற இராணுவத்தினர், முகாமுக்கு அழைத்துச்சென்று மிக மோசமாக மூர்க்கமாகத் தாக்கியுள்ளனர். இருவரும் படுகாயமடைந்துள்ளனர். ஒருவர் மந்திகை மருத்துவமனையிலும் மற்றொருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவ 06

நாகர்கோவில் இளைஞர்கள் கைது:

## இராணுவத்தைக் காப்பாற்ற தாளம்போடுகிறது பொலிஸ்

### பிடிக்கப்பட்ட இளைஞர்கள் எண்மருக்கும் பிணை

யாழ்ப்பாணம், ஜன. 30

இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்து கைது செய்யப்பட்ட எட்டு இளைஞர்களையும் பிணையில் விடுவித்து பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டது. இளைஞர்களை பிணையில் விடுவிப்பதற்குப்பொலிஸார் கடும் எதிர்ப்பு வெளியிட்டபோதும் பிணை வழங்கப்பட்டது.

பொங்கல் தினத்தன்று நாகர் கோவில் பகுதியில் இராணுவத்தினர் மீது தாக்குதல் 07

## யாழுக்கு 3,000 வீடுகள்

### அமைச்சரவை அனுமதி

யாழ்ப்பாணம், ஜன. 30

தேசிய வீடமைப்பு அதிகார சபை கிராமத்துக்கு ஒரு வீடு என்னும் தொனிப்பொருளுக்கு அமைவாக யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 3 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டத்துக்கு அமைச்சரவை 04

## இனவாதம் கக்கிவிட்டு எப்படி இணைவீர்கள்?

### யாழில் வேதம் ஓதுகிறார் அத்துரலிய ரத்தின தேரர்

23

# பயிர் செய்யாத நிலங்களை பிறருக்குக் கொடுக்க முடிவு

## பதிவுசெய்யுமாறு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜன. 30

வேலணைப் பிரதேச செயலர் பிரிவில், விவசாயச் செய்கை மேற்கொள்ளப்படாத விளைநிலங்களை விவசாயச் செய்கை மேற்கொள்ள ஆர்வமுடையோருக்கு நிபந்தனை அடிப்படையில் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, தொடர்ச்சியாக 3 ஆண்டுகளாக நெற்செய்கை மேற்கொள்ளாத காணி உரிமையாளர்கள் இந்த வருடம் செய்கையில் ஈடுபட விரும்பின் காணி அமைந்துள்ள கிராம அலுவலரிடமும் விவசாய சம்மேளனத்திலும் வரும் சித்திரை மாதத்துக்கு முன்னர் உறுதிப்படுத்தவேண்டும்.

உறுதிப்படுத்தாத விளைநிலங்கள் கிராம அலுவலர்களின் சிபார்சுடன் விவசாய சம்மேளனத்தின் நிபந்தனை அடிப்படையில் நெற்செய்கைக்காக பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என்று வேலணைப் பிரதேச செயலர் அ.சோதிநாதன் தெரிவித்தார்.

வேலணைப் பிரதேச உணவு உற்பத்தி தொடர்பிலும் டெங்கு பற்றியதுமான விசேட கூட்டம் சில நாள்களுக்கு முன்னர் நடைபெற்றது. அதில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவில் தற்போது 2 ஆயிரத்து 915 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. இதில் கடந்த 5 ஆண்டுகளுக்கு முதல்வரை வெறுமனே 445 ஏக்கர் நிலத்தில் மட்டுமே செய்கை இடம்பெற்று வந்துள்ளது. பெருமுயற்சியின் பின்னர் கடந்த ஆண்டு ஆயிரத்து 75 ஏக்கர் நிலத்தில் விதைப்பு இடம்பெற்றது.

எனினும், மேலும் ஆயிரத்து 841 ஏக்கர் நிலம் செய்கை மேற்கொள்ளப்படாமல் உள்ளது. இதனால் பிரதேச உணவு உற்பத்தியைக் கருத்தில்கொண்டே மேற்படி தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. தவிர, வேலணைப் பகுதியில் தற்போது வசிக்கும் பொதுமக்களின் சுகாதார பாதுகாப்பு மற்றும் சமூக பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு குடியிருப்புக் காணிகளைக் கொண்ட காணி உரிமையாளர்கள் தங்கள் காணிகளைத் துப்புரவு செய்யவேண்டும். அந்தக் காணிகளை எல்லையிட்டுப் பாதுகாத்துக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள் என்றும் பிரதேச செயலர் அறிவுறுத்தியுள்ளார்.

(த-105)

# உயிர் இருக்கும் வரை தமிழர்களுக்குச் சேவை

## முன்னாள் ஆளுநர் ராகவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 30

எனக்கு இருப்பது ஓர் உயிர், ஓர் ஆன்மா, ஓர் உடல். எனது உயிர் இருக்கும் வரையில் தமிழர்களுக்கு எந்த விதத்திலும் சேவை செய்யத் தயாராக இருக்கின்றேன்

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

இந்து பௌத்த கலாசார பேரவை மற்றும் வடக்கு மாகாண தேசிய இரண்டாம் மொழிக் கற்கை நிலையம் என்பன இணைந்து நடத்திய, சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நேற்று மதியம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆண்டு இந்த நிகழ்வுக்கு வரும்போது வடக்கு மாகாண ஆளுநர். இப்போது முன்னாள் ஆளுநர். நாம் வடக்கு மாகாண நிர்வாகத்தை முன்மாதிரியான நிர்வாகமாக காட்டியுள்ளோம். எனக்குப் பின்னால் சிறந்த ஆளுநர் என்ற பட்டம் இருக்கின்றது. இதற்குக் காரணம் இங்குள்ள அதிகாரிகள்தான். தென்னிலங்கைக்கும், தமிழர் தேசத்துக்கும் இடையில் சிறந்த உறவுப் பாலம் இல்லை. துரதிஷ்டவசமாக இலங்கை பின்னடைவைச் சந்திப்பதற்கு இதுதான் காரணம்.

கல்வியில் வடக்கு மாகாணத்தை இலங்கையின் முதன்மை மாகாணமாக மாற்றவேண்டும். கல்வி அமைச்சின் செயலர் இளங்கோ ஓய்வு பெறுவதற்கு இதனைச் செய்ய வேண்டும். கல்வியிலே தமிழர்கள் வீழ்ந்து போக மாட்டோம். விழவிழ பீனிக்ஸ்பறவைபோன்று எழுவோம்.

அரசியலுக்கு வரப் போகின்றீர்களா? மீண்டும் ஆளுநராக வரப் போகின்றீர்களா? என்று பலர் கேட்கின்றார்கள். எனக்கு இருப்பது ஓர் உயிர், ஓர் ஆன்மா, ஓர் உடல்.

எனது உயிர் இருக்கும் வரையில் தமிழர்களுக்கு எந்த விதத்திலும் சேவை செய்யத் தயாராக இருக்கின்றேன். இதுதான் நான் அவர்களுக்கு சொல்லக் கூடிய பதில் - என்றார்.

(ஒ.5)

# கண்டெடுக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 30

கடந்த 22ஆம் திகதி கீரிமலை யாழ்ப்பாணம் 768 சிற்றூர்திச் சேவைச் சங்கத்தின் சிற்றூர்தியிலிருந்து பயணி ஒருவரால் தவறவிடப்பட்ட நகை கண்டெடுக்கப்பட்டுள்ளது. கீரிமலையிலுள்ள சிற்றூர்திச் சேவை சங்கத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நகையைத் தவறவிட்டவர் உரிய ஆதாரம் காட்டி அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ.5)

# இல்ல மெய்வன்மை

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் இன்று இடம்பெறவுள்ளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 1 மணியளவில் நடைபெறும் இந்த இல்லமெய்வன்மைப் போட்டிக்கு கல்லூரியின் கொழும்புக் கிளைப பழைய மாணவர்கள் அமைப்பின் தலைவர் எஸ்.மகேந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்தின் விளையாட்டுத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். பார்த்தீபன், கௌரவ விருந்தினராக கட்டட ஒப்பந்ததாரன் கே.வசீகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ம)

# ரயிலில் மோதுண்டு பசு சிதைந்து சாவு!

வவுனியா, ஜன.30

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ரயிலுடன் மோதி பசுமாடு ஒன்று நேற்று உயிரிழந்தது.

ரயில் வவுனியா ரயில் நிலையத்துக்கு வந்த போது இந்த விபத்து இடம்பெற்றது. இதையடுத்து புகையிரதம் நிறுத்தப்பட்டு உயிரிழந்த பசுமாடு ரயில் கடவையிலிருந்து அகற்றப்பட்டு சற்று நேரத்தின் பின்னர் யாழ் நோக்கி ரயில் பயணித்தது.

(ம-110)

# ஜனாதிபதி செயலணிக்கு கலாநிதி சிவகுமார்



யாழ்ப்பாணம், ஜன. 30

தேசிய வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கிளிநொச்சி பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுப்பிரமணியம் சிவகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முல்லைத்தீவு நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளராக, வடக்கு விவசாய அமைச்சின் உதவிப் பணிப்பாளராக, வடக்கின் துரித அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (என்ரிப்) திட்டப் பணிப்பாளராக பொறுப்புக்களை வகித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

(த-214)

# மாலைதீவில் கைதான இளைஞர்கள் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 30

மாலைதீவுக் கடற் பிரதேசத்தில் வைத்து 2007ஆம் ஆண்டு சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட முல்லைத்தீவைச் சேர்ந்த மூன்று இளைஞர்களும் தண்டனை நிறைவுற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவர் தொடர்பில், அந்த நாட்டுப் பொலிஸார் மாலைதீவு நீதிமன்றில் வழக்குத் தொடுத்தனர். மூவரையும் குற்றவாளிகள் எனவும், அதற்காக 15 ஆண்டுகாலச் சிறைத் தண்டனை வழங்குவதாகவும் அந்த நாட்டு நீதிமன்றம் அறிவித்திருந்தது. கைதிகள் தண்டனையை இலங்கை சிறையில் அனுபவிக்கலாம் என்ற உத்தரவில் இலங்கை அரசிடம் உத்தியோக பூர்வமாக அவர்கள் கையளிக்கப்பட்டிருந்தனர்.

அதன் பின்னர் கைதிகள் தொடர்பில் தீர்வை வழங்கக் கோரி கைதிகளின் உறவுகள் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதனை நாடியிருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் சட்டமா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

அதன் பிரகாரம் 2007ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக சிறையில் இருந்த மூன்று இளைஞர்களினதும் 15 ஆண்டுகளுக்கான காலம் எப்போது முடிவடைகின்றது என்பதோ அல்லது என்ன அடிப்படையில் இலங்கை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதோ கண்டறிய முடியாதவாறு வழக்கு உள்ளிட்ட அனைத்து விடயங்களும் மாலே மொழியில் இருந்தது.

அதனால் மாலே மொழியை மொழிபெயர்ப்பதற்காக 2018ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2ஆம் திகதி சிறைச்சாலைகள் அமைச்சரின் கவனத்துக்கு விடயம் கொண்டு செல்லப்பட்டது. இதையடுத்து விடயம் கோவை வெளிவிவகார அமைச்சுக்குப் பாரப்படுத்தப்பட்டது. சிறைச்சாலை அமைச்சினால் பாரப்படுத்தப்பட்ட கோவை மொழிபெயர்க்கப்பட்டு வழங்கப்பட்டது.

இந்த நிலையில் தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் கடந்தும் கைதியாக இருந்த மூவரும் தற்காலிகமாகப் பிணையில் வெளிவந்தனர். கைதி ஒருவருக்குத் திருமணமும் நடைபெற்றது. இந்த நிலையில் குறித்த 3 கைதிகளும் தண்டனைக் காலம் நிறைவுற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

(க105)

# பௌத்த, இந்து ஒற்றுமை சர்வதேச மாநாடு யாழில்

## துறவிகளின் பங்கேற்புடன் நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், ஜன.30
இலங்கை, இந்தியா, சுவிஸ் போன்ற நாடுகளின் பௌத்த, இந்து துறவிகள் கலந்துகொள்ளும், பௌத்த-இந்து ஒற்றுமைக்கான சர்வதேச மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாணத்திலுள்ள பிள்ளையார் இன், விருந்தினர் விடுதியில் இன்று காலை 10 மணிக்கு இந்த மாநாடு ஆரம்பமாகவுள்ளது.

இலங்கையின் அதியுயர் பீடமான அமரபுர மகாநிக்காய தர்மகித்த நிக்காய மகாநாயக்கர் வணக்கத்துக்குரிய திருகோணமலை ஆனந்த மகா நாகினிஸ்ரீயும், நல்லை ஆதீனக் குரு முதல்வர், அதி வணக்கத்துக்குரிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், வணக்கத்துக்குரிய பென்கமுவ நாயக்க நாகிமி, வண. பேராசிரியர் அகலகட ஸ்ரீ சுமணநாகினி, அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவர் ஜகத் சுமதிபால, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வண.மகாசந்நிதானம், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி, ஆறு.திருமுருகன், சுவாமி சிதாகானந்தா சரஸ்வதி சின்மயாமிசன், சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் பிரமஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக்குருக்கள், சுவிஸ் ஸ்ரீவிஸ்னு துர்க்கை அம்மன் ஆலயத்தைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய சரவணபவானந்தன் சுவாமிகள், யாழ்ப்பாணம், இந்து சமயப் பேரவையின் தலைவர் சிவஸ்ரீ க.சக்திகிரீவன், சிவஸ்ரீ ப. சிவலோகநாத தேசிகர் ஆகியோரின் ஆசிகளுடன் இந்த மாநாடு இடம்பெறவுள்ளது.
முன்னதாக காலை 8.30 மணியளவில் நல்லை ஆதீனத்திலிருந்து பௌத்த-இந்து சுவாமிமார்களும், பிரமுகர்களும், பௌத்த இந்து கலாசார முறைப்படி நல்லூர் கந்த சுவாமி ஆலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு விசேட பூசைகள் இடம்பெறும். தொடர்ந்து 10 மணிக்கு யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில் உள்ள பிள்ளையார் இன் விருந்தினர் விடுதியில் மாநாடு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரக கொன்சியூலர் ஜெனரல் எஸ். பாலச்சந்திரன், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ் ஆகியோர் இணைந்து இந்த மாநாட்டை ஆரம்பித்து வைப்பர் என்றும்-அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## இருவரது நிதியில் 56 பேருக்கு உதவி



முல்லைத்தீவு,ஜன.30
விசுவமடு மேற்கு நெத்தலியாறுக் கிராமத்தில், கிராம அமைப்புகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக 56 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் மற்றும் உடைகள் வழங்கப்பட்டன.
கற்றல் உபகரணங்களுக்கான நிதியை மானிப்பாயைச் சேர்ந்த ப. விநாயகமூர்த்திக்குருக்களும், உடைகளுக்கான நிதியை கொழும்பைச் சேர்ந்த கே. தியாகராஜாவும் வழங்கினர்.ப.விநாயகமூர்த்திக் குருக்கள், வி. மதிமுகன் குருக்கள், கல்வி பொருளாதார அபிவிருத்தி அமைப்பின் தலைவர் ஆர். தயாபரன், செயற்பாட்டாளர்கள் ப. சிறீதரன், ம. பிரியந்தன் ஆகியோருடன், கிராம உத்தியோகத்தர் வி. கோணேஸ்வரன், கிராம அபிவிருத்திச் சங்கப் பிர திநிதி பெ. வசந்தன், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதி சந்திரன் வளர்மதிஆகியோர்கலந்துகொண்டுமாணவர்களுக்கான பொருள்களை வழங்கினர். (க-222)

## பெருந்திருவிழா

சாவகச்சேரி,ஜன.30
சாவகச்சேரி வாரியப்ப சிவன் கோவில் பெருந்திருவிழா கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.
தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் திருவி ழாக்களில் எதிர்வரும் ஐந்தாம் திகதி புத ன்கிழமை தேர்த் திருவிழாவும். மறுநாள் வியாழ க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (க-9)

## மருத்துவ முகாம்





வவுனியா,ஜன.30
தொற்றா நோய்களுக்கான நடமாடும் மருத்துவ முகாம் வவுனியா திருநாவற்குளம் கிராமத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது.
வவுனியா நகரசபை உறுப்பினரான சுந்தரலிங்கம் காண்டீபனின் ஒழுங்கமைப்பில் வவுனியா பொது மருத்துவமனை மருத்துவர் பிரசன்னா தலைமையிலான குழுவினரால் மருத்துவமுகாம் முன்னெடுக்கப்பட்டது
மருத்துவ முகாமில் நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு தொற்றா நோய்கள் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொண்டுபயன்பெற்றனர்.
மருத்துவ முகாமில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.சோதிநாதன், சந்திரேஸ்வரன் ரவி, ஆற்றலரசி குழும உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஜ-110)

## தொடர்கின்றது கஞ்சா வேட்டை



வவுனியா, ஜன. 30
வவுனியா, கனகராயன்குளம் புதூர் சந்தியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நடத்திய சோதனையில் 5 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.
அதைக் கொண்டுசென்றனர் என்ற குற்றச்சாட்டில் தென்பகுதியைச் சேர்ந்தவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குரியபஸ்ஸில்கடந்ததிங்கட்கிழமை இரவு கடத்தியபோது மூவரும் சிக்கினர்.
இதேபோன்று, பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குரிய பஸ்ஸிலும் 2 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.
அதைக்கொண்டுசென்றனர் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.
இதேவேளை, கஞ்சாகொண்டுசென்ற குற்றச்சாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமையும் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (து-18,160)

## ருத்ர யாகம்

யாழ்ப்பாணம்,ஜன.30
உலகத்தில் உள்ள அனைத்து மக்களின் சுபீட்சத்துக்காக இலங்கையில் முதல் முறையாக ஸ்ரீ மஹா ருத்ர யாகம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் நல்லூர் சிவன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாண சிவனடியார்கள் மற்றும் சைவ ஆர்வலர்களின் ஏற்பாட்டில் நடைபெறும் யாகத்தில் வேத பாராயணங்கள் மற்றும் பல்வேறுபட்ட நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.
பொதுமக்கள் மற்றும் சைவ தமிழ் ஆர்வலர்களை யாகத்தில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (க-111)

## யாழுக்கு...

அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இ.அங்கஜன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு சபையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பின் பின்னரே இவ்வாறு தெரிவித்தார்.

“இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு அரசுடன் பேசி வருகின்றேன் . இதுமட்டுமன்றி, நிரந்தர நியமனம் கோரும் சுகாதாரத் தொண்டர்களுக்கும் நியமனம் வழங்குவதற்கு வடக்கு ஆளுநருடன் இணைந்து நடவடிக்கை எடுக்கவுள்ளேன்” என்றும் தெரிவித்தார். (த-111)

## சப்ரிகம...

ஆட்சி மாற்றத்தின் பின்னர் முதல் தடவையாக யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள நிறைவான கிராமம் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்மொழிவுகள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டம் தொடர்பில் 2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி வெளியிடப்பட்ட 1/2019 சுற்ற றிக்கையில், ஒவ்வொரு கிராமத்திலும் மக்கள் கூட்டங்களை பிரதேச செயலக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் நடத்தவேண்டும். மக்கள் முன்மொழி யும் முன்னுரிமை அடிப்படையில் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளரிடம் திட்டங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். பிரதேச செயலர், சகலவற்றையும் திட்ட முன்மொழிவாக மாவட்டச் செயலகத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும். மாவட்டச் செயலகம், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியைப் பெற்று நிதி மற்றும் திட்டமிடல் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு அனுப்பும்.

யாழ்ப்பாணத்தில் இதுவரை மக்களால் முன்மொழியப்பட்ட திட்டங்கள் பலவும், யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் மாற்றப்பட்டுள்ளதுடன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி பெறப்படாமலே நிதி திட்டமிடல் அமைச்சுக்கு, அவரின் கையெழுத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை 700 திட்டங்கள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி பெறாமல் நிதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, நிதி அமைச்சால் அவற்றுக்கான மொத்த ஒதுக்கீடான 900 மில்லியன் ரூபாவில் 20 சதவீதம் விடுவிக்கப்பட்டும் உள்ளது. இவை எல்லாம் நடைபெற்று முடிந்த பின்னரே, நாளை இடம்பெறும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் திட்டங்கள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. (ஒ.5)

## கொரோனாவை எதிர்க்க ...

இது தொடர்பில் மருத்துவர் சத்தியமூர்த்தி மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா பாதிப்பு சீனாவில் நாளுக்குநாள் வலுவடைந்து வருகின்றது. இலங்கையிலும் கொரோனா தொற்றுடன் ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார். இதையடுத்து கொரோனாவை எதிர்கொள்ளும் வகையில் 12 மருந்துவமனைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையும் ஒன்று. வடக்கைப் பொறுத்தவரையில் ஒரே தடவையில் 10 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டது உறுதிசெய்யப்பட்டாலும் நிலமையை திறம்படக் கையாளக்கூடிய வகையில் தயாராக உள்ளோம். சந்தேகத்தின் அடிப்படையில் எவரேனும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டால் 48 மணிநேரத்தில் கொரோனா தொற்றா இல்லையா என்பது தொடர்பில் எம்மால் உறுதிப்படுத்த முடியும். மேலதிக அவசியத் தகவல்கள் ஊடகங்கள் வாயிலாக அறியத்தரப்படும் - என்றார். (ம-105)

## கரைச்சியில்...

அமர்வில் ஆளும் தரப்பு மற்றும் எதிர்தரப்பு உறுப்பினர்களிடையே வாக்குவாதம் முற்றிய நிலையில் அது கைகலப்பில் முடிந்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையால் ஆதனவரி பத்து வீதமாக அறவிடப்பட்டு வருகிறது. இது இலங்கையில் எங்குமில்லாத அளவுக்கு அதிகரித்த வீதமாகும் எனத் தெரிவித்து கடந்த வாரம் கிளிநொச்சி வர்த்தகர் ஒருவர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தார். இதனையடுத்து கரைச்சி பிரதேச சபையின் சமத்துவக் கட்சியினை சேர்ந்த பதினொரு உறுப்பினர்களும், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த இரண்டு உறுப்பினர்களுமாக 13 உறுப்பினர்களும் ஒப்பமிட்டு விசேட சபை அமர்வினைக் கூட்டுமாறு கோரியிருந்தனர்.

இதனையடுத்து நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு விசேட சபை அமர்வு இடம்பெற்றது இதன்போது ஆதனவரியை பத்து வீதத்திலிருந்து நான்கு வீதமாக குறைக்குமாறு எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

ஆனால் ஆளும் தரப்பு உறுப்பினர்கள் தொடர்ச்சியாக ஆதன வரி குறைப்பை மேற்கொள்ள முடியாது என விடாப்பிடியாக இருந்தனர். இந்த நிலையில் ஆதன வரியைக் குறைப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் வாக்கெடுப்புக்கு விடுமாறு சுயேச்சைக்குழு உறுப்பினர்கள் கோரிக்கை விடுக்க அதனை தவிசாளர் ஏற்றுக் கொள்ளவில்லை. வாக்கெடுப்புக்கு விடமுடியாது என திட்டவட்டமாக அறிவித்துவிட்ட நிலையில் பத்து வீதமே ஆதன வரியாக அறிவிடப்படும் என்று தீர்மானிக்க ப் பட்டது. இந்த நிலையில் ஆளும் தரப்பு உறுப்பினர் ஜீவராசா மற்றும் எதிர்த்தரப்பு உறுப்பினர் ரஜனிகாந் ஆகியோருக்கிடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. இதன்போது ஆளும் தரப்பு உறுப்பினர் தனது சொந்த வாகனத்தில் சபை வளாகத்திலிருந்து வெளியேறினார். எனினும் பின்னர் சற்று தாமதித்து மீண்டும் சபை வளாகத்துக்கு வருகைதந்த அந்த ஆளும் கட்சி உறுப்பினர் ‘அம்புலன்ஸை’ வரவழைத்து கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்குச் சென்றுள்ளார்.

இதேவேளை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வர்த்தகரை மூன்றாம் நாள் சென்று சந்தித்த கரைச்சி பிரதேச சபையின் உப தவிசாளர், ஏழு நாள்களுக்குள் ஏற்புடையதும், பொருத்தமானதுமான தீர்வு வழங்கப்படும் என எழுத்து மூலம் அறிவிக்கப்பட்ட நிலையில் உண்ணாவிரதம் கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-214,105,6)

# இலவச முகக்கவசங்களுக்குக் கோரிக்கை

கொழும்பு, ஜன. 30

கொரோனா வைரஸ் தொடர்பான அச்சம் மக்கள் மத்தியில் வலுவாக ஏற்பட்டுள்ள நிலையில், மக்களுக்கு இலவச முகக்கவசங்களை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார் எதிர்கட்சித் தலைவர் சஜித்.

அதேநேரம் நாடாளுமன்றத்துக்கு 5000 முகக்கவசங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரியவருகிறது. (ம)

# கொரோனாவால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு முழு உடல்நலம்

கொழும்பு, ஜன. 30

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கம் தொடர்பாக இனங்காணப்பட்ட 43 வயதான சீனப் பெண், சிகிச்சையைத் தொடர்ந்து முழுமையாக குணமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஐ.டி.எச். வைத்தியசாலை நிர்வாகம் நேற்று மாலை இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட குறித்த சீனப் பெண் தவிர, மேலும் 7 பேர் அங்கொடை தொற்றுநோயியல் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தனர். இந்நிலையில் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட சீனப்பெண் சிகிச்சைகளை அடுத்து குணமடைந்துள்ளதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை நாட்டின் பாரிய திட்டங்களில் பணிபுரியும் சீன பிரஜைகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதா என்பதை பரிசோதிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. குறித்த பெண் சேர்க்கப்பட்டிருந்த மருத்துவமனையில் இருந்து நூற்றுக் கணக்கான நோயாளிகள் அச்சம் காரணமாக ஏற்கனவே வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம.105)

## மரண அறிவித்தல்



பிறப்பு 06 . 02 . 1950

இறப்பு 29 . 01 . 2020

### செல்வி திருநாவுக்கரசு பாமினிதேவி

அத்தியடியைப் பிறப்பிடமாகவும் கைலாசபிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி திருநாவுக்கரசு பாமினிதேவி நேற்று (29.01.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் திருநாவுக்கரசு அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும் கனகரட்ணம் தர்மரட்ணம், தவரட்ணம், தவமணிதேவி, அரசரட்ணம், ஈஸ்வரகாந்தா, யசோதாதேவி ஆகியோரின் சகோதரியும் பத்மாவதி, காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, யோகராணி, செல்வதி மற்றும் மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் சச்சிதானந்தசிவம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(30.01.2020)** வியாழக்கிழமை பி.ப **3.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.22, கைலாசபிள்ளையார் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்**

**தகவல்:**
**ஈசன் (தம்பி)**

# மதுபோதையில் இ.போ.ச சாரதி பயணிகள் நடுவழியில் அந்தரிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ்ப்பாணத்தில் இருந்து அக்கரைப்பற்றுநோக்கி நேற்று இரவு சென்றுகொண்டிருந்த அரச பேருந்தைச் சோதனை செய்ததில் அதன் சாரதி மது போதையில் இருந்தது கண்டறியப்பட்டது. இதையடுத்து பயணிகள் அனைவரும் இன்னொரு பேருந்தில் பயணிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்தச் சம்பவம் நேற்று இரவு 8.15 மணியளவில் யாழ்ப்பாணம் நாவற்குழிப் பகுதியில் இடம்பெற்றது.

மட்டுமல்லாமல் 2 பியர் ரின்களும் ஒரு சாராயப் போத்தலும் சாரதியின் இருக்கையின் கீழிருந்து மீட்கப்பட்டன. சாரதி கடுமையாக எச்சரிக்கப்பட்டதுடன் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக கோண்டாவில்சாலை முகமையாளருக்கு அறிவிக்கப்பட்டது. மாற்று ஏற்பாடாக வரவழைக்கப்பட்ட பேருந்து இரவு 9 மணியளவில் புறப்பட்டது. (ம)

## மூளையை இளமையாக்க
# சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | | | | | 9 | |
| 4 | 2 | | 3 | | | 5 | | |
| | 5 | 3 | | | 9 | 1 | 7 | |
| | 9 | | | 2 | | | | |
| | | 5 | 1 | | 6 | 9 | | |
| | | | | 7 | | | 8 | |
| | 3 | 4 | 7 | | | | | |
| | | 7 | | | 5 | | 4 | 2 |
| | 6 | 2 | 4 | | | 7 | | |

**முந்தைய விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | 8 | 6 | 5 | 4 | 2 | 9 | 3 |
| 4 | 2 | 9 | 3 | 1 | 7 | 5 | 6 | 8 |
| 6 | 5 | 3 | 2 | 8 | 9 | 1 | 7 | 4 |
| 7 | 9 | 6 | 5 | 2 | 8 | 4 | 3 | 1 |
| 3 | 8 | 5 | 1 | 4 | 6 | 9 | 2 | 7 |
| 2 | 4 | 1 | 9 | 7 | 3 | 6 | 8 | 5 |
| 5 | 3 | 4 | 7 | 9 | 2 | 8 | 1 | 6 |
| 9 | 1 | 7 | 8 | 6 | 5 | 3 | 4 | 2 |
| 8 | 6 | 2 | 4 | 3 | 1 | 7 | 5 | 9 |

சுடோக்கு என்பது 9x9 என அமைந்த 81 சிறு கட்டங்கள் அடங்கிய ஒரு பெரிய கட்டத்தில் குறிப்பிட்ட விதிகளுடன், ஒரு குறிப்பிட்ட பண்பு பொருந்து மாறு எண்களைக் கொண்டு விளையாடும் ஒரு புதிர் விளையாட்டு. தற்போது உலகெங்கும் மிகவும் விரும்பி விளையாடும் ஓர் எண் விளையாட்டாக உள்ளது.

## குடும்பத்தோடு பார்க்கக் கூடிய படம்
# ‘வானம் கொட்டட்டும்’




இயக்குநர் தனா இயக்கத்தில் விக்ரம்பிரபு, மடோனா, ஐஸ்வர்யா ராஜேஷ் நடிக்கும் திரைப்படம் ‘வானம் கொட்டட்டும்’. இந்தத் திரைப்படத்தை இயக்குநரும் தயாரிப்பாளருமான மணிரத்னம் தயாரித்துள்ளார்.

இந்தத் திரைப்படத்தில் ராதிகா மற்றும் சரத் குமார் இருவரும் கணவன் மனைவி கதாபாத்திரத்தில் நடித்திருப்பது இந்தப் படத்துக்கு ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது.

இந்தப் படத்தில் விக்ரம் பிரபு, ஐஸ்வர்யா ராஜேஷ், மடோனா செபாஸ்டியன், சரத்குமார், ராதிகா, சாந்தனு, வேலையில்லா பட்டதாரி படத்தில் நடித்த அமிதாஷ் பிரேதன் ஆகியோர் நடித்துள்ளனர். இந்தப் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார் சித் ஸ்ரீராம்.

மேலும் பெப்ரவரி 7ஆம் திகதி இந்தத் திரைப்படம் திரைக்கு வரும் என்றும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாகரீக கோமாளி

தான் வாழ எடுக்கும்
முயற்சிகளை விட அடுத்தவரை
வாழவிடாமல் செய்வதற்கே
மனிதன் அதிகமாக அறிவை
பயன்படுத்துகிறான்.
உலகின் மிக அசிங்கமான முகம்
**பொறாமை குணம்**
கொண்டவனின் முகம்.

படிக்காதவன்™ @Sabarish_

சட்டமெல்லாம்
சனங்களுக்குத்தானே தவிர
அதிகாரத்தில்
இருப்பவர்களுக்கு இல்ல...

ஜோக்கர்... @ItsJokker

உலகத்தில் குணப்படுத்த
முடியாத வியாதிகளில்
முதன்மையானது.
“சந்தேகமும்
சர்க்கரை வியாதியும்”

கடைநிலை ஊழியன்

மாத கடைசி என்பது மாத
சம்பளம்
வாங்குபவர்களுக்கு மட்டுமே
தெரியும் !!







# சந்தேகம் கூடாது

ஏதேனும் பெரும் விளைவை ஏற்படுத்தக் கூடிய, முக்கியத்துவம் வாய்ந்த ஒரு செய்தி உங்களுக்குக் கிடைத்தால் அதை ஏற்றுக்கொள்ளுமுன் அச்செய்தியைக் கொண்டு வருபவன் எப்படிப்பட்டவன் என்பதைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

சந்தேகங்களால் வாழ்வை தொலைத்தவர்கள்தான் எத்தனை எத்தனை. சந்தேகங்களால் துண்டாடப்பட்ட நட்புகள் தான் எத்தனை எத்தனை. சந்தேகங்களால் பிரிந்துவிட்ட தம்பதிகள்தான் எத்தனை எத்தனை பேர் சந்தேகத்தால் உடைந்த குடும்பங்கள்தான் எத்தனை எத்தனை. இந்த சந்தேகங்களின் உண்மைத்தன்மையை உரசிப்பார்த்தால் பெரும்பாலும் எல்லாம் வெறும் ஊகங்களாகவே இருந்திருக்கும். எதுவும் உண்மையாக இருந்திருக்காது.

பொதுவாகவே சந்தேகங்கொள்வது தடுக்கப்படவில்லை. மாறாக மிக அதிகமாக சந்தேகங்கொள்வதும் எல்லாவிதமான சந்தேகங்களைப் பின்பற்றுவதும்தான் தடுக்கப்பட்டுள்ளன.

காரணம் இதுதான்: அதாவது, அடுத்தவரைக் குறித்து எவ்வித காரண காரியமும் இன்றி சந்தேகப்படுவது அல்லது மற்றவர்களைப்பற்றி கருத்துக் கூறும்போது, எப்போதும் தவறான சந்தேகத்திலிருந்தே ஆரம்பிப்பது, அல்லது வெளிப்படையாக அவர்களின் நிலை, அவர்கள் நல்லவர்கள்; கண்ணியமானவர்கள் என்று காட்டுகிறதோ அவர்களின் விஷயத்தில் தவறாகச் சந்தேகிப்பது.

இதேபோன்று ஒரு மனிதனுடைய சொல்லிலோ செயலிலோ நன்மைக்கும் தீமைக்கும் சமவாய்ப்பு இருக்கும் போது, நாம் வெறும் சந்தேகத்தின் அடிப்படையில் அவனைத் தீய்வன் என்றே கருதுவதும் பாவச்செயலாகும்.

அவ்வாறே யாரேனும் ஒருவர் ஒரு செய்தியை நம்மிடம் கூறினால் கண்ணை மூடிக்கொண்டு உடனே அதை நம்பிவிடவும் கூடாது. உடனடியாக அந்தச் செய்திக்குக் கை கால் வைத்து வர்ணம் தீட்டி பூசி மொழுகி அடுத்தவரிடம் அளந்துவிடக் கூடாது. அதன் உண்மைத் தன்மையை தீர விசாரிக்க வேண்டும்.

ஏதேனும் பெரும் விளைவை ஏற்படுத்தக் கூடிய, முக்கியத்துவம் வாய்ந்த ஒரு செய்தி உங்களுக்குக் கிடைத்தால் அதை ஏற்றுக்கொள்ளுமுன் அச்செய்தியைக் கொண்டு வருபவன் எப்படிப்பட்டவன் என்பதைப் பார்த்துக்கொள்ளுங்கள். அவன் கொடுத்த செய்திக்கு ஏற்ப செயல்படுவதற்குமுன் உண்மை நிலைவரம் என்ன என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.



சில சமயம் வீண் வாதங்களைத் தவிர்க்க ‘முயலுக்கு மூன்று கால்’ என்று ஏற்றுக் கொண்டால் போயிற்று. நேர விரயம் தவிர்க்கப்படும்.

நின்று ரசிக்க வேண்டியவை கடகடவெனக் கடந்து விடுகின்றன ரயில் பயணத்திலும் வாழ்க்கையிலும்!

# கொரோனா வைரஸ்

**கரோனா வைரஸ் என்றால் என்ன?**


கரோனா வைரஸ் பாதித்தால் சாதாரண சளி முதல் சார்ஸ், மெர்ஸ், நிமோனியா போன்ற தீவிர நோய்கள் ஏற்படும்

**தீவிர அறிகுறிகள்**

- அதிக காய்ச்சல் (100.4 பாரன்ஹிட்)
- நிமோனியா
- கிட்னி செயலிழப்பு
- மரணம்

**பரவும் முறைகள்**

- பாதிக்கப்பட்ட நபரின் இருமல் அல்லது தும்மல் மூலம் பரவும்
- பாதிக்கப்பட்ட பொருள்களை தொடுவதன் மூலம் பரவும்



## கொரோனாவை...

வெளியிட்டுள்ளார் ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் .

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

'இந்தியாவின் பூனே நகரிலுள்ள ஆய்வு கூடம்போல் முறையாக ஆய்வு செய்வதற்கு தேவையான வசதிகளை கொண்டுள்ள மருத்துவ ஆய்வுக்கூடங்களுக்கு நோயாளிகளின் மாதிரிகள் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

நோய் அறிகுறி தென்படும் ஒருவர், 'பனடோல்' வில்லையை பருகிவிட்டுவந்தால், வெப்பநிலையை அளவிடும் பரிசோதனையில் அறிகுறிகள் தென்படாது என வைத்திய நிபுணர் ஒருவர் என்னிடம் தெரிவித்தார். எனவேதான், முறையான அணுகுமுறையை பின்பற்றுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

சீனாவிலுள்ள இலங்கைப் பிரஜைகளை நாட்டுக்கு அழைத்துவந்து இங்கு பிரசோதனைக்குட்படுத்துவதா, அவ்வாறு இல்லாவிட்டால் சீனாவுடன் கலந்துரையாடி அந்நாட்டிலுள்ள இரசாயன ஆய்வுக்கூடங்களில் பரிசோதனை நடத்தி 'கொரோனோ' தொற்றுக்கு இலக்காகவில்லை என்பதை கண்டறிவதா என்பது தொடர்பில் அரசாங்கம் தீர்மானமொன்றை எடுக்கவேண்டும்' - என்றார். (ம)

## இராணுவம்...

மனையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நாகர்கோவிலைச் சேர்ந்த இராசரட்ணம் ரதீஸ்வரன் (வயது-46), பத்மநாதன் கியந்தன் (வயது-25) இருவருமே இராணுவத்தால் தாக்கப்பட்டுள்ளனர். உடம்பில் கண்டல் காயங்களும், எலும்பு வெடிப்புக்களும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கைகளாலும், கொட்டன்களாலும், துப்பாக்கியாலும் 8 தொடக்கம் 10 இராணுவத்தினர் இணைந்து தாக்கியதாகப் பாதிக்கப்பட்டவர்கள் விசாரணைகளில் தெரிவித்துள்ளனர்.

பொங்கல் அன்று நாகர்கோவிலில் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதன் பின்னர் அந்தப் பகுதி இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டது. தேடுதல் நடத்தப்பட்டது. இந்தத் தேடுதல் கடந்த இரண்டு வாரமாகத் தொடர்கின்றது. கடந்த 26ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் நாகர்கோவிலில் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது. இதன்போது ரதீஸ்வரன் மற்றும் கியந்தன் இருவரும் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டனர். அவர்கள் இராணுவ வாகனத்தில் கைவிலங்குடன் ஏற்றப்பட்டனர்.


நீண்ட தூரப் பயணத்தின் பின்னர் இருவரும் இராணுவ முகாம் ஒன்றுக்கு கொண்டுசெல்லப்பட்டனர். அங்கு வைத்து சுமார் அரை மணி நேரம் தொடர்ச்சி யாக படையினரால் மூர்க்கமாகத் தாக்கப்பட்டுள்ளனர் என்று விசாரணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ,5,26)

## விபத்தில்...

இறப்புச் சம்பவித்துள்ளது.

மோட்டார்சைக்கிளில் பயணித்த விளக்கு வைத்தகுளம் பகுதியை சேர்ந்த பாணுஜன் (வயது -19) என்றமாணவர் சம்பவ இடத்திலயே சாவடைந்துள்ளார். இவர் ஓமந்தை மத்திய கல்லூரியில் உயர்தரம் கல்வி கற்றுவருகிறார். ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-110)

## மரண அறிவித்தல்



### பரமநாதன் திருநீலகண்டன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பரமநாதன் திருநீலகண்டன் கடந்த 26.01.2020 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பண்டிதர் வேதநாயகத்தின் பேரனும் ஆசிரியர்களான பரமநாதன்-திலகவதி தம்பதிகளின் ஒரே மகனும் நீலாம்பிகையின் பெறா மகனும் பத்மாவின் கணவரும் ஹேமா, யசிதரன் ஆகியோரின் தந்தையும் மகாலிங்கம், சரோஜினி, தர்மவர்த்தனி ஆகியோரின் சகோதரனும் பாரதி, தயாநிதி ஆகியோரின் பெறாமகனும் இரகுநாதன், கோபாலசுந்தரம் ஆகியோரின் மருமகனும் பலானி, உமாபதி, கணேசா, கந்தா, சுபாசினி, உருத்திரா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2020) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பித்து மு.ப 10.00 மணிக்கு பூதவுடல் தகனத்திற்காக சித்துப்பாத்தி இந்துமயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: குடும்பத்தினர்

## செரண்டிப் சிறுவர் இல்ல நுண்கலைக் கல்லூரியில் நுண்கலை கற்பிக்க ஆசிரியர்கள் தேவை

முல்லைத்தீவு மாமூலை கிருஷ்ணர் கோவில் வளாகத்தில் **செரண்டிப் சிறுவர் இல்லத்தினால்** நடத்தப்பட்டுக்கொண்டிருக்கும் நுண்கலைக் கல்லூரிக்கு நுண்கலை கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவைப்படுவதால் தகுதியுள்ளவர்கள் நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தங்கள் விண்ணப்பங்களை **02.02.2020 ஞாயிற்றுக்கிழமைக்கு** முன்னதாக பதிவு செய்யலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

**பாடங்கள்**

* பரதநாட்டியம் * கர்நாடக சங்கீதம் * மிருதங்கம் * வயலின்

**தொடர்பு - 077 557 1950**

## மரண அறிவித்தல்

தோற்றம்
04
...
06
...
1946



மறைவு
29
...
01
...
2020

### திருமதி ஆறுமுகம் கமலேஸ்வரி
(தாவடி)

முருகமூர்த்தி கோவிலடி, தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் கமலேஸ்வரி நேற்று **(29.01.2020)** புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்ற சரவணமுத்து - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புச் சகோதரியும் குமாரசுவாமி, சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரதீபன் (யாழ் மாநகர சபை), பிருந்தாபன் (ஆசிரியர்- யாழ்/ இந்துக் கல்லூரி), பிரகலாதன்(பிரான்ஸ்), பிரவீந்தன் (லண்டன்), பிரசாந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கேமளா, ஜனனி, தர்மினி, சுபாஜினி, அனுஷியா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், றபீசன், றாகீசன், றணுயன், யருசன், ஆரோன், அக்சயன், றாகவி, ஆருஸ், ஈஸ்வரி, ஈழவன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் **(02.02.2020)** ஞாயிற்றுக் கிழமை பகல் **10** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**இல.22, முருகமூர்த்தி கோவிலடி,
பத்தானை வீதி, தாவடி தெற்கு, கொக்குவில்.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

**தொடர்பு:- 021 221 3760, 077 255 0807**

## மரண அறிவித்தல்

பிறப்பு
09
.
05
.
1944



இறப்பு
27
.
01
.
2020

### B.A. ராஜேந்திரா
(ஓய்வுபெற்ற வவுனியா மக்கள் வங்கி முகாமையாளர்)

கரவெட்டியை பிறப்பிடமாகவும் , இல.185, குட்செட் வீதி, வவுனியாவை வதிவிட மாகவும் கொண்ட B.A. ராஜேந்திரா (ஓய்வுபெற்ற வவுனியா மக்கள் வங்கி முகாமையாளர்) 27.01.2020 அன்று காலமானார்.

அன்னார் பஸ்தியாம்பிள்ளை, திருமதி சிசிலியா தம்பதிகளின் அன்பு மகனும், பிரான்சிஷ் யோசேப், திருமதி யோகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற திருமதி லூர்த்தம்மாவின் கணவரும் காலஞ்சென்ற திருமதி. லலிதா அரியநாயகம் மற்றும் காலஞ்சென்ற பிலிப். தர்மநாயகம் ஆகியோரின் அன்புச்சகோதரரும், திலிப்குமார், திசோகுமார், சுகிலன் ஆகியோரின் தந்தையும் றுசானி, வனஜலக்ஷ்மி, ஷாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.01.2020) வியாழக்கிழமை மாலை மூன்று மணிக்கு வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இறம்பைக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## இராணுவத்தைக்...

நடத்தினர் என்று தெரிவித்து அந்தப் பகுதி சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. பகுதி பகுதியாக அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் 8 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் திருமதி நளினி சுபாஸ்கரன் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டனர். இளைஞர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகியி ருந்தார்.

பரமநாதன் ஐங்கரன் என்பவரைத் தேடிய பாதுகாப்புத் தரப்பினர் அவரது உறவினர்கள், நண்பர்கள் என்று 8 பேரைக் கைது செய்தனர். இதற்கிடையில் இரண்டு நாள்களுக்கு முன்னர் ஐங்கரன் நகர்த்தல் பத்திரம் ஊடாக நீதிமன்றில் சரணடைய விரும்புவதாகத் தெரிவித்துள்ளார். பொலிஸார் அவ்வாறு ஒரு நபரைத் தேடவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

வழக்கின்போது யாரைத் தேடுகின்றீர்கள் என்று பொலிஸாரிடம் சட்டத்தரணி கேட்டபோது, பெயர் தெரியவில்லை என்று கூறினர். "இவ்வளவு காலமாக பெயர் தெரியாமலா தேடுகின்றீர்கள், . இராணுவத்துக்குப் பயந்து வெட்கமில்லாமல் பொலிஸ் செயற்படுகின்றது" என்று இதன்போது ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

ஐங்கரன் நீதிமன்றில் நேரடியாகச் சரணடைந்தால், தம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்பதால்தான் அவரைத் தேடவில்லை என்று பொலிஸார் கூறுகின்றனர் என்பதையும் அவர் மன்றின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

கைது செய்யப்பட்டவர்களில் இருவர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களைத் தாக்கிய இராணுவத்தை ஏன் கைது செய்யவில்லை என்று பொலிஸாரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு " இராணுவத்தினர் மீது அவர்கள் தாக்குதல் நடத்தியதால் இராணுவத்தினர் இருவரும் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர்" பொலிஸார் பதிலளித்தனர். அப்படியானால் எந்த மருத்துவமனையில், எந்த விடுதியில் அவர்கள் சிகிச்சை பெறுகின்றனர் என்று மீளக் கேள்வி எழுப்பிய போது பொலிஸாரால் உரிய பதிலைச் சொல்ல முடியவில்லை. அவர்கள் தடுமாறினர்.

ஆயுதம் தரித்த இராணுவத்தினர், ஆயுதம் இல்லாத இளைஞர்களை அடிப்பது வெட்கக்கேடான விடயம் என்பதையும் சட்டத்தரணி சுமந்திரன் தெளிவுபடுத்தினார்.

நீண்ட நேர வாதத்தின் பின்னர், எட்டு இளைஞர்களுக்கும் பிணை வழங்கப்பட்டது. தலா 5 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், ஒரு லட்சம் ரூபா ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டனர்.

(ம-ஒ,5,26)


## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 25 02 1927



திதி - 30.01.2020

ஆண்டவன் அடியில் 09 02 2019

அம்மா
அன்பின் பிறப்பிடம்
அகிலத்தின் முதலிடம்
அணைப்பதில் தனியிடம் - என்றும்
எமக்குப் புகலிடம்

நீங்களில்லா பூமியிது பேரிருளாய்த் தோன்றுதம்மா
நாங்கள் போகும் பாதையிலே ஒரு சூரியனாய் வாருமம்மா
நீங்களில்லா எம் குடும்பம் வேதனையால் வாடுதம்மா - எம்
வேதனையைப் போக்க பல சாதனைகள் காட்டுமம்மா

அன்பு என்னும் கூட்டினிலே எம்மை அழகாக வளர்த்தீர்கள்
அனைவரும் பாராட்டும் ஒரு குடும்பமாக அணைத்தீர்கள்
குடையாய் நின்று எங்களைக் காத்தீர்கள் அம்மா இன்று தங்கு
தடையற்ற தங்கள் தயவினால்
தரணியில் வாழ்கின்றோமம்மா

ஐயாவை, பெரிய அக்காவை, அண்ணாவைத் தேடி சென்றீர்கள்
அம்மா - எங்கள்
ஐம்புலன்களும் உங்களை நாடியே சென்றதம்மா - நீங்கள்
எந்நாளும் பாடுகின்ற இனிமையான பாடல்வரிகள்
இங்கு காற்றின் மொழியாய் வந்து எம் காதில் இசைக்குதம்மா!

வருடங்கள் எத்தனைதான் தாண்டிப் போனாலும் - எம்
வருத்தங்கள் ஒருநாளும் தாழ்ந்து போகாதம்மா - எங்கள்
நிலைமைகள் எங்கெங்கோ அழைத்துச் சென்றாலும் - உங்கள்
நினைவுகள் எங்களை அழைக்க மறக்காதம்மா

யாழ் திருநெல்வேலி பத்திரகாளி
அம்மன் கோவிலடியைப்
பிறப்பிடமாகவும் கொழும்பு
வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட

### திருமதி மனோன்மணி நாகலிங்கம்
(முன்னாள் ஆசிரியை)

உங்கள் ஆசிகளை வேண்டுகின்றோம்
"ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்"

என்றும் தங்கள் அன்பு மறவாத குடும்பத்தினர்
"பெற்றோர் அகம்" கொழும்பு 06

## மரண அறிவித்தல்

பிறப்பு 18 . 03 . 1942



இறப்பு 29 . 01 . 2020

### ஜோசப் சிறில்
(ஓய்வுநிலை டிப்போ அதிகாரி - இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை)

தேவாலய வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் தூய அந்தோனியார் வீதி, பருத்தித் துறையை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் சிறில் (ஓய்வு நிலை டிப்போ அதிகாரி - இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை) நேற்று (29.01.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற டானியல் ஜோசப் - மரியம்மா தம்பதிகளின் மகனும் கொலட் சிறிலின் (இளைப்பாறிய ஆசிரியர் - யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம்) அன்புக் கணவரும் , ஏஞ்சலா சுகந்தினி (முன்னாள் ஊழியர், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், யாழ் பிராந்தியம், நோர்வே), ஜோசப்பின் சர்மினி (வேல்ஸ்), ஜெரோம் பிராங்லின் (உதவி முகாமையாளர், செலான் வங்கி - சுன்னாகம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் பெனடிற் (நோர்வே) , ராஜ்குமார் (வேல்ஸ்), சோபிகா (செலான்வங்கி , யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும் துவாரகா, தரணிகா, ஹரிஸ், பிஜோன், ஜோயல், சஞ்சனா, ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற பேனாட், றேமன், மற்றும் கிறிஸ்ரின் புஸ்பம், விக்டோரியா, செல்வரட்ணம், குணரட்ணம், லில்லி, சாள்ஸ் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் புனித அந்தோனியார் வீதி பருத்தித்துறையில் அமைந்துள்ள இல்லத்தில் வைக்கப்பட்டு நல்லடக்கத்திருப்பலிக்காக மல்லாகம் தூய புதுமை மாதா ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

**(நல்லடக்கத்திருப்பலி இன்று (30.01.2020) வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.)**

தகவல்: குடும்பத்தினர்
021 205 6015, 077 362 2048, 0776701233

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 08 . 02 . 1940



ஆண்டவன் பிடியில் 31 . 12 . 2019

### அமரர் செல்வநாயகம் பாலச்சந்திரன்
(அரசாங்க கட்டட ஒப்பந்தகாரர் - மானிப்பாய்)

கடந்த 31.12.2019 செவ்வாய்க்கிழமை சிவபதடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு **இன்று (30.01.2020) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் "மானிப்பாய் பிரதேச சபை" மண்டபத்தில்** நடைபெறும் இந்நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்திகேட்டு ஓடோடி வந்து எமக்கு பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும் இறுதிச்சடங்கில் கலந்து அனுதாபத்தை தெரிவித்த அனைவருக்கும் பதாகைகள், துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டும் மலர்வளையங்கள் சாத்தியும் தமது அனுதாபங்களைத் செலுத்திய நல் உள்ளங்களுக்கும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்தவர்களுக்கும் எமக்கு பலவழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"மானியம்பதி"
மானிப்பாய்.

குடும்பத்தினர்.
076 667 9000, 071 847 4286

## JAFFNA COLLEGE

JAFFNA COLLEGE · 1823 · CEYLON · 1872

**Annual Inter House Athletic Meet 2020**

Venue - Bicknell Grounds
Date - Friday, 31st January 2020
Time - 2.00 p.m.

Chief Guests
**Mr. S. Uthayakumar**
*(Provincial Director of Education, Northern Province)*
&
**Dr(Mrs). Nanthini Uthayakumar**

***Alumni, Parents, Friends and well wishers are cordially invited.***

Jaffna College,
Vaddukoddai.

Principal.

### முகக்கவசங்...

சுகாதார அமைச்சு நிர்ணயித்துள்ளது.

2015ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் 142வது பிரிவின் கீழ் மருத்துவ உபகரணங்களின் விலை நிர்ணயம் செய்யக்கூடிய அதிகாரத்தின் பிரகாரம் இந்த நவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், மீள் பாவனைக்கு எடுக்க முடியாத முகக் கவசங்களுக்கு 15 ரூபா கட்டுப்பாட்டு விலையும், மருத்துவ முகக் கவசங்களுக்கு 15 ரூபா கட்டுப்பாட்டு விலையும், என் 95 வகையான முகக் கவசங்களுக்கு 150 ரூபா என்ற கட்டுப்பாட்டு விலையும் நிர்ணியக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (ம-24)

### சீனப்...

சீமன் (வயது -69) என்ற நபரே உயிரிழந்தவராவார். இது குறித்து பதுளை அரசினர் மருத்துவமனை பிரதி மருத்துவ அதிகாரி ரன்ஜித் அமரகோனிடம் வினவியபோது, 'கடந்த 27ஆம் திகதி மேற்படிநபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இவரது உயிரிழப்பை அடுத்து எவரும் பீதியடையத் தேவையில்லை. உடற்கூற்றுப் பரிசோதனை முடிவுகள் அறிவிக்கப்படும்'- என்றார். (ம)



காரைநகர் பயிரிக்கூடல் அருள்மிகு
சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
**மஹோற்சவ விஞ்ஞாபனம்**
**2020**

முருகன் அடியார்களே!

மஹோற்சவக்குரு:
சிவஸ்ரீ. கு. சண்முகராஜக்குருக்கள் [ஆலயகுரு]
கொடியேற்றம் காலை 10.30 மணிக்கு
இடம்பெறும்

| | | |
|---|---|---|
| 30.01.2020 | வியாழக்கிழமை | சாந்திக்கிரியைகள் |
| 31.01.2020 | வெள்ளிக்கிழமை | கொடியேற்றம் |
| 06.02.2020 | வியாழக்கிழமை | வேட்டைத்திருவிழா |
| 07.02.2020 | வெள்ளிக்கிழமை | பெரிய சப்பறம் |
| 08.02.2020 | சனிக்கிழமை | தேர்த்திருவிழா |
| 09.02.2020 | ஞாயிற்றுக்கிழமை | தீர்த்தம், கொடியிறக்கம் |
| 10.02.2020 | திங்கட்கிழமை | பிராயச்சித்த அபிஷேகம் |
| 14.02.2020 | வெள்ளிக்கிழமை | வைரவர் பொங்கல் |

திருவிழா உபயகாரர்கள்

**தேவை** யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமும், திறமையும் உள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர் (T.O) தேவை.
**தொடர்பு: 0775925371, 0763165730**
E-mail- careers@decon.lk

**வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் **அபூர்வமாரி** ஆடைத் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள

**01) பெண் தையலாளர்கள் (முழு நேரம்)**
**02) ஆண் தையலாளர்கள் (பகுதி நேரம்) தேவை.**

உங்களது சுயவிபரக்கோவை. மேலதிக விபரங்களை
**applicationAGI@outlook.com**
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு
**06.02.2020**க்கு முன்னர்
அனுப்பி வைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு:-
**021 223 2581, 077 661 7708**

## மின்னியலாளர்களுக்கு தொழில் உரிமம் வழங்குதல் தொடர்பான மாவட்ட கருத்தரங்குகள்

| மட்டக்களப்பு | யாழ்ப்பாணம் | புத்தளம் |
|---|---|---|
| 2020 பெப்ரவரி | 2020 பெப்ரவரி | 2020 பெப்ரவரி |
| 06 | 18 | 23 |
| பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தில் | யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் | நகரசபை மண்டபத்தில் |




மின்சாரதுறையில் மின்னியலாளர்களாக பணிபுரியும் உங்களுக்கும் தொழில் ரீதியான அங்கீகாரம் கிடைக்கும் வகையில் உரிம முறையொன்று (லைசன்) நடைமுறைக்கு வரவுள்ளது. இது தொடர்பான இலவச மாவட்ட மட்ட கருத்தரங்குக்கு அனைத்து மின்னியலாளர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முன்பதிவுகளுக்கு அழைக்கவும் **0770399119**

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு
**மின்சாரத் துறையின் ஒழுங்குறுத்துகை அமைப்பு**

# அஹிம்சையின் தந்தை காந்தி மகான்

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி,
*அகில இலங்கை காந்திசேவா சங்கம்*



## மகாத்மா காந்தியடிகளின் 72ஆவது சிரார்த்த தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

'மகாத்மா' என்ற பெருமைக்கு உரிய ஒருவராக காந்தி அண்ணல் மட்டுமே விளங்குகின்றார். அகிம்சையே ஆயுதங்களில் வலிமையானது; சத்தியமே வாழ்வில் நிலையானது; உயர்வானது என்பதை அனைவருக்கும் உணர்த்தியவர் காந்தியடிகள். பதவிகளை வகிக்காமல் உலக அளவில் புகழ்பெற முடியும் என்று நிரூபித்தவர் அவர். "எனது வாழ்க்கையே எனது செய்தி" என்று கூறும் அவரது வாழ்க்கை வரலாறு எல்லோருக்கும் ஒரு சிறந்த பாடமாக விளங்குகின்றது.

'தேசபிதா'என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் காந்திஜி 1869ஆம் ஆண்டு ஒக்டோபர் 2ஆம் திகதி இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் என்னும் இடத்தில் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் வைத்த பெயர் மோகன்தாஸ் கரம் சந்த் காந்தி என்பதாகும்.

காந்திஜி தனது தொடக்கக் கல்வியை ராஜ்கோட் என்னும் இடத்தில் மேற்கொண்டார். மெட்ரிகுலேஷன் படிப்பில் தேர்ச்சி பெற்ற பின்பு பவநகர் என்னும் இடத்தில் கல்லூரிப் படிப்பைத் தொடங்கினார்.

காந்திஜிக்கு இளமையிலேயே சட்டம் படிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. அதற்காக இங்கிலாந்து செல்ல ஆசைப்பட்டார். காந்திஜியை வெளிநாட்டுக்கு அனுப்ப அவருடைய தாயாருக்கு சிறிதும் மனமில்லை. நிலைமையைப் புரிந்துகொண்ட காந்திஜி தாயாருக்கு "வெளிநாட்டில் அசைவ உணவு சாப்பிட மாட்டேன். மது அருந்த மாட்டேன். வேறு பெண்களுடன் தொடர்பு கொள்ள மாட்டேன்" என்ற மூன்று உறுதிமொழிகளை அளித்தார். அவற்றைக் கடைசி வரை கடைப்பிடித்தார். 1888ஆம் ஆண்டு லண்டன் சென்றார். அங்கு நான்கு வருடங்கள் படித்து "பாரிஸ்டர்"பட்டம் பெற்றார்.

பாரிஸ்டர் பட்டம் பெற்ற காந்திஜி ராஜ்கோட், மும்பை ஆகிய இரு இடங்களில் வக்கீல் தொழிலைச் செய்தார். வியாபாரக் கம்பனி அழைத்ததன் பேரில் தென்னாபிரிக்காவுக்குச் சென்றார். அங்கு வெள்ளையர்கள் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவர்கள் இந்தியர்களை அடிமைகளாக நடத்தனர். அங்கு வாழ்ந்த இந்தியர்களுக்காக காந்திஜி வாதாடினார். எனவே அவரை வெள்ளையர்கள் 'கூலிகளின் வக்கீல்"என்று கேலி செய்தனர்.

> **"அகிம்சை வழிப்போராட்டத்தின் தந்தை என்று போற்றப்படும் காந்திஜி 1948ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் திகதி துப்பாக்கிதாரியின் வன்முறையில் பலியானார். ஆனாலும் அன்னார் பின்பற்றிய அகிம்சை உண்ணா நோன்பு, சத்தியம் போன்றவை இன்றும் நிலைத்து நிற்கின்றன.**

தென்னாபிரிக்காவில் ஒரு முறை ரயிலில் முதல் வகுப்புப் பெட்டியில் காந்தி பயணம் செய்தார். அதே பெட்டியில் ஒரு வெள்ளையனும் பயணம் செய்தான். அவன் காந்தியை இந்தியன் எனத் தெரிந்துகொண்டான். உடனே பெட்டியை விட்டு இறங்கும்படி சொன்னான். காந்திஜி தனது பயணச் சீட்டைக் காட்டி இறங்கமறுத்தார். வெள்ளையன் காந்தியினுடைய பெட்டி படுக்கைகளைத் தூக்கி வெளியே எறிந்தான். அப்போதே வெள்ளையர்களின் நிறவெறியைப் புரிந்துகொண்டார் காந்தி.

ஆங்கில அரசு உப்புக்கு வரி விதித்ததைக் கண்டித்து 1930ஆம் ஆண்டு மார்ச் 12ஆம் திகதி தண்டி என்னும் இடத்தில் உப்பு அள்ள முடிவு செய்தார். அதற்காக தண்டி யாத்திரை மேற்கொண்டார். இதனால் 1930 ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

1940ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தனியாள் போராட்டத்தைத் தொடங்கினார். இதன்படி ஆங்கில அரசின் முயற்சிகளுக்குப் பொருளுதவி செய்யக் கூடாது. ஆள்பலம் சேர்க்கக் கூடாது என்று கூறினார். ஆங்கிலேயே அரசு இந்தியாவை இரண்டாகப் பிரித்தாளும் சூழ்ச்சியைச் செய்தது. இந்தியா, பாகிஸ்தான் என்று பிரித்து இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்குவது என்று முடிவு செய்தது. இனக் கலவரங்கள் ஏற்பட்டன. அமைதியை உருவாக்க விரும்பிய காந்தி நவகாளி யாத்திரையை மேற்கொண்டார். 1947ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15ஆம் திகதி இந்தியா சுதந்திரம் அடைந்தது.

இந்திய நாட்டின் நன்மைக்காக இந்து -முஸ்லிம் ஒற்றுமை தீண்டாமையை ஒழித்தல் மதுவிலக்கு ஒப்பந்தம், மகளிர் முன்னேற்றம், தொழுநோய் ஒழித்தல் போன்ற திட்டங்களைக் காந்தி அறிவித்தார்.

1931ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4ஆம் திகதி இங்கிலாந்தில் நடைபெற்ற வட்ட மேசை மாநாட்டில் காந்தி கலந்து கொண்டார். 1942ஆம் ஆண்டில் 9 "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தைத் தொடங்கினார். இதன் காரணமாக காந்தி, நேரு, பட்டேல் உட்பட பல்வேறு தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். காந்திஜி ஆகாகான் மாளிகைச் சிறையில் அடைக்கப்பட்டார்.

அகிம்சை வழிப்போராட்டத்தின் தந்தை என்று போற்றப்படும் காந்திஜி 1948 ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் திகதி துப்பாக்கிதாரியின் வன்முறையில் பலியானார். ஆனாலும் அன்னார் பின்பற்றிய அகிம்சை, உண்ணா நோன்பு, சத்தியம் போன்றவை இன்றும் நிலைத்து நிற்கின்றன.





உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பிணம் தின்னும் சாத்திரங்கள்

மகாபாரதத்தின் திருப்பு முனைக் கட்டம்.

நேர்மையாகப் பாண்டவர்களை வீழ்த்த முடியாத துரியோதனன், சூதாட்டத்துக்கு அவர்களை வரவழைத்து, சகுனி மூலம் தோற்கடிக்கிறான். நாடிழந்து, நகரிழந்து, செல்வமிழந்து, கடைசியாகத் தம் மனைவியான பாஞ்சாலியையும் சூதில் தோற்கிறார்கள் பாண்டவர்கள்.

பாஞ்சாலியை அரசவைக்கு இழுத்து வந்து துகிலுரிந்த கட்டத்தில், "என்னை சூது வைத்து இழக்க என் கணவனுக்கேது உரிமை?" என்று அவள் கேட்கிறாள். அவையில் கூடியிருக்கும் ஆச்சாரியர்கள் எல்லாரும் "நீ கேட்கிற நியாயம் எல்லாம் பழங்காலத்தில் இருந்தது. இப்போது இதுதான் நீதி: இதுதான் நியாயம்; இதுதான் சட்டம்" என்று சொல்லிவிடுகிறார்கள்.

அந்த இடத்தில்தான் "பேய் அரசுசெய்தால், பிணம் தின்னும் சாத்திரங்கள்" என்கிறாள் பாஞ்சாலி.

இது பாரதி எழுதிய 'பாஞ்சாலி சபதத்தில்' வரும் பாஞ்சாலி சொல்லும் அக்கினிச் சொற்கள்.

கிட்டத்தட்ட பாஞ்சாலி சொன்ன அதே வார்த்தைகளை, நாமும் இனி அடிக்கடி உச்சரிக்க வேண்டிவரும் போல இருக்கிறது. கோத்தாபய ஜனாதிபதியானவுடனேயே, படைமுகாம்களின் முன்னால் பலமணி நேரமாக எழுந்த பட்டாசு ஓசைகள் அதையே கட்டியம் கூறியிருந்தன. இப்போது அந்தக் கட்டியங்கள் மெல்ல மெல்ல நடைமுறைக்கும் வரத்தொடங்கி விட்டன.

பொங்கல் தினத்தன்று நாகர்கோவில் பகுதியில், அதிவேகமாகச் சென்ற இளைஞரை, படையினர் எச்சரித்தபோது, அவர் பலமாகத் தாக்கியுள்ளார். இந்தச் சம்பவத்தில் இளைஞர் அடித்தது வரை நியாயம் படைத்தரப்பு பக்கமாகவே இருந்தது. ஆனால் அதன் பின்னர் போர்க்காலத்தில் இருந்தது போன்ற மனோநிலைக்கு மாறி, ஒட்டு மொத்த கிராமத்தையும் ஒருநாள் முழுதும் முற்றுகைக்குள் வைத்திருந்தும், தம்மைத் தாக்கிய இளைஞரைப் பிடிக்க முடியாத ஆற்றாமையால், சந்தேக நபரின் சகோதரர்கள், நண்பர்கள் என்று 8 பேரை பிடித்ததும் கொடுங்கோலாட்சியின் அறிகுறிகளே.

உண்மையாகவே இளைஞர் , படையினரைத் தாக்கி இருந்தால், அது பற்றி பொலிஸுக்கு அறிவித்து அவரைச் சட்டரீதியாகக் கைது செய்து தண்டனையைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அதை விடுத்து ஒருவர் செய்த தவறுக்காக ஒரு கிராமத்தையே சுற்றிவளைத்து வதைப்பதும், ஏதுமறியாத நண்பர்கள், சகோதரர்களைப் பிடித்திழுத்துச் செல்வதும் எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாதது.

இந்த நிலையில் படையினரால் பிடித்துச் செல்லப்பட்டவர்களில் இருவர் , நேற்று நீதிமன்றத்துக்கு கூட சமூகமளிக்க முடியாதளவுக்கு, மருத்துமனையில் காயங்களுக்கு.சிகிச்சை பெற்று வருகின்றனர். அந்தளவுக்கு தம் வன்மைத்தை இந்த அப்பாவிகள் மீது படைத்தரப்பு காட்டியுள்ளது. அதைவிட வேடிக்கை என்னவெனில், படையினரைத் தாக்கியதாகச் சொல்லப்படும் இளைஞர், நீதிமன்றில் சரணடைவதற்கான நகர்தல் பத்திரத்தை சட்டத்தரணியூடாகச் சமர்ப்பித்த போது , "அவரை நாங்கள் தேடவில்லை" என்று பொலிஸ் சொல்லியிருக்கிறது. அடித்தவனைத் தேடாமல், அவரின் சகாக்களைத் தான் தேடிப்பிடித்து கை, காலை முறிக்க இப்போதைய இலங்கைச் சட்டம் சொல்கிறது போலும். சட்டத்தைக் காக்க வேண்டிய பொலிஸாரே, படையினரின் குற்றங்களை மூடிமறைக்கப் பாடுபடுவதும் ,குற்றத்தில் சம்பந்தப்படாதவர்களைச் சிறையில் இடுவதும், குற்றத்தோடு தொடர்புடையவரை சுதந்திரமாக உலவ விடுவதும், பாரதியின் பாஞ்சாலி சொன்ன "பேய் அரசுசெய்தால், பிணம் தின்னும் சாத்திரங்கள்" என்பதை இன்னொருமுறை நினைவுபடுத்துகின்றது.

# பொலிஸ் அதிகாரம் வழங்கவே முடியாது

## கெஹலிய திட்டவட்டம்

**கொழும்பு, ஜன.30**

**அரசமைப்பின் 13ஆவது திருத்த சட்டத்தில் இருக்கின்ற பொலிஸ் அதிகாரத்தை மாகாண சபைகளுக்கு ஒரு போதும் வழங்க முடியாது. அது ஒரு சாத்தியமற்ற விடயமாகவே காணப்படுகின்றது.**

இவ்வாறு அரசின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

மாகாண முறைமையில் காணப்படும் பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

காணி அதிகாரங்கள் தொடர்பில் ஆணைக்குழுவொன்றை அமைத்து ஆராய முடியும். 13ஆவது திருத்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரத்தை மாகாணசபைகளுக்கு வழங்குவது சாத்தியமான விடயமல்ல. அதுயதார்த்தமற்ற விடயமாகும். பொலிஸ் அதிகாரங்களை வழங்கினால் பல்வேறு தேவையற்ற பிரச்சினைகள் உருவாகும். கடந்த காலத்தில் உருவாக்கப்பட்ட புதிய அரசமைப்பு வரைவில் ஒவ்வொரு மாகாணமும் தனக்கு ஏற்றவாறு பொலிஸ் சீருடைகளை மாற்ற முடியும் என்ற ஏற்பாடுகளும் காணப்பட்டிருந்தன. பொலிஸ் அதிகாரத்தை வழங்குவது என்பது தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்குவதாகவே அமையும். உதாரணமாக மேல் மாகாணத்தில் ஒருவர் குற்றத்தை புரிந்துவிட்டு வடமாகாணத்துக்குச் சென்றுவிட்டால் உளவுப்பிரிவினர் கூட அந்த சந்தேகநபரை கைது செய்ய வடக்கு முதலமைச்சரின் அனுமதியைப் பெறவேண்டிய நிலைமை ஏற்படும். இலங்கை போன்ற ஒரு நாட்டுக்கு இது பொருத்தமான விடயமாக அமையாது. பொலிஸ் அதிகாரம் என்பது வழங்கப்பட முடியாததாகவே காணப்படுகின்றது. அதனால் அது தொடர்பில் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. இந்த விடயத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவும் மிகவும் உறுதியாக இருக்கின்றார். ஆனால் காணி அதிகாரம் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கலாம். காணி ஆணைக்குழுவை அமைத்து காணி அதிகாரங்கள் தொடர்பில் பரிசீலிக்கலாம். வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அனைத்து தரப்பினருடனும் பேச்சு நடத்தவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் அல்ல. வடக்கு, கிழக்கில் பொது அமைப்புக்கள், உள்ளூராட்சிமன்ற பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் பேச்சு நடத்த வேண்டும்- என்றார். (எ)

# கொரோனாவைத் தடுக்க சுகாதார அமைச்சு தயார்

## சுகாதார அமைச்சர் பவித்திரா தெரிவிப்பு

கொழும்பு, ஜன.30

"கொரோனா" வைரஸ் தாக்கம் தொடர்பாகக் கவனம் செலுத்துவதற்காக ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அமைய துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய குழு ஒன்றை நியமித்துள்ளோம். கொரோனா வைரஸின் தாக்கத்திலிருந்து இலங்கையைப் பாதுகாத்து கொள்வதற்காகச் சர்வதேச சுகாதார நியதிகளுக்கு அமைவாகவும், உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசனைக்கமையவும் சுகாதார அமைச்சு செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார். அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட சிறப்பு ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

விமான நிலையத்துக்கு வரும் அனைத்துப் பயணிகளும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். பயணிகளின் உடல் வெப்பத்தை அறிந்து கொள்வதற்காக ஸ்கேன் இயந்திரங்களும் வைக்கப்பட்டுள்ளன.

விமானநிலையத்துக்குவரும் பயணிகளின் உடல் வெப்பநிலைக் குறித்து கவனம் செலுத்திய பின் அவர்களில் யாருக்காவது கொரோனா வைரஸின் தாக்கம் கண்டறியப்பட்டால் அவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தொற்று நோய் பிரிவின் வைத்தியர்களின் ஆலோசனைக்கமைய நோயைக் கட்டுப்படுத்த அனைத்துவிதமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப் பட்டுள்ளன- என்றார். (எ)

# சீன நாட்டவருக்கு கொரோனா பரிசோதனை

கொழும்பு, ஜன.30

நாட்டில் உள்ள சீனப் பணியாளர்களுக்கு "கொரோனா" வைரஸ் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பரிசோதகர்கள் கொண்ட குழுக்கள் இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கட்டுமானப் பணிகள் நடைபெற்றுவரும் பகுதிகளுக்குச் சென்று "கொரோனா" வைரஸ் தொடர்பாகச் சீன நாட்டவர்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது என்றும், தொற்று ஏற்பட்டமைக்கான அறிகுறிகள் உள்ளவர்களுக்கு உடனடியாகச் சிகிச்சை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு நகரம் உட்படப் பல பகுதிகளில் அதிக எண்ணிக்கையான சீன நாட்டவர்கள் பணியாற்றுகின்றனர். அவர்கள் தொடர்பாக சுகாதாரப் பிரிவினர் கவனம் செலுத்தி வருகின்றனர். (எ)

# காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மறக்கப்பட வேண்டியவர்களா?

■ இந்துமதி



காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரத்துக்கு ஒரேயடியாக முற்றுப்புள்ளி வைத்துவிட்டார் ஜனாதிபதி கோத்தபாய காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அனைவரையும் இறந்துவிட்டார்கள் என அவர் கூறியமை ஆண்டுக் கணக்கில் தமது உறவுகளைத் தேடி அலைந்து கொண்டிருக்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்குப் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் என்பதைக் கூறத் தேவையில்லை.

இதேவேளை காணாமல் ஆக்கப்பட்டவர்களை விடுதலைப் புலிகளே வலிந்து அழைத்துச் சென்றனர் எனவும் அதன்பின்னர் அவர்கள் இறந்திருக்கலாமெனவும் ஒரு யூகத்தின் அடிப்படையில் ஜனாதிபதி கூறியுள்ளதை மறுப்பதற்கு இன்று விடுதலைப் புலிகளின் சார்பில் எவருமே இல்லை.

போர் தீவிரமடைந்த போது புலிகள் கட்டாய ஆள்சேர்ப்பில் ஈடுபட்டமையை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். போரில் ஈடுபடுவதற்கு ஆள்களுக்குப் பற்றாக்குறை இருந்ததால் இளைஞர், யுவதிகளை வலுக்கட்டாயமாகப் புலிகளின் படையணிகளில் இணைத்துக் கொள்கின்ற நடவடிக்கையில் புலிகள் ஈடுபட்டனர் என்பதை அவதானிக்க முடிந்தது.

இவ்வாறு புலிகளால் பிடித்துச் செல்லப்பட்டவர்களில் ஒரு தொகுதியினர் போரின் போது கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது படுகாயங்களுக்கு உள்ளாகித் தமது அங்கங்களை இழந்திருக்கலாம். அதேசமயம் ஒரு தொகுதியினர் படையினரால் புனர்வாழ்வு அளிக்கப்பட்டுச் சமூகத்தில் இணைந்து வாழ்கின்றமையையும் காண முடிகின்றது. இதனால் புலிகளால் கொண்டு செல்லப்பட்ட அனைவருமே இறந்துவிட்டார்களெனக் கருத முடியவில்லை. இதேவேளை படையினரிடம் சரணடைந்தவர்களும், படையினரால் கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டவர்களும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பட்டியலில் உள்ளதாக அவர்களது உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர்களின் விடயத்தில் விடுதலைப் புலிகளுக்கு எவ்வித தொடர்பும் இல்லையென்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆகவே இவர்கள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்து உண்மை நிலையைக் கண்டறிவது அரசின் தலையாய கடமையாகும்.

இதைவிடுத்து எழுந்தமானமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அனைவருமே இறந்துவிட்டனர் எனவும் இதற்குப் புலிகளே காரணமெனவும் கூறுவதை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்?

தமிழர்கள் என்றாலே ஓர் இளக்காரமான போக்கு பெரும்பான்மைச் சமூகத்தினரிடம் உள்ளதைக் காண முடிகின்றது.

அரசின் ஆதரவு தமக்கு உள்ளதால் தமிழர்களுக்கு எதிராக எதையுமே சாதித்துவிட முடியுமென அவர்கள் கருதுகின்றனர்.

இதற்கு ஏற்றாற்போன்று அரசும் அவர்களை அரவணைத்துச் செல்வதைக் காண முடிகின்றது.

இதனால்தான் இந்து ஆலய வளாகத்தினுள் இறந்த பௌத்த பிக்கு ஒருவரின் உடலை நீதிமன்றக் கட்டளையையும் மதிக்காது தகவனம் செய்வதற்கு அவர்களால் முடிந்துள்ளது.

நாட்டின் சட்டதிட்டங்களுக்கும், நீதித்துறைக்கும் சவால் விடும் வகையில் இந்தச் சம்பவம் நடந்தேறியுள்ளது. இதற்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் பௌத்த பிக்குமார்களின் குழுவொன்று மேற்படி ஆலயத்துக்குச் சென்று அதைப் பார்வையிட்டுச் சென்றுள்ளது. இதன் உள்நோக்கம் என்னவென்பதை அறிந்து கொள்ள முடியவில்லை.

ஆனால் ஏதோ ஆபத்து ஏற்படப் போவதை ஊகிக் கமுடிகின்றது.

அயல் நாடுகளைச் சேர்ந்த உயர் மட்ட அரசியல்வாதிகள் அடிக்கடி இங்கு செல்வதை அவதானிக்க முடிகின்றது.

அவர்கள் அரச தலைவர்களுடன் ஏதேதோ பேசுகின்றனர்.

அரசு சார்பில் வழங்கப்படும் விருந்து உபசாரங்களில் கலந்து கொள்கின்றனர். அரசின் செயற்பாடுகளைப் புகழ்ந்துவிட்டுச் செல்கின்றனர்.

இவர்களின் கண்களுக்குப் பாதிக்கப்பட்ட நிலையில் வாழ்கின்ற மக்களின் அவலநிலை தெரிவதில்லை.

பாதிக்கப்பட்ட மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற தலைவர்களையும் இவர்கள் சந்திக்கத் தவறுவதில்லை.

ஆனால் பின்னர் சகலதையும் இவர்கள் மறந்து விடுகிறார்கள். இத்தகையவர்களை நம்புவதால் பயன்தான் என்ன? இந்த நிலையில் இந்தியாவும், அயல் நாடுகளும் எம்மைக் கைவிட மாட்டாதென எம்மவர்களில் சிலர் கூறுவதைக் கேட்கும போது என்ன சொல்வது என்றே தெரியவில்லை. இவர்களின் ஏமாற்று வேலைகளை எம்மவர்கள் புரிந்து கொண்டதாகத் தெரிய வில்லை.

தமிழர்கள் ஒற்றுமையில்லாதவர்கள், எளிதில் ஏமாந்துவிடக் கூடியவர்கள் என்ற கணிப்புப் பெரும்பான்மைச் சமூகத்தினரிடம் உள்ளது.

இதன் காரணமாகவே தமிழர்கள் விடயத்தில் தான்தோன்றித்தனமான வகையில் செயற்படுகின்றனர். இல்லாவிட்டால் சோற்றுப் பிரச்சினையைத் தவிர வேறு பிரச்சினை எதுவும் தமிழர்களுக்கு இல்லையென சிங்க அரசியல்வாதிகள் கூறுவார்களா?

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் கவலைகளை ஜனாதிபதி புரிந்து கொண்டிருந்தால் காணாமல் போனவர்கள் அனைவருமே இறந்துவிட்டனர் என எளிதில் கூறியிக்க மாட்டார். இவ்வாறு அறிவித்தல்விடுப்பதால் அந்த மக்களின் வேதனைகள் மேலும் அதிகரிக்கவே செய்யும். என்பது அவர் அறியாத ஒன்றல்ல.

இந்த நாட்டின் தலைவர் என்ற வகையில் தமிழர்களை அவரால் புறமொதுக்கிவிட முடியாது.



அந்த மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும், தீர்வுக்கும் தீர்வை அவரே வழங்க வேண்டும்.

இதைவிடுத்து அந்த மக்களின் துயரத்தை மேலும் அதிகரிக்கும் வகையில் சொற்பிரயோகத்தை மேற்கொள்வது நல்லதாகத் தெரியவில்லை. ஆகவே ஜனாதிபதி தமது கருத்தை மீளாய்வு செய்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் அக்கறை காட்டுவதுடன் அவர்கள் தொடர்பான உண்மை நிலையை வெளியிட வேண்டும் என்பதே பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எதிர்பார்ப்பாகும். ■

# பொதுத் தேர்தலின் பின்னரே நியமனங்களுக்கு சாத்தியம்

*யாழ்ப்பாணம், ஜன.30*

ஒரு லட்சம் பேருக்கான வேலை வாய்ப்புக்குத் தற்போது விண்ணப்பங்கள் கோரப்படுகின்றபோதும், பொதுத் தேர்தலின் பின்னரே நியமனங்கள் வழங்கப்படும் சாத்தியம் உள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நியமனங்களுக்கான திறைசேரி அனுமதி இன்னமும் பெறப்படவில்லை என்றும், அந்த அனுமதிக்கான விண்ணப்பமும் இதுவரை அனுப்பப்படவில்லை என்றும் தெரியவருகின்றது.

நாடு முழுவதும் உள்ள ஒரு லட்சம் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு என்ற அறிவிப்போடு தற்போது பிரதேச செயலகங்கள் ஊடாகவும், கட்சி அலுவலகங்கள் ஊடாகவும் அதற்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் இந்த நியமனங்களைத் தேர்தலுக்கு முன்னர் வழங்கும் சாத்தியம் இல்லை என்றும், இந்தத் தரவுகள் தேர்தலுக்கே பயன்படும் என்றும் கூறப்படுகின்றது.

ஒரு லட்சம் பேருக்கு நியமனம் வழங்கப்பட்டு அவர்களுக்கு 6 மாதங்களுக்கு தலா 22 ஆயிரம் ரூபா வீதம் வேதனம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு மாதம் ஒன்றுக்கு 220 கோடி ரூபா தேவைப்படும். கடந்த ஆண்டு நடந்த பணிகளுக்கான கொடுப்பனவுகளே வழங்கப்படாத நிலைமையே தற்போது உள்ளது. அதனால் இவ்வாறான பெரும் தொகை நிதியை ஒதுக்கீடு செய்வதற்கான சாத்தியம் இல்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

(எ-105)



## போக்குவரத்து நடைமுறைகள் பொலிஸாருக்கு ஆலோசனை

மன்னார்,ஜன.30

மன்னார் மாவட்டத்தின் வீதிப் போக்குவரத்துத் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல், மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கலந்துரையாடலில் மன்னார் -தலைமன்னார் பிரதான வீதி,மன்னார் - யாழ். பிரதான வீதி, மன்னார்- மதவாச்சி பிரதான வீதி ஆகிய முக்கிய வீதிகளில் விபத்துக்கள் இடம் பெறாத வகையில், பொலிஸார் முன்னெடுத்து வருகின்ற வீதிப் பாதுகாப்பு நடவடிக்கைகள், மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய வீதிப் பாதுகாப்பு நடவடிக்கைகள், வீதி விபத்துக்கள், சாரதிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டன.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்க தலைமையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் மன்னார் மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் வீதிப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

(க-56)

## சிறுவர் பூங்கா திறப்பு

குருநகர்,ஜன.30

யாழ். குருநகர் சென். றோக்ஸ் சனசமுக நிலையத்தின் வளவில் புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா கடந்த 15 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

சனசமூக நிலையத் தலைவர் க. திருவம்பலம் தலைமையில், மாற்றம் அமைப்பின் இயக்குநர் வண பிதா வின்சன் பற்றிக் அடிகளார் பூங்காவைத் திறந்து வைத்தார்.

யாழ். பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட நிதி மற்றும் அந்தப் பகுதி மக்களால் வழங்கப்பட்ட நிதி மூலம் பூங்கா அமைக்கப்பட்டது.(க-51)

## ஒழுங்கற்ற பஸ் சேவை சீர்படுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.30

அளவெட்டி டச்சு வீதியினூடாக யாழ்ப்பாணம் - பண்டத்தரிப்பு வரை தினமும் நான்கு தடவைகள் சேவையில் ஈடுபட்டு வந்த 798 இலக்க பஸ் சேவை தற்போது ஒழுங்கற்ற முறையில் சேவையில் ஈடுபடுத்தப்படுகிறது.



"யாழ்ப்பாணம் - இளவாலை" வரை நான்கு தடவைகள் சில காலம் சேவையில் ஈடுபட்ட போதும், தற்போது இது இரண்டு தடவைகளாக சேவை குறைக்க ப்பட்டுள்ளது. சேவையின் பாதை இலக்கமும் மாற்றப்பட்டுள்ளது.

அளவெட்டியில் தற்போது மக்கள் செறிவாகக் குடியமர்ந்துள்ளமையால், நோயாளிகள், மாணவர்கள் அரச, தனியார் துறை உத்தியோகத்தர்கள் போக்குவரத்துக்குப் பல இடர்களைச் சந்தித்து வருகின்றனர். எனவே 1992 இடம்பெயர்வுக்கு முன்னர் வழங்கப்பட்ட 798 பாதையிலக்கச் சேவையை மீண்டும் வழங்கி, போக்குவரத்தை இலகுபடுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 'உயர்த்தும் கரங்கள்' செயற்திட்டத்தின் கீழ், முல்லைத்தீவு பனிக்கன் குளம் அ.த.க பாடசாலையைச் சேர்ந்த 20 மாணவர்களுக்குப் பாடப்பயிற்சிப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. இதற்கான நிதியை நிலவியலாளர்களான கட்டார் நாட்டில் வசித்துவரும் மதுரகீதன் மற்றும் பிரசாத் ஆகியோர் வழங்கினர். (க-222)

## முதியவர்கள் கௌரவிப்பு

குருநகர்,ஜன.30

பருத்தித்துறை சக்கோட்டை புனித சவேரியார் ஆலயப் பங்கில் உள்ள முதியோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் ஆலயத்தில் நடைபெற்றது.

ஆலயத்தின் பங்குத்தந்தை வண பிதா மு.கான்ஸ்போவர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட முதியவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

முதியோர்கள் மலர் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டதுடன், உடைகள் மற்றும் உணவுப் பொதிகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி ப.யோ. ஜெபரட்ணம் அடிகளார், பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ.சிறி ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சக்கோட்டை முதியோர் சங்கமும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. முதியோர் சங்கத் தலைவராக நீ.டேவிட், செயலாளராக அ.ஞானமணி, பொருளாளராக எஸ். சிங்கராசா, உப செயலாளராக திருமதி அ.றீற்றம்மா, உப தலைவராக எஸ்.குலநாயகம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க-51)



## வீடு வழங்குவது பற்றி அமைச்சர் குழு ஆராய்வு

வவுனியா, ஜன. 30

வன்னியில் மக்களுக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்க தோட்ட உட்கட்டமைப்பு சமூக வலுவூட்டல் ராஜாங்க அமைச்சர் நிமல் லங்ஸா உள்ளிட்ட அதிகாரிகளுடனான சந்திப்பொன்று கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நவீன தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்படும் கொங்கிறீட் சட்டக பொருத்து வீடுகளை அமைத்தல், இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து நாடு திரும்பிய மக்களுக்கு தற்காலிக இருப்பிடங்களை அமைக்க தலா ஒரு லட்சம் ரூபா வழங்குதல், போரால் பாதிக்கப்பட்டு வீடற்றிருக்கும் மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணுதல் என்பன தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் இராஜாங்க அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## சமுதாயத்தின் வளர்ச்சி இளைஞர் கைகளில்!

*வின்சன் பற்றிக் அடிகளார் தெரிவிப்பு*

குருநகர்,ஜன.30

சமுதாயத்தின் வளர்ச்சி இளைஞர்களின் கைகளில் உள்ளது. மக்களின் விடியலுக்காக இளைஞர்கள் தமது கைகளில் பொறுப்புக்களை எடுத்து நற்பிரஜைகளாக மாறவேண்டும்

இவ்வாறு மாற்றம் அமைப்பின் இயக்குநர் அருட்தந்தை வின்சன் பற்றிக் அடிகளார் தெரிவித்தார்.

யாழ் சென்றோக்ஸ் சனசமூக நிலைய வளவில் புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் பூங்காத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய இளைஞர்கள் இன்றைய தலைவர்கள், நாளைய தலைவர்களும் எமது எதிர்காலத்தை அமைத்துக் கொள்பவர்களும் அவர்களே. மக்கள் அவர்களையே நம்பி உள்ளனர். அவர்களில் சிலர் தமது வாழ்க்கையைச் சீரழித்து வருகின்றனர். அவர்களை நற்பிரஜைகளாக வளர்ப்பதற்கு அவர்களது பொற்றோர்கள் எடுத்த முயற்சியை இளைஞர்கள் உணர்ந்துதம்மைத் திருத்தி புதிய நல்ல பாதைக்குத் திருப்ப வேண்டும். எமது சமுதாயம் அவர்களை வரவேற்கக் காத்துள்ளது. அவர்கள் எம்மை உயர்ந்த பொறுப்புமிக்க பாதைக்கு அழைத்துச் செல்ல வேண்டும் - என்றார்.

(க-51)

# பொதுநலம் குறைந்து சுயநலமே உயர்கிறது

*தொழிலதிபர் பரமானந்தம் தெரிவிப்பு*



கொடிகாமம் ஜன 30

தற்காலத்தில் உதவி செய்வது மிக அருகிவிட்டது. பொதுநலம் மங்கி சுயநலம் உயர்ச்சியடைகின்ற காலம் இது. எனினும், உதவிகள் சரியான இடத்தைச் சேர வேண்டும். என்று கொடிகாமம் நட்சத்திரமஹால் உரிமையாளர் (பிரான்ஸ்) த.பரமானந்தம் தெரிவித்தார்.

ஜேர்மனை தலைமைக் காரியாலயமாகக் கொண்டு இயங்கும் உதவும் இதயங்கள் அமைப்பின் அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் அமைந்துள்ள உதவும் இதயங்கள் நிறுவனத்தின் திட்டமிடல் பணியகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.


சீட்டிழுப்பில் முதல் பரிசு ஓட்டோ, இரண்டாம் பரிசு ஆண்களுக்கான மோட்டார் சைக்கிள், மூன்றாம் பரிசு பெண்களுக்கான மோட்டார் சைக்கிள் மற்றும் ஆறுதல் பரிசாக பத்து துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பரமானந்தம் முதல் பரிசு வழங்கி உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

தற்காலத்தில் உதவி செய்வது மிக அருகிவிட்டது. பொது நலம் மங்கி சுயநலம் உயர்ச்சியடைகின்ற காலமாகி விட்டது. யாராவது பொது வேலை செய்யப்போனால் தடுக்கப் பார்ப்பார்கள். நவீன உலகத்தில் பிறருக்கு உதவி செய்தால் வேலைவெட்டி இல்லாதவன் என்றும் தாய் தந்தைக்கு உதவி செய்தாலும் பிழைக்கத் தெரியாதவர்கள் என்றும் கூறுவார்கள். வெளிநாட்டில் பணம் உழைத்தாலும் அதை எப்படி உழைக்கிறார்கள் என்று இங்குள்ளவர்களுக்குத் தெரியாது. வெளிநாட்டில் காலையில் கடும் குளிர், வெளிக்கிட முடியாது. ஐம்பது அறுபது வயது ஆண்கள் பெண்கள் தலை எல்லாம் மூடிக் கட்டி இரண்டு மூன்று உடுப்புகள் அணிந்து பஸ்ஸுக்கு காவல் நின்று கிளீனிங் வேலைக்குச் செல்கிறார்கள். அவர்கள் மிகக் கஷ்டப்பட்டு வேலைக்குச் சென்றுதான் இங்குள்ளவர்களுக்கு காசு அனுப்புகிறார்கள். அதை இங்கிருக்கும் அனைவரும் உணர வேண்டும்-என்றார். (த-159)



நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் தேசிய உற்பத்திதிறன் செயலகத்தால் நடத்தப்பட்ட போட்டியில் சாவகச்சேரி பிரதான தபாலகம் தேசிய உற்பத்திதிறன் விருதைப் பெற்றுக்கொண்டது. அண்மையில் தேசிய உற்பத்திதிறன் செயலகத்தால் பத்திரமுல்லை அமைத்துள்ள இசுறுபாயவில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து, சாவகச்சேரி பிரதன தபால் அதிபர் விருதைப் பெற்றுக் கொண்டார். (க-23)







## வவுனியா மாவட்ட செயலகம் முன்

# காணி அபகரிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

**வவுனியா,ஜன.30**

**வவுனியா மாவட்டத்தில் அதிகாரத்தைப் பயன்படுத்தி பொதுமக்களின் காணிகளை அபகரித்த அதிகாரிகளைக் கண்டித்து வடமாகாண மக்கள் திட்ட ஒன்றியத்தின் ஏற்பாட்டில், மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் "போரால் இடம்பெயர்ந்து இந்தியாவில் அகதிகளாக இருக்கும் மக்களின் காணிகளை அபகரிக்காதே, காணி விற்பனையால் கிடைத்தது எத்தனை கோடி, காணி ஊழல்வாதிகளை வீட்டுக்கு அனுப்பு" போன்ற கோசங்களை எழுப்பியதுடன் பதாகைக்ளையும் தாங்கியிருந்தனர்.

"வவுனியா நகர பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய உதயராசா பல காணி மோசடிகளில் ஈடுபட்டமை தொடர்பில் தகவல்களை வெளிகொணர்ந்ததை அடுத்து அவர் இடமாற்றப்பட்டுள்ளார். எனினும் அவரை பணி இடை நிறுத்தம் செய்து விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். அரசியல்வாதிகளால் மோசடிகள் தொடர்பில் கேள்வி எழுப்பப்படாத நிலையில் சாதாரண மக்களே இந்த விடயங்களை ஆதாரத்துடன் வெளிப்படுத்தியிருந்தனர். வன்னியை சேர்ந்த 6 நாடாளுமன்ற உறுப்பினர்களோ, அரசியல்வாதிகளோ இது தொடர்பில் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர். உயர் அதிகாரிகளின் ஊழல்கள் இவ்வாறே மறைக்கப்பட்டு வருகின்றது. எனவே இதில் சம்பந்தப்பட்ட கிராம சேவகர்கள் குடியேற்ற உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் விசாரணை செய்ய வேண்டும். மக்கள் தாமாகத் துணிந்து வந்து முறைப்பாடு செய்ய ஆவன செய்யப்படவேண்டும். இன்று இந்தியாவில் உள்ளவர்களின் காணிகளில் கிரவல் அகழப்படுகின்றது. இதனை உடன் தடுத்து நிறுத்த வேண்டும். ஊழல் அதிகாரிகளை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்.

எனவேநாம் 3 கோரிக்கைகளை முன்வைக்கின்றோம். அவை யாவன காணி சம்பந்தமான விசாரணை ஆணைக்குழு ஒன்றை நிறுவ வேண்டும். அது வடக்கில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்கள் வாரியாகவும் விசாரணை நடத்த வேண்டும் மற்றும் இந்தியாவில் உள்ள எங்களது மக்களின் காணிகளை எந்த பாவனையும் இல்லாமல் பாதுகாக்க வேண்டும். அடுத்து ஊழல் அதிகாரிகளை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றோம்" என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (க-110)



# தங்கப் பதக்கம் வென்றது ஈச்சளவக்கை பாடசாலை

மன்னார்,ஜன.30

தேசிய ரீதியிலான 'செயற்பட்டு மகிழ்வோம்' போட்டியில் மன்னார் ஈச்சளவக்கை பாடசாலை தரம் 5 பிரிவில் தங்கப்பதக்கத்தை வென்றது.

2019 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட செயற்பட்டு மகிழ்வோம் போட்டி நாவலப்பிட்டி ஜெயரத்ன விளையாட்டுத்திடலில் அண்மையில் நடைபெற்றது. அதில் 72 பாடசாலைகளுடன் போட்டி யிட்டு மன்னார் மடு வலயத்தின் மன்னார் ஈச்சளவக்கை பாடசாலை தரம் 5 பிரிவில் தங்கப்பதக்கத்தை வென்றுள்ளது.

2017/2018 ஆம் ஆண்டுகளிலும் இந்தப் பாடசாலை தங்கப்பதக்கத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்களுக்கான நெறிப்படுத்தலை பாடசாலை ஆசிரியை திருமதி. சாஜித் நியாஷா மற்றும் பயிற்றுவிப்பாளர் எஸ்றிசதரன் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர். (க)

# 22 முகங்கள் நூல் வெளியீடு

வவுனியா,ஜன.30

வவுனியாவைச் சேர்ந்த ஊடகவியலாளர் ந. கபிலநாத்தின் 22 முகங்கள் நூல் வெளியீடு நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 3 மணிக்கு வவுனியா குடியிருப்பு பிரதேச கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

வவுனியா கல்வியியல் கல்லூரியின் ஓய்வுபெற்ற பீடாதிபதி க. சுவர்ணராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆய்வாளர் தமிழ்நிதி அருணா செல்லத்துரை. சிறப்பு விருந்தினராக வீரகேசரி யின் பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன், கௌரவ விருந்தினர்களாக பிரபல வர்த்தகர் ச. இராசலிங்கம் மற்றும் மாவீரன் பண்டாரவன்னியன் மறுமலர்ச்சி மன்றத்தின் செயலாளர் செ. சபாநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் நூல் அறிமுகவுரையை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி பத்மாவதி ஜெயச்சந்திரன் மற்றும் நூல் ஆய்வுரையை வவுனியா வடக்கு ஆசிரியர் வள நிலையத்தின் முகாமையாளர் சு. ஜெயச்சந்திரன் ஆகியோர் நிகழ்த்துவர். (க-110)

# ஆபத்திலுள்ள சிறுவர்களின் விவரம் திரட்டல்

மூளாய்,ஜன.30

வடக்கு மாகாணத்தில் ஆபத்துக்களை எதிர்நோக்கும் நிலையில் வாழ்ந்துவரும் சிறுவர்கள் தொடர்பான தரவுகளை சேகரிக்கும் செயற்திட்டமொன்றை வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் மேற்கொள்ளவுள்ளது.

போருக்குப் பின்னரான காலத்தில் வடக்கின் அனைத்து மாவட்டங்களிலும் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் மிகவும் ஆபத்தான சூழலில் வாழ்ந்து வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. அதனையடுத்து இந்தச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விவரக்கடிதம் வடக்கின் அனைத்து மாவட்டங்களினதும் மாவட்டச் செயலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு உட்படல் உள்ளிட்ட பாதிப்புக்களில் இருந்து ஆரம்பத்திலேயே சிறுவர்களைப் பாதுகாக்க முடியும் அதற்கான செயற்றிட்டங்களை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டது.

இந்தச் செயற்றிட்டத்தின் முதற்கட்டமாக கிராம மட்டத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மூலம் பாதிக்கக்கூடிய குடும்பங்களை அடையாளம் கண்டு, தகவல்களைப் பெற்று தரவுத்தளம் ஒன்றை உருவாக்கிச் சமர்ப்பிக்குமாறு ஆளுநர் பணித்துள்ளார். (க-121)

# உள்ளூராட்சிச் சபைகளுக்கு ஒதுக்கப்படும் நிதி போதாது

## வடக்கு ஆளுநரிடம் சுட்டிக்காட்டினார் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ்



தலைமன்னார், ஜன. 30

கிராமப்புற மக்களுக்கு நேரடியாக உதவிகள் புரியும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மத்திய அரசு ஒதுக்கும் நிதி மிகக் குறைவாகவுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்கள் வினைத்திறனாக இயங்க முடியவில்லை. ஆகவே வடக்கு மாகாண ஆளுநர் ஜனாதிபதியின் விசேட நிதியை வடக்குக்கு கொண்டுவந்து அபிவிருத்திக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்.

2019ஆம் ஆண்டு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தித்திட்டத்தின் கீழ்12 மில்லியன் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட நானாட்டான் பிரதேச சபையின் முருங்கன் உப அலுவலகம் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

சபைத் தவிசாளர் தி.பரஞ்சோதி தலைமையில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதனின் பங்குபற்றலுடன் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அதைத் திறந்து வைத்தார்.

அங்கு உரையாற்றுகையில் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் பிரச்சினைகளை நேரடியாகத் தீர்க்கக்கூடியவை உள்ளூராட்சி மன்றங்களே. ஆனால் அவை மக்களுக்குச் சேவையாற்றுவது மிகச் சொற்பமே. காரணம், வடக்கு மாகாண அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி போதாமையே.

நாடாளுமன்றில் இடம்பெறுகின்ற வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படுகின்ற விசேட நிதியில் கணிசமான நிதியை வடக்கு மாகாணத்துக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியை ஆளுநர் மேற்கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி நிதியத்திலிருந்து ஆளுநர் நிதியைக் கொண்டுவருவீர்கள் என்று நம்புகின்றேன்.

தவிர, 2019 ஆம் ஆண்டு நடந்து முடிந்த அபிவிருத்தி வேலைகளுக்கான நிதி நிலுவையில் உள்ளது.

இரண்டு மில்லியன் ரூபாவுக்கும் உட்பட்ட வேலைகளை கிராம அபிவிருத்திச் சங்கங்களும்அதற்குமேற்பட்ட வேலைத் திட்டங்களை ஒப்பந்தகாரர்களும் செய்திருக்கின்றனர். ஆகவே நடந்துமுடிந்த வேலைத் திட்டங்களுக்கான நிதியை வழங்காது காலம் தாழ்த்திச் செல்வதால் பலர் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

இதனால் பாதிப்படைவது அரச திணைக்களங்கள் மட்டுமல்ல கிராமப்புறங்களிலுள்ள பொது அமைப்புக்கள் தனிப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் யாவருமே. ஆகவே ஆளுநர் இந்த விடயத்தில் கவனம் செலுத்தவேண்டும். இது மட்டுமன்றி, மடு பிரதேச செயலகத்தை இரண்டு பிரதேச சபைகள் கையாளுகின்ற சூழல் இருக்கின்றது. அதாவது மடுவில் ஒரு பிரதேச செயலகம் இருந்தாலும் மன்னார் மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலகங்களுக்கு நான்கு பிரதேச சபைகள்தான் இருக்கின்றன. வடக்கில் மடு, கண்டாவளை, ஒட்டுசுட்டான், மருதங்கேணி ஆகிய பிரதேச செயலகங்களுக்கு பிரதேச சபைகள் உருவாக்கப்படவில்லை.

கடந்த அரசின் காலத்தில் முயற்சிகள் எடுக்கப்பட்டன- என்றார். (த-60)

## மாவைக் கந்தன் ஆலயத்தில் திருமுறை பண்ணிசை கச்சேரி

*இன்று முதல் தைப்பூச இலட்சார்ச்சனையை முன்னிட்டு*

யாழ்ப்பாணம் ஜன.30

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோயில் தைப்பூச இலட்சார்ச்சனையை முன்னிட்டு யாழ்ப்பாணம் இந்திய துணை தூதரகத்தின் நிதிப்பங்களிப்புடன் மாவை ஆதீனம் ஏற்பாடு செய்துள்ள தமிழ்நாடு (இந்தியா)பண்ணிசை கலைஞர்கள் வழங்கும் திருமுறை பண்ணிசை கச்சேரி இன்று 30ஆம்திகதி வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை வரை தினமும் காலை 9 மணிக்கும் மாலை 5.30 மணிக்கும் நடைபெறும்.

இந்திய கலைஞர்களான ஓதுவார் மூர்த்திகள் தருமை தேவார இசைமணி, புகழேந்தி மகேஸ்வரன், ஆலவாய் அண்ணல் தேவார பாடசாலை சண்முகம் விஷ்ணு, வயலின் வித்துவான் சிதம்பரம் கோகுலாசாரி ஸ்ரீராம் மிருதங்க வித்துவான் மதுரை தியாகராஜன் மோகன்ராஜ் ஆகியோர் பண்ணிசை கச்சேரியில் பங்குபற்றுகின்றனர்.

நிறைவு நாளான 8ஆம்திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் இந்திய கலைஞர்களும் யாழ்ப்பாண கலைஞர்களும் இணைந்து வழங்கும் சிறப்பு நிகழ்ச்சி இடம் பெறும். அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணை தூதுவர் சங்கர் பாலச்சந்திரன் கலைஞர்களுக்கான கௌரவங்களை வழங்கி சிறப்பிப்பார்.

## புதிய நாடாளுமன்று மூலம் புதிய திட்டங்கள் உருவாகும்

*அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு*



கொழும்பு, ஜன.30

எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலை அறிவிப்பார். அதன் மூலம் புதிய அரசை அமைத்து வரவு-செலவுத் திட்டமொன்றை முன்வைக்க முடியும்.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

காலியில் நடந்த கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2015ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட நாடாளுமன்றமே எமக்கு கிடைத்திருக்கிறது. நிலையற்ற நாடாளுமன்றத்துக்குப் பதிலாக பலமான நிலையான ஒரு நாடாளுமன்றமே நாட்டுக்கு அவசியமாக இருக்கின்றது. அரசமைப்பின் 19ஆவது திருத்த சட்டத்தின் ஊடாக நாடாளுமன்றத்தை நான்கரை வருடங்கள் முடியும் வரை ஜனாதிபதியால் கலைக்க முடியாது.

முன்னைய ஆட்சியாளர்கள் உருவாக்கிய சட்டங்களால் முழுநாட்டையும் குழப்பியிருக்கின்றனர். மார்ச் மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுப்பார்.

அதன்மூலம் புதிய நாடாளுமன்றம் உருவாகும். அதன் மூலம் நாட்டை புதியதொரு பாதைக்குக் கொண்டுசெல்ல முடியும். புதிய வேலைத்திட்டங்களையும் உருவாக்க முடியும். புதிய நாடாளுமன்றம் அமைந்த பின்னர் வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து நாட்டை பலமான அபிவிருத்தியை நோக்கி கொண்டுசெல்வோம் - என்றார். (எ)

## ஆயுர்வேத திணைக்களத்தின் 'கொரோனா''' அறிவுறுத்தல்

கொழும்பு, ஜன.30

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கு முன்னெடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில்ஆயுர்வேததிணைக்களம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இந்த ஆலோசனைகள் அடங்கிய கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன என்று கம்பஹா விக்ரமாரச்சிஆயுர்வேதபோதனா வைத்தியசாலையின் வைத்தியர் எச்.பி.கே.அஜித் குமார குறிப்பிட்டுள்ளார்.

கிருமிக் கொல்லிகள் அடங்கிய ஆயுர்வேதக் கடதாசியூடாகப் புகை விசிறுதலும் இதற்குள் உள்ளடங்குகின்றது என்று அவர் தெரிவித்துள்ளார். நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட மூலிகை சாறுகளையும் இதற்குப் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். (எ)

## கென்னடியின் நினைவஞ்சலி





காரைநகர், ஜன. 30

கலாநிதி ஜோன் மனோகரன் கென்னடி விஜயரத்தினத்தின் 2ஆவது ஆண்டு நினைவஞ்சலி காரைநகர் இந்துக் கல்லூரி நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மௌனப் பிரார்த்தனை நடைபெற்று அவருடைய திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செய்யப்பட்டது. தொடர்ந்து காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் வி.கேதீஸ்வரதாசன் தலைமையில் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியை (இந்து நாகரிகத் துறை) திருமதி நாச்சியார் செல்வநாயகம், காரைநகர் இந்துக் கல்லூரி அதிபர் அ.ஜெகதீஸ்வரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் யாழ்ப்பாண மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான சட்டத்தரணி வி.மணிவண்ணன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்டத்தரணி க.சுகாஸ் மற்றும் திருமதி சூரியா சிவரூபன், நடராசா சண்முகலிங்கம்(ஜேர்மனி), தீசன் திரவியநாதன், கபிலன் சிவஞானம், சி.கெங்காதரன் உள்ளிட்ட பலரும் நினைவுரைகள் ஆற்றியிருந்தனர்.

கலாநிதி கென்னடி, கிழக்கு மற்றும் தென்கிழக்குப் பல்கலைக் கழகங்களின் முன்னாள் ஆங்கிலத்துறை விரிவுரையாளரும், மடவளவு, எத்தியோப்பியா பல்கலைக் கழகத்தின் இணைப் பேராசிரியரும் இன, மொழி உணர்வாளரும், காரைநகர் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனுமாவார்.

நிகழ்வில் வாழ்வாதார வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த உயர்தர வகுப்பில் பயிலும் காரைநகர்ப் பாடசாலைகளைச் சேர்ந்த திறமைமிக்க இருபது மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு நிதி கென்னடியின் குடும்பத்தினரால் வழங்கப்பட்டது.

உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்பு நிதித் திட்டத்தையும் கென்னடி வழங்கி வந்திருந்தார். அவருடைய மறைவுக்குப் பின்னர் அவருடைய குடும்பத்தினர் இந்தத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-250)



முன்பள்ளிச் சிறார்களுக்குத் தைப்பொங்கலின் மகத்துவத்தை விளக்கும் வகையில் சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை. புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் உழவர் தினவிழா நேற்று நிலைய முன்றிலில் நடைபெற்றது. (சு-9)

# சிறையில் தள்ள அரசியல் சூழ்ச்சி

## முன்னாள் அமைச்சர் ராஜித முறைப்பாடு

**கொழும்பு, ஜன.30**

**நீதிமன்றில் முன்பிணை கோரிய நிலையில் அதனையும் பொருட்படுத்தாது பிடியாணையைப் பெற்று என்னைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்தமை அடிப்படை மனித உரிமை மீறலாகும். அத்துடன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள என்னை மீண்டும் சிறையில் அடைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சியும் அரசியல் சூழ்ச்சியாகும். இவ்வாறு மனித உரிமை ஆணைக்குழுவில் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன முறையிட்டுள்ளார்.**

ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசாவுடன் நேற்றுமுன்தினம் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன இந்த முறைப்பாட்டை தெரிவித்துள்ளார்.



வெள்ளை வான் கடத்தல் சம்பவம் தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பை ஏற்பாடு செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தற்போது பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரால் தமக்கு அச்சுறுத்தல் உள்ளது என்று வெள்ளை வான் கடத்தல் விவகாரம் தொடர்பில் செய்தியாளர் மாநாட்டை நடத்திய இருவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். அதையடுத்தே ராஜித சேனாரத்ன நேற்று மனித உரிமை ஆணைக்குழுவில் தனது முறைப்பாட்டை முன்வைத்துள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி தேர்தலின் போது வெள்ளை வான் கடத்தல் சம்பந்தமாக நடத்தப்பட்ட ஊடக சந்திப்பு தொடர்பில் தன்னை கைது செய்ய புலனாய்வுப் பிரிவினர் தயாராகிய நிலையில் சட்டத்தரணி மூலம் முன் பிணை மனுத் தாக்கல் செய்து நீதிமன்றம் அந்த மனுவை ஏற்றுக்கொண்டு விசாரணைக்குத் திகதி குறிப்பிட்டிருக்கையில் என்னைக் கைது செய்தனர்.

பிணை வழங்கக்கூடிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்த நிலையில் நீதிமன்றில் அழைப்பாணையைப் பெறாமல் சட்டரீதியற்ற முறையில் பிடியாணையைப் பெற்று என்னைக் கைது செய்தமை அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

கடந்த 30ஆம் திகதி கொழும்பு நீதிவான் நீதிமன்றால் பிணை வழங்கப்பட்டுள்ளது, அதை மீளாய்வு செய்யக் கோரி சட்டமா அதிபர் திணைக்களத்தால் மேல் நீதிமன்றில் மீளாய்வு மனு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு திகதி குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், வழங்கப்பட்டுள்ள பிணையைத் திட்டமிட்டு இரத்து செய்வதற்கான நோக்கத்தில் முதலாம் இரண்டாம் சந்தேக நபர்களின் ஊடாகப் பொய்யான குற்றச்சாட் டொன்றை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் பதிவு செய்து என்னை சிறையில் அடைப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. இதுவும் என்னை சிறையில் அடைப்பதற்கான சூழ்ச்சியாகும் - என்றுள்ளது. (எ)

## விளையாட்டு திடல் திறன் வகுப்பறை திறப்பு விழாக்கள்

யாழ்ப்பாணம்,ஜன.30

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமுக நிலையமும், குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் ஆதரவில் இயங்கும் குட்டிச்சுட்டி முன்பள்ளி அகம் குழந்தைகள் பகல் நேரக்காப்பக மாணவர்களின் விளையாட்டுத்திடல் மற்றும் திறன் வகுப்பறை திறப்புவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு முன்பள்ளி பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

நிலையத் தலைவர் து.சுதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக குமரன் விளையாட்டுக் கழகம் கனடாக்கிளை உறுப்பினர் ந.உமாகாந், நல்லூர் பிரதேச சபை தவிசாளர் தா.தியாகமூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ.பிரதாப், ஓய்வு நிலை அதிபர் சண்.வாமதேவன் ஆகியோர் கலந்து கொள்வர்.

விளையாட்டுத் திடலை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும், திறன் வகுப்பறையை குமரன் விளையாட்டுக் கழக கனடாக்கிளை உறுப்பினர் ந.உமாகாந்தும் திறந்து வைப்பர். (சு-222)

## மாநகர சபைக்கு 3 வாகனங்கள்

யாழ். மாநகர சபை முதல்வரின் முயற்சியால் உலக வங்கியின் அன்பளிப்பில் 3 வாகனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. மாநகர சபையின் தேவை தொடர்பில் உலக வங்கியிடம் விடுத்த கோரிக்கையின் பயனாக, 3 குப்பையேற்றும் வாகனமும், தீ அணைப்பு சேவைக்கான ஓர் இலகு இயந்திரமும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் முதல் கட்டமாக ஒவ்வொன்றும் 1.4 மில்லியன் ரூபா பெறுமதியான குப்பையேற்றும் வாகனங்கள் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அதே போன்று தீ அணைப்பு சேவை இயந்திரம் விரைவில் சபைக்கு கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-105)



## ஜப்பான் தூதரும் ரவிகரனும் சந்திப்பு

முல்லைத்தீவு, ஜன. 30

வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரனுக்கும் ஜப்பான் தூதரக அரசியல் பிரிவு ஆய்வாளரும், ஆலோசகருமான அகிரா ஹொகமுராவுக்கும் இடையில் நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. முல்லைத்தீவு கள்ளப்பாடு, வடக்கு பகுதியில் அமைந்துள்ள ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் சந்திப்பு இடம்பெற்றது.

சந்திப்பு தொடர்பில் ரவிகரன் கருத்துத் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், புதிய அரசின் காலத்தில் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், அரசியல் ரீதியாக உள்ள பிரச்சினைகள், தமிழ் மக்களுக்கான தீர்வு தொடர்பிலான விடயங்கள், ஒட்டுமொத்த தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. - என்றார். (து-246)



# கூட்டணித் தலைமை சஜித் பிரேமதாசவுக்கு

## *ரணில் பச்சைக்கொடி; தலைவர் பதவியை விட்டுக்கொடுக்க மறுப்பு*

**கொழும்பு, ஜன.30**

**ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான பரந்துபட்ட அரசியல் கூட்டணியின் தலைமைப் பதவியை சிறப்பு அதிகாரங்கள் சகிதம் சஜித் பிரேமதாசவுக்கு வழங்குவதற்கு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க பச்சைக் கொடி காட்டியுள்ளார் என அறியமுடிகின்றது.**



ஐ.தே.க. தலைமைப்பதவியில் தானே தொடர்ந்தும் நீடிப்பார் என்றும், மாற்றம் தேவையெனில் தேர்தலின் பின்னர் அது குறித்து பரீசிலிக்கலாம் எனவும் அவர் இடித்துரைத்துள்ளார் எனவும் தெரியவருகின்றது.

எனினும், பொதுத்தேர்தலின் போது வேட்புமனு வழங்கல், தேர்தல் பரப்புரை நடவடிக்கையை வழிநடத்தல் உட்பட மேலும் சில விடயங்கள் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரத்தை சஜித்துக்கு வழங்குவதற்கு ரணில் தயாராக இருக்கிறார் என தெரியவருகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு சார்பான ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கடந்த திங்கட்கிழமை கொழும்பில் கூடி கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்தனர்.

பொதுத்தேர்தலை ஐ.தே.க. தலைமையிலான பரந்துபட்ட கூட்டணியிலேயே எதிர்கொள்ள வேண்டும் என்றும், அவ்வாறு நடைபெற வேண்டுமானால் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினை முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் எனவும் உறுப்பினர்கள் கருத்துகளை முன்வைத்தனர்.

"ஐ.தே.க. தலைமையில் அமையும் கூட்டணியின் தலைவர் பதவி சிறப்பு அதிகாரங்கள் சகிதம் சஜித்துக்கு வழங்கப்பட வேண்டும். கட்சி தலைவர் பதவியில் நீடிக்க விரும்பும் ரணில் விக்கிரமசிங்கவும் இதற்கு உடன்பட்டுள்ளார்." என்று ரணில் ஆதரவு அணி உறுப்பினர் தெரிவித்தார். எனினும், கூட்டணியின் தலைமைப்பதவி கருவுக்கு வழங்கப்பட வேண்டும் எனச் சில உறுப்பினர்கள் வாதிட்டனர். அவ்வாறு நடந்தால் பிரச்சினையை தீர்க்க முடியாது என கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த சந்திப்பின் பின்னர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த ஐ.தே.க. உறுப்பினர்கள் சிலர் கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்கள் பற்றி எடுத்துரைத்தனர். இதன் போது கூட்டணியின் தலைமைப் பதவியை வழங்குவதற்கு தயாராகவே இருக்கின்றார் என்று ரணில் குறிப்பிட்டுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

அதேவேளை, ரணில் விக்கிரமசிங்க, கருஜயசூரிய, சஜித் பிரேமதாச ஆகிய மூவரையும் ஒரேநேரத்தில் சந்திக்கவைப்பதற்கான முயற்சியில் அக்கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இறங்கியுள்ளார். (எ-44)



# வந்தது வெளிச்சவீடு!

## *அலைபேசியில் கண்காணிப்பது வெற்றி என்கிறது வாலிபர் சங்கம்*

யாழ்ப்பாணம், ஜன. 30

சேந்தாங்குளம், மாதகல், குசுமாந்துறை மீனவர்களின் நன்மை கருதி அமைக்கப்பட்ட வெளிச்சவீட்டுக்கு இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினர் மின்குமிழ் பொருத்தி அதை அலைபேசியில் கண்காணிக்கும் முயற்சியில் நேற்றுமுன்தினமிரவு ஈடுபட்டிருந்தனர். இது வெற்றியளித்துள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சுமார் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவில் கட்டப்பட்ட இந்த வெளிச்ச விளக்கு, சூரியகலத்தின் மூலமாக மின்கலத்தில் மின்சாரத்தை சேமித்து, சுயமாக இரவு நேரங்களில் ஒளிரும். பகலில் ஓய்வடையும்.

இதை அலைபேசியில் கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் முடியும். வெளிச்ச வீச்சு, வெளிச்சத்தின் அளவு, பிரகாசிக்கும் முறைமை, மின்கலத்திலுள்ள மின்சாரத்தின் அளவு போன்ற அனைத்தையும் எங்கிருந்தவாறும் அலைபேசியில் கட்டுப்படுத்த முடிவதோடு, ஏதேனும் கோளாறுகள் ஏற்படின் அலைபேசிக்கு கிடைக்கும் குறுந் தகவலின் அடிப்படையில் உடனடியாகச் சீர்செய்யவும் முடியும்.

இது கடலின் தொலை தூரத்துக்குச் சென்ற மீனவர்களுக்கு இலகு வழிகாட்டியாக இருக்கும். சுழிபுரம் பின் கடற்பகுதி வரை இந்த வெளிச்ச விளக்கு தென்படுகின்றது என்றும் சங்கத்தினர் தெரிவித்தனர்.

இது விரைவில் கோலாகலமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது என்று மேலும் தெரிவித்தனர். (து-222)

# சைவப்புலவர்களுக்கு பரீட்சை வழிகாட்டல்

யாழ்ப்பாணம்,ஜன.30

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்படவுள்ள 2020 ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளஞ் சைவப்புலவர் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான வழிகாட்டல் அறிமுக நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ்.வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும்.

வழிகாட்டல் அறிமுக நிகழ்வில் பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைத்துப் பரீட்சார்த்திகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப் புலவர் சங்கச் செயலாளர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

பரீட்சைக்குவிண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள் பிரதி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 1 மணி வரை இந்தப் பாடசாலையில் நடைபெறும்.

பரீட்சை வழிகாட்டல் வகுப்பில் இலக்கணம், சாத்திரம், உரைநடை, இலக்கியம், வரலாறு ஆகிய ஐந்து பாடங்களும் இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைக்குத் தோற்றுவோர் என இரு பிரிவாக தனித்தனியே வகுப்புகள் நடைபெறும்.

பரீட்சைகள் ஏப்ரல் மாதம் 10,11,12 ஆம் திகதிகளில் நடைபெறும். பரீட்சை வழிகாட்டல் அறிமுக நிகழ்விலும், வழிகாட்டல் வகுப்புகளிலும் விண்ணப்பதாரிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுள்ளார். (க)



# பெற்றோர் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜன.30

சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலய மாணவர்களின் பெற்றோர்களுடனான சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

2020 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தர தொடர் வகுப்புக்களை மேற்கொள்ளும் நோக்குடன் ஆசிரியர்கள் பெற்றோர்களைச் சந்தித்தனர்.

சிறகுகள் அமைய நாணல் செயற்றிட்ட செயற்பாட்டாளர்களால் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தப் பாடசாலை மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான, ஆங்கிலச் செயலமர்வுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (க-222)

# செயற்பட்டு மகிழ்வோம்

கொடிகாமம்,ஜன.30

கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் திருமதி புஸ்பராணி மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் தென்மராட்சிக் கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சிவத்திரை சிவநாதன், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி அபிவிருத்தி ஒன்றியத்தின் விளையாட்டு செயலாளர் ம.சிறிதாசன், கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் அதிபர் க.மங்களேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-159)



# மருத்துவரை நியமிக்குமாறு முல்லைத்தீவில் போராட்டம்

முல்லைத்தீவு, ஜன. 30

மருத்துவரை நியமிக்கக் கோரி முல்லைத்தீவு பிராந்திய சுகாதார பணிமனை வளாகத்தில் மக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். முல்லைத்தீவு நகரைச் சேர்ந்த பொது அமைப்புக்கள், கிராம அமைப்புக்கள், வர்த்தக சங்கத்தினர், கடற்றொழிலாளர் சங்கத்தினர், பேருந்து சங்கத்தினர், பொதுசந்தை வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்று திரண்டு கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு பிரதேச மருத்துவமனையில் நாள்தோறும் மாத்தளன் தொடக்கம் கொக்கிளாய் வரையான கிராமங்களைச் சேர்ந்த 200 வரையான நோயாளிகள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைபெற்று வருகின்றார்கள்.

2018 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த மருத்துவமனைக்கு என நிரந்தர மருத்துவர் எவரும் நியமிக்க ப்பபாதநிலையில்நோயாளர்கள்சிகிச்சை பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

அரச சட்டப்படி மூன்று மருத்துவர்கள் நிரந்தரமாக சேவையாற்ற வேண்டிய மருத்துவமனையில் இன்று ஒரு மருத்துவர்கூட இல்லை. இந்தநிலை தொடர்கின்றது.

நோயாளர்கள் மாவட்ட மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெறுமாறு திருப்பி அனுப்பப்படுகின்றார்கள்.

இவ்வாறான நிலையில் பிராந்திய சுகாதாரப் பணிமனையினர் மருத்துவரை இதுவரை நியமிக்கவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள், திணைக்கள அதிகாரிகளுக்கு இந்த விடயம் குறித்து தெரியப்படுத்தியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. போரால் பாதிக்கப்பட்டு, சுனாமியால் பாதிக்கப்பட்டு இன்று நோயாலும் முல்லைத்தீவு மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள்.

எனவே பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பில் கவனம் எடுத்து மருத்துவரை நியமி க்குமாறு போராட்டகாரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

போராட்டம் இடம்பெற்றபோது முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிமனை வளாகத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

மாகாண சுகாதாரப் பணிப்பாளர் நேரில் வந்து சாதகமான முடிவைத் தரும்வரை போராட்டம் தொடரும் என்றும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். (த-19)

## குருநகரில் 3 இடங்களில் விசர்நோய் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட மூன்று இடங்களில் நாய்களுக்கு நாளை விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. முற்பகல் 9 தொடக்கம் 11 வரை பாங்சால் வீதி 4ஆம் குறுக்குத் தெரு சந்தியிலும், முற்பகல் 11தொடக்கம் மதியம் ஒரு மணி வரை யாகப்பர் ஆலயத்துக்கு அருகிலும்,பிற்பகல் 2.30தொடக்கம்பிற்பகல் 4 மணிவரை புதுமை மாதாஆலயத்துக்குஅருகிலும் வைத்து விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றப்படும். வளர்ப்புநாய்களுக்குஉரிமக் கட்டணமாக 30 ரூபா செலுத்தி தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு மேற்குறித்த பகுதி மக்களுக்கு சுகாதார மருத்துவ அதிகாரி அறிவுறுத்தியுள்ளார். (த)

## வாக்காளராக இணைய மற்றுமொரு சந்தர்ப்பம்

மூளாய், ஜன.30

வாக்காளர் இடாப்பில் பெயர்களை இணைத்துக்கொள்ளத் தவறியவர்களுக்கு மற்றுமொரு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

இடப்பெயர்வு காரணமாகவும் வேறு காரணங்களாலும் இதுவரை தமது பெயரைப் பதிவுசெய்யாதவர்கள் உடனடியாகப் பதிவுசெய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

போர் நிறைவடைந்த பின்னர் நாட்டின் எந்தப் பகுதியிலும் இதுவரை வாக்காளர் இடாப்பில் இணைந்து கொள்ளாதவர்கள் தற்போது வழங்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

இந்த நடவடிக்கை கடந்த 25 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் தேர்தல்கள் செயலகம் மேற்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக விஷேட வர்த்தமானி ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

தேவை உடையவர்கள் தமது பகுதி கிராம அலுவலரிடம் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கமுடியும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-121)

## இந்த வருடமும் ஒத்துழையுங்கள்

### மன்னார் நகர சபை தவிசாளர் கோரிக்கை



மன்னார், ஜன. 30

கடந்த வருடம் மன்னார் நகர சபையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆதரவு வழங்கியமைபோன்று இந்த வருடமும் சகல உறுப்பினர்களும் வேலைத் திட்டங்களுக்கு முழுமையான ஆதரவு வழங்க வேண்டும் என்று மன்னார் நகர சபைத் தவிசாளர் ஞா.அன்ரனி டேவிட்சன் கோரினார். சபையின் 23ஆவது அமர்வும் 2020 ஆம் ஆண்டுக்கான முதல் அமர்வும் சபையின் சபா மண்டபத்தில் நேற்று தவிசாளர் தலைமையில் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரவு,செலவுத் திட்டங்களுக்கு அமைவாக உரிய காலப்பகுதிக்குள் வேலைத்திட்டங்களை முடிக்கவேண்டும். அதற்காக முதலாவது காலாண்டு பகுதிக்குள் மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்து சபையில் கலந்தாலோசித்து தீர்மானம் எடுக்கவேண்டும் என்று தெரிவித்தார். இந்த அமர்வில், வட்டார ரீதியில் வீதி சீரமைப்பு உட்பட பல்வேறு திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டன.

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் குறை நிறைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன. (த-56)

## முல்லை. மருத்துவமனையின் உண்மை நிலைமை இது தான்

### பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி விளக்க அறிக்கை

முல்லைத்தீவு.ஜன.30

முல்லைத்தீவு பிரதேச மருத்துவமனையின் உண்மை நிலை தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டப் பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சுகந்தன் விளக்க அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முல்லைத்தீவு பிரதேச மருத்துவமனை ஆரம்ப காலங்களில் மாவட்ட மருத்துவமனையாக இயங்கி வந்துள்ளது.

பின்னர் மாவட்டப் பொது மருத்துவமனை மாஞ்சோலையில் நிர்மாணிக்கப்பட்டு இயங்கி வருகின்றது. ஆரம்ப காலத்தில் இருந்தே இது ஒரு பழக்கப்பட்ட மருத்துவமனையாக உள்ள காரணத்தால் தினமும் சராசரி 150 நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவுக்கு வருகை தருகின்றனர்.

மருத்துவமனையில் அவசர சிகிச்சை, பொது மருத்துவச் சிகிச்சை, அடிப்படை ஆய்வுகூட சேவைகள், மற்றும் தொற்றா நோய்க்கான ஆரோக்கிய வாழ்க்கை முறை நிலையத்தின் நடவடிக்கைகள் போன்ற பல சேவைகள் இடம்பெறுகின்றன.

இங்கு நான்கு தாதிய உத்தியோகத்தர்கள், மருந்தாளர் ஒருவர், மருந்துக் கலவையாளர் ஒருவர்,ஆய்வுகூடப் பரிசோதகர் ஒருவர் மற்றும் பதினொரு சுகாதாரப் பணியாளர்கள் என மனித வளம் காணப்படுகின்றது.

மருத்துவமனை ஆரம்ப சுகாதார சேவைகளை மேம்படுத்தும் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளதால் பல அபிவிருத்திகள் அடுத்துவரும் மூன்று வருடங்களிலும் ஏற்படுத்தப்படும். இங்கு கடந்த ஒரு வருடமாக நிலையான மருத்துவர் இல்லாத நிலைமையே காணப்படுகின்றது.

மருத்துவமனைக்கு நியமிக்கப்பட்ட இரண்டு மருத்துவர்களில் ஒருவர் தனது வேலையைத் துறந்து வெளிநாட்டுக்குச் சென்றமை மற்றவர் தனது மகப்பேற்று விடுமுறைகளின் பின்னர் சம்பளம் நிறுத்தப்பட்ட நிலையிலும் கடமைக்குத் திரும்பாமை போன்ற காரணங்களால், தற்காலிகமாக வேறு மருத்துவமனை மருத்துவர்கள் இங்கு கடமைக்கு அமர்த்துப்படுகின்றனர்.

பின்னர் அந்த மருத்துவமனைகளில் பிரச்சினைகள் வரும் போது வேறு மருத்துவமனைகளில் இருந்து மருத்துவர்களைக் கடமைக்கு அமர்த்துவது எனத் தற்காலிக நிர்வாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிரந்தர மருத்துவர்களின் தேவைகள் சுகாதாரத் திணைக்களத்தின் பல்வேறுமட்ட உயர் அதிகாரிகள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ஆளுநரின் கூட்டங்கள், ஊடகங்கள் போன்ற பல இடங்களிலும் வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர பொதுமக்கள் பிரதிநிதிகளுடன் பல சந்திப்புகளை நடத்தி அவர்களுக்கூடாகவும் பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது மருத்துவமனையில் மாவட்டத்தில் உள்ள வெவ்வேறு பிரிவுகளிலும் உள்ள மருத்துவர்கள் சுழற்சி முறையில் தமது கடமைகளுக்கு மேலதிகமாக காலை 8 மணி முதல் மதியம் இரண்டு மணி வரை கடமையாற்றி வருகின்றனர்.

இந்த ஒழுங்குபடுத்தல்களின் போது சில நாள்களில் மருத்துவர் இல்லாத நிலையும் ஏற்படுவதுண்டு.


உள்ளகப் பயிற்சிகளை நிறைவு செய்த மருத்துவர்களை வெகு விரைவில் நியமிக்கப்பட உள்ளனர் என உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மாவட்டத்தில் இருந்து தெரிவாகி மருத்துவர்களாகப் பல்வேறு இடங்களிலும் இருக்கும் மருத்துவர்கள் வருடாந்த இடமாற்றத்தின் மூலம் இங்கு வருகை தந்து சில வருடங்களுக்கேனும் கடமையாற்ற முன்வரவேண்டும்.

இதை மக்களும் மருத்துவ ஒன்றியங்களும் ஊக்கப்படுத்த வேண்டும்-என்றுள்ளது.

(க-19,105,246)

# பரபரப்புக்கு மத்தியில் கூடுகின்றது ஐ.தே.க.



**கொழும்பு, ஜன. 30**
**ஐக்கிய தேசியக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு சிறிகொத்தவில் நடைபெறவுள்ளது.**

இந்தக் கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்குமாறு செயற்குழு உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தலைமைத்துவப் பிரச்சினையால் ஐக்கிய தேசியக்கட்சி இரு அணிகளாகப் பிரிந்துள்ளது.

கட்சி தலைமைப்பதவி சஜித்துக்கு வழங்க வேண்டும் என சஜித் அணியும், பொதுத் தேர்தலின் பின்னரே தலைமைப் பதவியில் மாற்றம்-இடம்பெறுவது பற்றி பரிசீலிக்க வேண்டும் என ரணில் அணியும் வலியுறுத்தி வருகின்றன.

பொதுவெளியில் இரு அணிகளும் கடும் சொற்சமரில் ஈடுபட்டு வருகின்றன. மறுபுறத்தில் கட்சியை ஐக்கியப்படுத்தும் முயற்சியில் மூத்த உறுப்பினர்கள் சிலர் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறானதொருபின்புலத்திலேயே மத்திய செயற்குழு இன்று கூடுகின்றது. தலைமைத்துவப் பிரச்சினை, அரசியல் கூட்டணி உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்படவுள்ளன.

முக்கியமாகத் தலைமைத்துவப் பிரச்சினை தொடர்பில் நாடாளுமன்றக் குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்பத்தின் பிரகாரம் தீர்மானம் எடுக்கப்படும் என கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டு வரை கட்சித் தலைமைப்பதவியை விட்டுக்கொடுக்க ரணில் தயாரில்லை என்றும், கூட்டணியின் தலைமைப்பதவியை சஜித்துக்கு வழங்குவதற்கு பச்சைக்கொடி காட்டியுள்ளார் என்றும் அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்தனர். (எ-44)

# அதிதி உரை

யாழ்ப்பாணம்.ஜன.30
யாழ்.பல்கலைகழக கலைப்பீட புவியியல் துறை திட்டமிடல் பிரிவினால் நடத்தப்படும் அதிதி உரை நிகழ்வு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1 மணி தொடக்கம் 4 மணிவரை நடைபெறும்.

புவியியற்றுறைத் திட்டமிடல் பிரிவின் மக்கள் மயப்படுத்தப்பட்ட அறிவு மற்றும் திறன் பரப்பு கைச்செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாகவே அதிதி உரை நிகழ்வு நடைபெறும்.

அதிதி உரையை ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் பால்ஸ்ரேற் பல்கலைக்கழகப் பேராசிரியர் நிகால் பெரேரா நிகழ்த்துவார். (க-20)

# மெய்வன்மை போட்டி

சாவகச்சேரி,ஜன.30
மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் சு.சிவானந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக வரணி ஆசிரிய வாண்மை விருத்தி நிலைய முகாமையாளர் வே.திருச்சபேசன், சிறப்பு விருந்தினர்களாக வித்தியாலய பழைய மாணவர்களான வை. இரத்தினகுமார், வை.விஜயகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (க-9)



# கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜன.30
இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உறவுப்பாலத்தை ஏற்படுத்தும் முகமாக இந்தியாவில் இலங்கை மாணவர்களுக்கான கல்வித் திட்டம்( இலங்கை மாணவர்களுக்கான விசேட புலமைப்பரிசில்) தொடர்பான இந்தியக் கல்விக் கண்காட்சி யாழ்.வலம்புரி ஹோட்டலில் நேற்று நடைபெற்றது.

இந்திய அரசு வெளிநாட்டு மாணவர்களுக்கு என்னென்ன புலமைப்பரிசில்களை வழங்குகிறது என்பதை இந்தக் கண்காட்சி ஊடாகப் பார்க்கக் கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கண்காட்சி நாளையும் நடைபெறும்.

ஆரம்ப நிகழ்வில், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத்தூதுவர் கே. பாலச்சந்திரன், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், யாழ்ப்பாண பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், யாழ் மாநகர முதல்வர் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-20)

# நீர் நிலைகளில் மீன் குஞ்சுகள்

வவுனியா. ஜன. 30
பருவகால நீர்த் தேக்கங்களை மையப்படுத்தி வவுனியா மாவட்ட குளங்களில் மீன் குஞ்சுகள் விடப்பட்டன.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வவுனியா மாவட்ட நிர்வாகத்தினரால் மீன் குஞ்சுகள் விடப்பட்டன.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்திட்டத்தின்படி தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை நடைமுறைப் படுத்திவரும் இந்தத் திட்டத்தின் பிரகாரம் நேற்றுமுன்தினம் மீன் குஞ்சுகள் விடப்பட்டன. (து)






# இ.போ.ச. பணியாளர்கள் யாழ். நகரில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 30
இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாண மாவட்ட சாலைகளின் சாரதிகள் மற்றும் காப்பாளர்கள் நேற்றுக் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

போதைப்பொருளுக்கு எதிராக பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் சிறந்த நடவடிக்கையில் பாதிக்கப்படும் சாரதி காப்பாளர்களைப் போக்குவரத்துச் சபையின் உயர் அதிகாரிகள் கண்டுகொள்ளவில்லை என்று கண்டித்தும், யாழ்ப்பாண மத்திய பஸ் நிலையத்துக்குள் பொலிஸ் காவலரண் அமைக்கவேண்டும் என்று கோரியும் அவர்கள் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கமராக்கள் செயலிழந்துள்ளன. நாளாந்தம் வருகைதரும் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். பஸ் நிலையத்தில் இடம்பெறும் சமூக விரோத செயல்களைக் கட்டுப்படுத்த பஸ்நிலையத்துக்குள் பொலிஸ் காவலரண் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற பாதுகாப்பு கூட்டத்தில் யாழ்ப்பாண மத்திய பஸ் நிலையத்தில் அதிக சமூகவிரோத செயல்கள் இடம்பெறுகின்றமை தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் யாழ்ப்பாண நகருக்கு வரும் தனியார் கல்வி நிலைய மாணவர்கள் முகம் சுழிக்கும் வகையில் நடந்துகொள்கின்றனர். எனவே பஸ் நிலையத்துக்கு நிரந்தரப் பொலிஸ் காவலரண் அமைக்கப்பட வேண்டும் என்றும் பணியாளர்கள் கோரிக்கை விடுத்தனர். (து-111,20)





வவுனியா நீர்ப்பாசன திணைக்களத்தினரால் குளப்பகுதிகளில் மரநடுகைத்திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. திணைக்களத்தின் அதிகாரிகள், வவுனியா குடியிருப்புக் குளத்தின் அருகாமையில் மரங்களை நட்டனர். (க-110)

# "கொரோனா" பற்றி ஆராய கூடுகிறது மேற்பார்வைக் குழு

கொழும்பு, ஜன.30

சீனாவில் பரவிய கொரோனா வைரஸ் தாக்குதலைத் தொடர்ந்து இலங்கையில் நோய் தொற்றுக்கு உள்ளான ஒரு சீனர் அடையாளம் காணப்பட்டிருக்கின்றமையால், "கொரோனா வைரஸ்" தாக்கத்தின் இலங்கை நிலை பற்றி ஆராய சுகாதாரம் மற்றும் மனித நலனோம்பு விடயங்க ளுக்கான துறைசார் நாடாளுமன்ற மேர்பார்வை குழு இன்று அவசரமாகக் கூடவுள்ளது என்று குழுவின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான மயில் வாகனம் திலகராஜ் தெரிவித்துள்ளார்.



இந்த வாரம் நாடாளுமன்ற அமர்வுகள் இல்லாதபோதும் கொரனா வைரஸ் தாக்கம் தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு அறிக்கை இடுவதற்காக சபாநாயகரின் ஆலோசனையின் பேரில்இன்று 30 ஆம்திகதி காலை பத்து மணிக்கு நாடாளு மன்றக் குழு அறையில் அவசரமாகக் கூட உள்ளது.

இது தொடர்பான அவசர அறிவித்தல்கள் குழுவின் உறுப்பினர்களான ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சுகாதார அமைச்சின் துறைசார் அதிகாரிகளுக்கும் விடுக்கப்பட்டுள்ளது என்றும், அடுத்த வாரம் நாடாளுமன்ற அமர்வுகள் கூடுமிடத்து இந்த கூட்டம் தொடர்பான அறிக்கையை தேவை ஏற்படின், சபையில் சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குழுவின் தலைவர் நாடாளு மன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் திலகர் தெரிவித்துள்ளார். (ஏ)

# குருநகர் ஒஸ்லோ இணையத்தின் பரிசளிப்பு விழா

குருநகர்.ஜன.30

குருநகர் பேர்கன் ஒஸ்லோ இணையத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த சனிக்கிழமை சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அமைப்பின் தலைவர் க.சிலுவைதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள், 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும், க.பொ.த சாதாரணதரம், க.பொ.த உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களுக்குப் பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் குருநகர் புனித யாகப்பர் ஆலயத் தந்தை வணபிதா யஸ்ரின் சாள்ஸ் அடிகளார், யாழ் சென் ஜேம்ஸ் மகா வித்தியாலய அதிபர் க. கலியுகன், யாழ். சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை அதிபர் அ. மரியதாஸ் மற்றும் அரச பாடசாலைகளின் விளையாட்டுப் பயிற்றுநர் அ.சுரேன், நாவாந்துறை அன்னை கடலுணவு வாணிபத்தின் தலைவர் செ. மரியதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-51)


## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
17 . 02 . 1934



ஆண்டவன் அடியில்
27 . 01 . 2020

## இராசையா தங்கம்மா

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் டச்சுறோட் வீமன்காமம் தெல்லிப்பழை மற்றும் நீர்கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா தங்கம்மா 27.01.2020 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - கதிராசி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி கதிராசிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற இளையதம்பி இராசையாவின் (சீமெந்து கூட்டுத்தாபனம்) பாசமிகு மனைவியும், நவநீதராஜா (சந்திரன்), சௌந்தர்ராஜா (ரவி), விஜயராஜா (விஜயன் - பிரான்ஸ்), சிறீஸ்கந்தராஜா (சிறி - லண்டன்), அசோகராஜா (அசோகன் - சுவிஸ்), மோகனதாசன் (மோகன் - சுவிஸ்), வினோதினி (வினோ - ஜேர்மனி), மன்மதராசன் (மதன்), நியதினி (நியதா - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், மதிவதனி, கமலேஸ்வரி, தமிழ்ச்செல்வி, சிவாத்திரிநயனி, சுபாசினி, கலைமதி, குழந்தைவடிவேல் சூரியகலா, வேணுதாஸ் ஆகியோரின் அன்பு மாமியும், இராசையா, காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி கண்மணி, அன்னம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், வைத்திலிங்கம், கந்தையா, சின்னத்துரை, பாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுஜீரா, சோபனா, தனுஷ்காந், நிதர்ஷா, யபினேஸ், தனுசிகன், அத்வைதன், அட்ஷிகி, கேஷான், சுஸ்வின், கஜானி, வினுசன், மௌரிஷா, மானுஜா, மீரஜா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2020) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பழை கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வீமன் காமம்,**
**தெல்லிப்பழை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 756 4149**

(cs 30905) (13.17)



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் தியாகராஜா தங்கராஜா** (சின்னத்தம்பி)

(ஸ்தாபகர் - முருகன் மோட்டோஸ் ஸ்ரோர்ஸ் - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

மலர்வு
10 . 04 . 1938



உதிர்வு
23 . 01 . 2018

**திதி: 30.01.2020**

அன்புள்ள அப்பா!
உங்களின் மகளின் நினைவு மடல்

'அப்பா' என்ற மூன்று எழுத்தை மறுபடியும்
அழைக்க முடியாமல் தவிக்கின்றேன்
உன்தோள் மீது போட்டு என் துயரங்களை பகிர்ந்தாய்
உன் கைவிரல் பிடித்து வீதிகளில் நடத்திச் சென்றாய்
நான் அப்பா என்று அழைத்தால் நீங்கள் "ஓய்"
என்று கூறி என்னை கட்டி அணைத்து
எனது கன்னத்தில் முத்தம் பதிப்பீர்கள்
இப்பொழுது உங்கள் முத்தங்கள் இன்றி தவிக்கின்றேன் அப்பா!
ஒரு பெண் பிள்ளையை ஆண் பிள்ளையாய்
வளர்த்தீர்கள் சொந்தக்காலில் வலிமையுடன்
நிக்க வைத்தீர்கள் தனித்து வாழும் சுதந்திரம்
தந்தீர்கள் மற்றவர்களை மதிக்கவும்,
மரியாதை செலுத்தவும் கற்றுத் தந்தீர்கள்
வாப்பா போப்பா என்று அழைக்க ஒரு அப்பாவாகவும்
வாடா போடா பேச எனது முதல் ஆண் நண்பனாகவும் இருந்தீர்கள்
உங்களைப் பார்த்து எத்தனை முறை வியந்திருக்கின்றேன்
எனது கனவில் நீங்கள் மௌனமாக வந்துபோகிறீங்கள் அப்பா
எப்பொழுதும் மௌனமாக அழுகின்றேன் 'அம்மா' அறியாமல்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

88/5, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**

# விக்கி தெளிவடைய பிரார்த்திக்கின்றேன்

## வேண்டுகிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், ஜன.30

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெளிவடைய பிரார்த்திக்கின்றேன். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன், கூட்டமைப்பின் தலைமை மாறினால் இணையத் தயார் என்று கூறியிருந்தமை தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பத்திரிகையாளர் சந்திப்பில் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விக்னேஸ்வரன் குழப்பமான அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார். அவர் முதலில் தெளிவடைய வேண்டும். அதற்குப் பிரார்த்திக்கின்றேன், என்றார்.

**நாடாளுமன்றத் தேர்தல்**

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இளையோர், பெண்களுக்கு இடம் வழங்க வேண்டும். இதனை வெறும் உதட்டளவில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

நடைமுறையில் செயற்படுத்த வேண்டும் என்றால், கூட்டமைப்பில் ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு அடுத்த தேர்தலிலும் ஆசனம் வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை மாற்ற வேண்டும்.

யாராக இருந்தாலும், திறமையுள்ள இளையோர், பெண்களுக்கு இடம் வழங்க வேண்டும்.

எல்லாக் கட்சிகளும் தேர்தலில் தமது பட்டியலில் தோல்வியடையும் வேட்பாளர்களைக் களமிறக்குவார்கள். எங்கள் கட்சியும் அதற்கு விதிவிலக்கல்ல. எதிர்காலத்தில் அவ்வாறு செய்யக் கூடாது. வெற்றி வேட்பாளர்களையே களமிறக்க வேண்டும்-என்றார். (ஒ.5)

# மனித சீர்கேடுகளாலும் மரங்கள் அழிகின்றன

## ஒவ்வொருவரும் தடுத்து நிறுத்துங்கள் கிழக்கு ஆளுநர் வலியுறுத்துகிறார்



மட்டக்களப்பு, ஜன. 30

நாட்டில் ஏற்படுகின்ற காலநிலை மாற்றத்தாலும் சீர்கேடு காரணமாகவும் பல மரங்கள் அழிக்கப்படுகின்றன. இதனால் வரும் பாதிப்புக்களை நிவர்த்திசெய்ய மரக்கன்று நடுகைத் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்று கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா ஜகம்பத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் பசுமையான மாகாணம் தேசிய மரநடுகை திட்டத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிரதான நிகழ்வு வாழைச்சேனை கும்புறுமூலை சமூகசேவை திணைக்களத்தின் தொழில் பயற்சி நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் மேலும் தெரிவித்ததாவது:

இருபது இலட்சம் மரங்களை உருவாக்கும் திட்டத்தில் இன்று எண்பதாயிரம் மரக்கன்றுகளை நடுகின்றனர். இது புதிய அரசின் கொள்கைத் திட்டமாக இருந்தாலும், எமது மக்களிடையே ஒரு பழக்கம் இருக்க வேண்டும். மரக்கன்று நடுகையோடு பசுமை என்ற திட்டம் முன்னெடுக்க வேண்டும்.

கடந்த காலத்தில் ஆஸ்திரேலியாவில் காட்டுத் தீ ஏற்பட்டு மரங்கள் அழிந்தன. எமது நாட்டில் நாங்கள்தான் மரங்களைப் பாதுகாக்க வேண்டும். நாங்கள் சுவாசிக்கும் ஒட்சிசன் எங்களால் வளர்க்கப்படும் மரங்களின் மூலமாகவே கிடைக்கின்றது. ஒட்சிசன் நமக்குப் பயனுள்ளதாக அமையும்-என்றார். (து)

# பொய்களைக் கூறி அரசு காலம் கடத்தவே முயற்சி

## அஸாத் சாலி குற்றச்சாட்டு



*கொழும்பு, ஜன.30*

*அரசு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இதுவரை எந்தத் தீர்மானமும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. மார்ச் மாதம் வரைக்கும் பொய்களைத் தெரிவித்து காலத்தை கடத்துவதே அரசின் திட்டமாகும். இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி தெரிவித்தார்.*

தேசிய ஐக்கிய முன்னணி நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசு ஆட்சிக்கு வந்த நாள்முதல் பல்வேறு வைரஸ் தாக்கத்துக்கு ஆளாகி, மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் காலத்தை கடத்திவருவதை காண்கின்றோம். ஆரம்பமாக ரஞ்சன் ராமநாயக்கவின் குரல் பதிவு வைரஸில் சிக்குண்டு ஒரு மாதகாலத்தை கடத்தியிருந்தது.

அதன் பின்னர் பிணைமுறி மோசடி தொடர்பான தடயவியல் கணக்கறிக்கையைப் பிடித்துக் கொண்டு செயற்பட்டது.

தற்போது கொரோனா வைரஸை காரணம் காட்டுகின்றது.

அரசு ஆட்சிக்கு வரும்போது மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாக பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இதுவரை ஒரு தீர்மானமாவது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.

ஆனால் மக்களுக்கு தேவையான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளத் தேவையான சட்டதிட்டங்களை அங்கீகரித்துக்கொள்ள அரசுக்குப் பெரும்பான்மையில்லை.

அவ்வாறு சட்டமூலம் கொண்டு வந்து அது நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டால் அது அரசுக்கு நல்லதல்ல.

அதனால் தேர்தலில் அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கவேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ கூறுகின்றார்.

மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தேவையான தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, அது தோற்கடிக்கப்பட்டால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கூற்று நியாயமாகும்.

ஆனால் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கத்திடம் எந்த வேலைத்திட்டமும் இல்லை.

அரசு சிங்கள மக்களுக்கு பொய்க் குற்றச்சாட்டுக்களை தெரிவித்தும் இனவாத கருத்துக்களை பரப்பியுமே ஆட்சிக்கு வந்தது என்பதை தற்போது சிங்கள மக்கள் உணர்ந்து வருகின்றனர்.

ஏனெனில் அரசு தேர்தலுக்கு முன்னர் முஸ்லிம் மக்களுக்கு எதிராக தெரிவித்த எந்தக் குற்றச்சாட்டையும் இதுவரை உறுதிப்படுத்தவில்லை-என்றார். (எ)

# குருக்கள் செய்தால் குற்றமில்லையாம்

## தென்பகுதியைச் சேர்ந்தவர் வடகடலுக்கு நியமனம்

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ்ப்பாணத்திலுள்ள வடகடல் நிறுவனத்துக்கு பெரும்பான்மை இனத்தவரை தலைவராக நியமித்துள்ளார், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

நெடுங்காலமாக இந்தப் பதவியில் தமிழர்கள் நியமிக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது பெரும்பான்மை இனத்தவருக்கு டக்ளஸ் அந்தப் பதவியை வழங்கியுள்ளார். திஸ்ஸவீரசிங்க என்பவரே தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். வடகடல் நிறுவனம் உள்ளிட்ட நிறுவனங்கள், அதிகார சபைகளின் தலைவர்கள், பணிப்பாளர்கள் தற்போதைய ஜனாதிபதி தேர்வான பின்னர் தமது பதவிகளிலிருந்து விலகியிருந்தனர்.

கடந்த அரசின் காலத்தில், வடக்கில் சிங்களவர்களை அரசு நியமித்துள்ளது என்று குற்றம் சாட்டியோர், தற்போது ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் நிலையில், இவர்களும் சிங்களவர்களை வடக்கில் நியமிக்கின்றனர். இது எந்தவிதத்தில் சரியாகும்? 'குருக்கள் செய்தால் குற்றமில்லை' என்று முதுமொழிதான் ஞாபகம் வருகின்றது என்று பலரும் கூறுகின்றனர். (து-105)

# திறன் வகுப்பறை திறப்பு விழா

பளை,ஜன.30

தர்மக்கேணி அ.த.க.பாடசாலையில் அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும்.

அதிபர் வே.செல்வகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொள்வார். (க-9)

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜன.30

சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஆயர்.பி.டியோகுப்பிள்ளை அரங்கில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஹோல்டிங் லிமிட்டெட் இயக்குநர் அலெக்ஸ்ஸிஸ் இந்திரஜித், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் (அபிவிருத்தி) பி.ஈ.ஜி.சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

****

உரும்பிராய் இந்துக்கல்லூரியின் இல்லமெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் அ.அருணந்திசிவம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதமவிருந்தினராகச் சீமெந்துக்கூட்டுத்தாபன முன்னாள் இறக்குமதி முகாமையாளர் லயன் இ.கொர்னேலியஸ், சிறப்பு விருந்தினராக வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் (கணிதம்) சு.சரவணபவன், கௌரவ விருந்தினராக ஓய்வு நிலை ஆசிரியர் செ.குணரத்தினம் ஆகியோர் கலந்துகொள்வர்.

****

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்குக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் ச.சிவகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) அ.இராஜசீலன், சிறப்பு விருந்தினராக விக்ரோறியாக் கல்லூரி ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி தி.கதிர்காமநாதன், கௌரவ விருந்தினராக பழைய மாணவர் இ.விஜயநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர். (க)



# பாரதி வித்தி. விளையாட்டு நிகழ்வுகள்

கொடிகாமம்,ஜன.30

மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியும், செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வும் கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலையில் நடைபெற்றன.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டன.

அதிபர் திருமதி ஆ.இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் விலை மதிப்பீட்டுத் திணைக்கள வடபிராந்திய காரியாலய உதவி மாவட்ட விலை மதிப்பீட்டாளர் திருமதி அ.இரத்தினராசா, சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி சி.சிறிதரன், கௌரவ விருந்தினராக பளை பிரதேச செயலக பொருளாதார உத்தியோகத்தர் திருமதி சு.சிவரதன், தென்மராட்சிக் கல்வி வலய தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார், ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசன் மற்றும் அயற் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மர்ணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (க-159)

# ராஜபக்ஷ ஆட்சியை எவரும் கவிழ்க்கவே முடியாது!



## இப்படி அடித்துக் கூறுகின்றார் பிரதமர் மஹிந்த

கொழும்பு, ஜன.30

**தேசிய வளங்களைப் பிறநாட்டவருக்குத் தாரைவார்ப்பது எமது அரசின் கொள்கையல்ல. கடந்த அரசின் செயற்பாடுகள் தேசிய வளங்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாகக் காணப்பட்டன, இவற்றைக் கருத்தில்கொண்டு மக்கள் மீண்டும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். மக்கள் எம் மீது கொண்டுள்ள நம்பிக்கை முழுமையாகப் பாதுகாக்கப்படும். எமது ஆட்சியை இனிமேல் எவரும் கவிழ்க்கவே முடியாது.**

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சுங்கத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிதி அமைச்சர் என்ற அடிப்படையில் சுங்கத் திணைக்களத்துக்கு இதுவரையில் நான்கு முறை மாத்திரமே வந்துள்ளேன். சர்வதேச சுங்கத் தினம் ஜனவரி மாதம் 26ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. உலக சுங்க அமைப்பு 1952ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் திகதி உருவாக்கப்பட்டது. இருப்பினும் இலங்கை சுங்கத் திணைக்களம் 210 வருட கால பழமை வாய்ந்தது.

இலங்கையில் சுங்கச் சேவை 1806ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திணைக்களம் பழமையானதுடன் தேசிய பொருளாதார முன்னேற்றத்திலும் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளது. ஆகவே, இந்தத் திணைக்களத்தைப் பாதுகாப்பது எமது பிரதான எதிர்பார்ப்பாகும்.

தேசிய பொருளாதாரத்தில் 60 சதவீத பங்களிப்பை சுங்கத் திணைக்களம் வழங்குகின்றது. இந்த நிதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றது. ஆகவே, சுங்கத் திணைக்களத்தினர் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

சுங்கத் திணைக்களம் தேசிய பாதுகாப்புடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ளது. தேசிய பாதுகாப்புத் தொடர்பில் கவனம் செலுத்தும் போது அதில் சுங்கத் திணைக்களத்தின் ஒத்துழைப்பு பிரதானமாகக் காணப்படும் - என்றார். (எ-22)

# மெய்வன்மை போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜன.30

புத்தூர் சிறிசோமஸ்கந்தாக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் செ.இளங்கோ தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தி னராக முன்னாள் பிரதி அதிபர் சிவலீலாதேவி வடிவேலு, சிறப்பு விருந்தின ராக வலி.கிழக்குப் பிரதேச சபை தவிசாளர் தி.நிரோஸ், பொறியியலாளர் ம.ரேகாதீபன் ஆகியோரும் கலந்து கொள்வர். (க-159)

★ ★ ★ ★

சாவகச்சேரி,ஜன.30

கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் தா.கணேசபலேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.மதிதரன் கலந்து கொள்வார். (க-9)

★ ★ ★ ★

கொடிகாமம்,ஜன.30

மந்துவில் றோ.க.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியும், செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும். அதிபர் ந.தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் நிருபராணி அமிர்தலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபர் க.இராசேந்திரா கலந்து கொள்வார். (க-159)

★ ★ ★ ★

மன்னார்,ஜன.30

வட்டக்கண்டல் அ.த.க பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்குப் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் அ.தேவதாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கலந்து கொள்வார். (க-51)




# கஞ்சா விற்பனைக்கு எதிராக போராட்டம்

வவுனியா,ஜன.30


கஞ்சா விற்பனைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வேப்பங்குளத்தில் உள்ள வீடொன்றை முற்றுகையிட்டு பொதுமக்கள் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர். வவுனியா வேப்பங்குளம் 6 ஆம் ஒழுங்கையில் கஞ்சா போதைப்பொருள் விற்பனை இடம்பெறுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அந்த வீட்டில் கஞ்சா போதைப்பொருள் விற்பனை இடம்பெறுகிறது. சிறுவர்கள் மூலம் கஞ்சா விநியோகிக்கப்படுகிறது என்று தெரிவித்து அவர்களின் வீட்டை முற்றுகையிட்டு அந்தப் பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா பொலிஸார் இரு தரப்பினருடனும் கலந்துரையாடி போராட்டத்தைச் சுமுகமான நிலைக்குக் கொண்டு வர முயன்ற போதும், குடும்பத்தை வெளியேற்றுமாறு கோரி 6 ஆம் ஒழுங்கை வீதியை மறித்துப் போராட்டம் தொடர்ந்ததால் பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது.

பொதுமக்கள் முற்றுகையிட்ட வீட்டைச் சேர்ந்தவர்களின் ஓர் உறுப்பினர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பண்டாரிக்குளம் பகுதியில் அமைந்துள்ள பாடசாலைக்கு முன்பாக கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கடந்த சில நாள்களுக்கு முன்னர் வவுனியா நகரப்பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பொலிஸாரால் மீண்டும் கைது செய்யப்பட்டார். இரவு 7 மணிக்குத் தொடங்கிய போராட்டம் 9.30 மணிக்கு முடிவுக்கு வந்தது. வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சம்பவ இடத்துக்கு வருகை தந்து, வீட்டில் கஞ்சா விற்பனை இனிமேல் நடைபெறாத வகையில் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்ததையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. போராட்டம் காரணமாக அந்தப் பகுதியில் 2 மணி நேரம் பதற்ற நிலை காணப்பட்டது. (க-18)

திருக்கணிதப் பஞ்சாங்கப்படி சனி பகவான் ஜனவரி மாதம் 24ஆம் திகதி தமிழுக்கு தை மாதம் 10ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை சுமார் 10.03 மணிக்கு, தனுசு ராசியிலிருந்து மகர ராசிக்குப் பிரவேசம் செய்துள்ளார்.

# சனிப்பெயர்ச்சி பலன்கள்



## மேடம்



மேட ராசிக்காரர்களுக்கு ஒன்பதாம் இடமான தனுசிலிருந்து பத்தாமிடம் கர்ம ஸ்தானமான தொழில் ஸ்தானத்துக்கு சனி பகவான் பெயர்ச்சியாகிறார்.

சனி பகவான் பத்தாம் இடத்துக்குச்செல்வது பெரிய அளவு சிறப்பான பலன்கள் என்று சொல்ல முடியாவிட்டாலும், திரிகோண ஸ்தானத்திலிருந்து கொண்டு பல தடைகளை ஏற்படுத்திக்கொண்டிருந்த சனி பகவான் இப்போது கேந்திர ஸ்தானமான பத்தாம் இடத்துக்குச் செல்கிறார். இதனால், தொழிலில் இதுநாள் வரை இருந்து வந்த மந்தநிலை மாறி, வரவு செலவுகள் சிறப்பாக இருக்கும்.

ஜோதிட சாஸ்திரப்படி ஒரு பாவ கிரகம் கேந்திர வீட்டுக்குச் செல்வது சிறப்பான ஓர் அம்சமாகும். தொழிலில் நிலவி வந்த மந்தநிலை மாறி, சுறுசுறுப்பான முறையில் உங்களின் பணிகளைத் தொடங்குவீர்கள். வாழ்க்கையின் புதிய இலக்குகளை நிர்ணயித்து, அந்த இலக்குகளை வெகு இலகுவாகத் தாண்டி வெற்றிகளைக் குவிப்பீர்கள்.

ஒரு தொழிலைத் தொடங்கிவிட்டு ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால் என இந்தத் தொழிலை செய்யலாமா வேண்டாமா என்று மனக் குழப்பத்தில் இத்தனை நாள்களாக இருந்து வந்தீர்கள் அல்லவா? அந்தக் குழப்பத்துக்கெல்லாம் இப்போது தீர்வு கிடைக்கும். துணிச்சலுடன் நம்பிக்கையுடன் உங்கள் தொழிலில் இறங்கி அடித்து வெற்றிகளைக் குவிப்பீர்கள். சுயதொழில் செய்து வரும் தொழில் முனைவோருக்குச் சிறப்பான பலன்கள் கிடைக்கும்.

திருமணமாகாமலிருந்த கன்னிப்பெண்களுக்குத் தடைகள் நீங்கி, இப்போது சிறப்பான இடத்தில் நல்ல வரன் அமைந்து திருமணம் கைகூடி வரும். குழந்தை பாக்கியம் இல்லாமல் அவதிப்பட்டு வந்த தம்பதிக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். படித்த படிப்புக்கேற்ற வேலை கிடைக்காமலிருந்தவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். வெளிநாட்டுக்குச் சென்று நல்ல பணி வாய்ப்பும் சிலருக்குக் கிடைக்கும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்குப் பதவி உயர்வும் சம்பள உயர்வும் கிடைக்கும். கூடவே உங்களின் உழைப்புக்கேற்ற அங்கீகாரம் கிடைக்கும். மேலதிகாரிகள் உங்களின் திறமையைப் பாராட்டுவார்கள்.

உடல்நலனில் சின்னச்சின்ன உபாதைகளையும் தொல்லைகளையும் அனுபவித்து வந்தவர்களுக்கு உடல்நலம் சீரடைந்து உற்சாகம் பிறக்கும். பாக்கியஸ்தானமான ஒன்பதாமிடத்திலிருந்து சனி வெளியேறப் போகிறார் என்றாலே, எல்லா பாக்கியங்களும் உங்களை நோக்கி வரப்போகின்றன என்றுதானே அர்த்தம். பேரன் பேத்தியைப் பார்க்க ஆசைப்பட்டுக்கொண்டிருந்த தாத்தா பாட்டிக்குப் பேரன் பேத்திகளைப் பார்க்கின்ற வாய்ப்புக் கிடைக்கும். இஷ்ட தெய்வங்களை வணங்குவதற்காகப் புனித யாத்திரையையும் சிலர் மேற்கொள்வார்கள்.

விவசாயத்துக்குக் காரத்துவம் பெற்றவர் சனி என்பதால், விவசாயம் சீரும் சிறப்புமாக நடைபெறும். கிராமப் பொருளாதாரம் நல்லவிதமாக உயரும். நகரத்தை நோக்கி வந்தவர்கள், தங்கள் சொந்த கிராமத்துக்கே சென்று மகிழ்ச்சியான வாழ்க்கை வாழக்கூடிய வாய்ப்புகள் உருவாகும்.

## முன்ஜென்ம பாவங்களைத் தீர்ப்பது எப்படி?

பொதுவாக நாம் முற்பிறவியில் செய்த பாவங்கள் இப்பிறவியில் துன்பத்தை தருகின்றன என்று பலரும் சொல்லி நாம் கேள்விப்பட்டதுண்டு.

அந்த பாவங்களுக்குச் சில எளிய பரிகாரங்கள் மூலம் எளிதில் தீர்வு காணலாம்.

- அமாவாசை விரதம் கட்டாயம் இருக்க வேண்டும்.
- எள், தண்ணீர் வைத்து முன்னோர்களின் ஆசியை பெற்றுக் கொள்ள வேண்டும்.
- பசுவுக்கு வெல்லம், வாழைப்பழம், அகத்தி கீரை போன்றவற்றை கொடுக்கலாம்.
- காகத்துக்கு தினமும் மதிய உணவு படைக்க வேண்டும். இது நமது முன் ஜென்ம வினையை குறைக்கும்.
- ஏதேனும் ஒரு கோவிலுக்குச் சென்று நமது இஷ்ட தெய்வத்தை மனதார வேண்டிக்கொண்டு பின்னர், வீட்டுக்கு வந்து பூஜையறையில் எமது குல தெய்வத்தை மனதார நினைத்து வேண்டிக் கொண்டு அரச மர இலைகளை மூன்று மூன்றாக பிரித்து அதன்மீது உப்பை வைத்து பின்னர் உதிரி பூக்களைப் போட்டு அப்படியே அதன் மீது 9 அகல் விளக்குகள் வைத்து வழிபடுங்கள்.
- இதனை 9 அமாவாசைகள் தொடர்ந்து செய்வதன் மூலம் நம்முடைய பாவ வினைகளில் இருந்து நமக்கு மோட்சம் கிட்டும்.
- நாம் கோவிலுக்குச் செல்லும் போது சண்டிகேஸ்வரரை கண்டிப்பாக வணங்க வேண்டும். அவரை வேண்டி கொண்டு அன்னதானம் செய்யலாம். அது எமது முன்ஜென்ம பாவங்களைப் போக்க வல்லது.

## நாளை
## 31.01.2020
வெள்ளிக்கிழமை

**விகாரி - தை 17**

திதி: ஷஷ்டி பி.ப. 02.14 வரை


நட்சத்திரம்– ரேவதி பி.ப.04.45வரை

**ராகுகாலம்- 11.06- 12.36 வரை**

**சுப நேரம்- 06.36 -08.06 வரை**

**எமகண்டம்- 3.36- 5.06 வரை**

### தினம் ஒரு சிந்தனை



# காலம் பொன் போன்றது!

காலம் பொன் போன்றது என்பது எம் எல்லோருக்கும் தெரியும். எனினும் நம்மில் பலர், நேரத்தை பயனுள்ள வகையில் நிர்வகிக்கத் தவறி விடுகிறோம்.

எமது கையில் இருக்கும் பணிகளில் மிக முக்கியமான பணி எதுவோ, அதில் நமது உழைப்பை ஒருமுகப் படுத்துவதுதான் நேர நிர்வாகத்தின் சாராம்சம்.

எமது கையில் இருக்கும் பணிகளில் முக்கியத்துவம் மிகுந்த 20 சதவீத பணிகள், 80 சதவீத மதிப்பைக் கொண்டவை என்று கூறுகிறது பரேட்டோ விதி.

அதாவது, இன்றைய தினம் நீங்கள் 10 பணிகளைச் செய்ய வேண்டும் என்றால், அதில் 2 முக்கியப் பணிகள், மற்ற 8 பணிகளின் மதிப்புக்கு சமமானவை என்கிறது இந்த விதி.

இந்த விதிக்கு இணங்க, நான் கூறும் வேலைமுறையை இன்றுமுதல் பின் பற்றுங்கள்.

1. உங்களது ஒரு நாளுக்கான பணிகள் அனைத்தையும் முந்திய நாள் இரவே எழுதிவையுங்கள்.
2. அந்தப் பணிகளில் 10 முக்கியப் பணிகளை அதிகாலையில் பட்டியல் இடுங்கள்.
3. அந்தப் பட்டியலில் 80 சதவீத மதிப்பைக் கொண்ட 2 அதிமுக்கியப் பணிகள் எவை என்பதை கவனமாகக் கண்டறிந்து அவற்றை பச்சை மையால் குறியிடுங்கள்.
4. அந்த 2 அதிமுக்கியப் பணிகளை சிறப்பாகச் செய்து முடித்திட உங்கள் நேரம், உழைப்பு, திறன்கள், தொடர்புகள் அனைத்தையும் பயன்படுத்துங்கள்.
5. அவை முடிந்தவுடன் அடுத்த கட்ட முக்கியத்துவம் வாய்ந்த 2 பணிகளை நிறைவேற்றுங்கள்.

இந்த நேரத்தில், இப்போதைய கணத்தில், நான் எந்த வேலையை செய்தால் அது மிகச்சிறந்த பயனைத் தரும் என்று உங்களை நீங்களே அவ்வப்போது கேள்வி கேளுங்கள். உங்கள் பதில் எதுவோ அந்தப் பணியை நிறைவேற்றுங்கள்.

அதிசயிக்கத்தக்க பயனைத் தரும் 20 சதவீதப் பணிகளை அடையாளம் கண்டு உங்கள் உழைப்பை ஒன்று குவிக்கக் கற்றுக்கொண்டால் நீங்கள் வெற்றியாளர் ஆவது உறுதி.

## 11 பேர் கடத்தல் விவகாரம்:

# சாட்சியாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்த 2 புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்கள் கைது

### நாளை வரை விளக்கமறியல்

ஐந்து மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர் கடத்திக் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தவர்களில் கடற்படையின் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்கள் இருவர் சி.ஐ.டியினரால்மீண்டும்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி வழக்கில் சாட்சியாளர்களை அச்சுறுத்தும் விதத்தில் ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினர் என்ற குற்றச்சாட்டின் கீழ் அவ்விருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இருவரும் கொழும்பு மேலதிக நீதிவான் பிரியந்த லியனகே முன்னிலையில் நேற்று ஆஜர்ப்படுத்தப்பட்டனர். இதன்போது அவ்விருவரையும் நாளை 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதிவான் உத்தரவிட்டார்.

பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த 8ஆம், 9ஆம் பிரதிவாதிகளான அனுர துஷார மெண்டிஸ் மற்றும் கஸ்தூரிகே காமினி ஆகியோரே மீண்டும் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சாட்சியாளர்களை அச்சுறுத்திய விவகாரத்தில் சட்டத்தரணி மேஜர் அஜித் பிரசன்னவையும் மேலும் நான்கு பேரையும் நீதிமன்றில் ஆஜர்செய்யுமாறும் சி.ஐ.டியின் பணிப்பாளருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். அவ்வாறு குறித்த உத்தரவுக்கு அமையச் செயற்படத் தவறினால் சி.ஐ.டியின் பணிப்பாளர் மன்றில் நேரடியாக ஆஜராகி விளக்கமளிக்க வேண்டும் எனவும் கொழும்பு மேலதிக நீதிவான் பிரியந்த லியனகே அந்த உத்தரவில் மேலும் தெரிவித்துள்ளார். (ம-22)

# ரஞ்சனுக்கு விளக்கமறியல் 12ஆம் திகதிவரை நீடிப்பு!

### 7ஆம் திகதி குரல் பரிசோதனை

நீதிபதிகள் தமது கடமைகளை முன்னெடுக்கும்போது சட்ட ரீதியாக எந்த அதிகாரமும் இன்றி அவர்களுக்கு அழுத்தம் கொடுத்தமை அல்லது அழுத்தம் கொடுக்க முயற்சித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் கைதுசெய்யப்பட்ட முன்னாள் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவின் விளக்கமறியல் எதிர்வரும் 12ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிரான வழக்கு நுகேகொடை நீதிவான் நீதிமன்றத்தில்நேற்றுமீண்டும்விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது விசாரணையாளர்களான கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நெவில் சில்வா, பொலிஸ் பரிசோதகர் ரத்நாயக்க, அரச தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணி ஜனக பண்டார ஆகியோர் முன்னிலையாகினர். சந்தேகநபரான ரஞ்சன் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி நெவில் அபேரத்ன முன்னிலையானார்.

இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்த நீதிவான் சந்தேக நபரான ரஞ்சன் ராமநாயக்கவை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். அத்துடன் சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்ட தொலைபேசி கலந்துரையாடல்கள் அடங்கிய இறுவெட்டுக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்காக ரஞ்சன் ராமநாயக்கவின் குரல் ஒலியைப் பதிவு செய்வதற்காக எதிர்வரும் 7ஆம் திகதி அரச பகுப்பாய்வு நிலையத்தில் அவரை முன்னிலையாகுமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ம-22)

# ரணிலிடம் சி.ஐ.டி. விசேட விசாரணை

### வாக்குமூலமும் பதிவு

கொழும்பு, ஜன. 30

உயிர்த்த ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் விசேட விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலமும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல்களைத் தடுப்பதற்கு அல்லது அதன் தாக்கங்களைக் குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் இடம்பெறும் சி.ஐ.டி. விசாரணைகளுக்கு அமைய ரணிலிடம் மேற்படி விசாரணை நடத்தப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவின் பணிப்பாளர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

அதன்படி ரணிலிடம் கடந்த சனிக்கிழமை இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டது எனவும் அவர் மேலும் கூறினார். (ம-22)

### இனவாதம்...

சிங்கள மக்களைத் திட்டித் தீர்ப்பதை மட்டுமே இனவாதம் பேசுவதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத்தில் செய்துவருகின்றனர். இவ்வாறு செயற்பட்டால் எவ்வாறு இணைவது? வடக்கில் இருந்தும் தெற்கிலிருந்தும் புதியவர்கள் நாடாளுமன்றம் வரவேண்டும். சுகாதாரம், கல்வி போன்ற அமைச்சுகளை தமிழர்களும் வகிக்கும் சூழ்நிலை உருவாகவேண்டும். எதிர்காலத்தில் வடக்கு, கிழக்குக்கு முக்கியமான அமைச்சுகள் கிடைக்கும் என்று நம்புகின்றோம் இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தின தேரர் தெரிவித்தார்.

இந்து பௌத்த கலாசார பேரவை மற்றும் வடக்கு மாகாண தேசிய இரண்டாம் மொழிக் கற்கை நிலையம் என்பன இணைந்து நேற்று நடத்திய, சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் பூர்வீகக் குடிகள் யார் என்று கண்டறிவதற்காக வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் மரபணு சோதனை நடத்துவதற்கு முயற்சித்திருந்தார். நான் அத்தகைய முயற்சியில் ஈடுபடப்போவதில்லை. எம்மிடையே உள்ள ஒத்தபண்புகள் எவை?, எமக்குள்ள சவால்கள் என்ன?, இவற்றை ஒன்றாக இணைந்து எவ்வாறு வெற்றிகரமாக எதிர்கொள்வது? என்பதே தொடர்பிலேயே ஆராய்ந்து வருகின்றேன்.

ஆஸ்திரேலியாக் காட்டுத்தீயால் பல உயிரினங்கள் அழிந்தன. பூமி வெப்பமடைந்து வருவதால் முழு உலகமும் பயங்கர பிரச்சினையை எதிர்கொண்டுள்ளது. சீனாவில் வைரஸ் நோய் பரவிவருகின்றது. மக்கள் உயிரிழந்து வருகின்றனர். இப்படியான பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக விக்னேஸ்வரனுக்கு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

2004ஆம் ஆண்டில் சுனாமி ஏற்பட்டபோது தமிழர், சிங்களவர் என்று இராணுவம் பிரித்துப் பார்த்தா செயற்பட்டது? தற்போது புது வடிவிலான சுனாமிக்கு முகம் கொடுத்துள்ளோம். மரபணு பற்றி ஆராய்வதைவிட, முகம்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வை காண்பது குறித்தே சிந்திக்க வேண்டும். மனித குலத்தை குணப்படுத்தக் கூடிய தலைவர்கள் வேண்டும்.

விக்னேஸ்வரன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றத்தில் சிறு பான்மையின மக்கள் தொடர்பில் மட்டுமே கதைக்கின்றனர். நாடு தொடர்பில் உரையாற்றுவதில்லை. குறிப்பாக யாழ்ப்பாணத்து மக்கள் தொடர்பில் மட்டுமே கருத்துரைக்கின்றனர். நுவரெலியா, மாத்தளை, கோகாலை உட்பட நாட்டில் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழர்களுக்காக குரல் கொடுப்பதில்லை. யாழ்ப்பாணத்தில் மட்டும் தமிழர்கள் வாழவில்லை. எல்லா பகுதிகளிலும் வாழ்கின்றனர். எனவே, நாம் இணைந்து செயற்பட்டால் மட்டுமே சவால்களை எதிர்கொள்ள முடியும்.

சூழல் பாதுகாப்பு, கலாசாரம், தேசிய ஒற்றுமை என்பன தொடர்பில் பிரதான அரசியல் கட்சிகளிடம் தெளிவான கொள்கை வேலைத்திட்டம் இல்லை. எனவேதான் பரந்துபட்ட தேசிய இயக்கத்தின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது.

ஜனாதிபதி என்பவர் கட்சித் தலைவர் கிடையாது. இவர் இந்த நாட்டின் ஜனாதிபதி. மக்களே அவரை தெரிவு செய்துள்ளனர். அவரின் தலைமையின்கீழ் புதியவர்கள், புத்திஜீவிகள் நாடாளுமன்றம் செல்லவேண்டும். தமிழ், சிங்களம் என இரு தரப்பிலும் இவ்வாறு நடைபெற்றால் நாட்டை புதிய இடத்துக்கு அழைத்து செல்லாம். ஜனாதிபதியிடம் தெளிவான கொள்கை இருக்கின்றது.

யாழ்ப்பாணத்துக்கு எங்கிருந்து போதைப்பொருள் வருகின்றது? இது தமிழ், சிங்களம் என்று இரு இனத்துக்குமே சவாலானது. வறுமை என்பதும் பொதுவானது. எனவே, இத்தகைய சவால்களை எதிர்கொள்வதற்கு நாம் இணையவேண்டும். அதற்காக சம்பந்தனுக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

எதிர்காலத்தில் இங்குள்ளவர்களுக்கு கொழும்பு செல்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும். 200 பேர் வரை தங்கியிருந்து சிங்களக் கல்வியை பயிலலாம். அதேபோல் இந்தப் பிள்ளைகள் இராணுவம், பொலிஸ், அரச துறைகளில் இணையலாம். இதற்கு தடை இல்லை. ஆனால், சிங்களவர்களை திட்டி தீர்ப்பதை மட்டுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத்தில் செய்துவருகின்றனர். இப்படி செய்தால் இவ்வாறு இணைய முடியாது.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரவைக்கு செல்ல வேண்டும். சுகாதாரம், கல்வி, விவசாயம் ஆகிய அமைச்சுப் பதவிகளை வகிக்கவேண்டும். எதிர்காலத்தில் வடக்கு, கிழக்கில் பலம்வாய்ந்த அமைச்சர்கள் உருவாவார்கள் என நம்புகின்றேன் - என்றார். (ம-ஒ.5,44)


கோடிபதி கப்ருக
சீட்டிழுப்பு வாரம்: 552
திகதி: 2020 ஜனவரி 28
வர்ணம்: இளஞ்சிவப்பு
செவ்வாய்
K 10 42 57 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,633,835/-
மஞ்சள், இளஞ்சிவப்பு மற்றும் பச்சை நிற டிக்கட்டுகள் முறையே ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 29.01.2020 வெற்றி வாரம் 2753 வர்ணம் பச்சை
கன்னி
வெற்றி இலக்கங்கள் 05 08 35 46
வியாழக். கிழமை வெற்றிப் பொதி ரூ. 3, 291, 870/=
30.01.2020ம் திகதி வியாழக். கிழமை .......கபிலம்.......... நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 867
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.01.29
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,377,095/-
வெற்றி இலக்கங்கள் 26 27 48 50
ஆங்கில எழுத்து C
அபிவிருத்தி லொத்தர் சபை
0112 333 546-47 0114 825 825

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3294 திகதி:2020.01.29
ஊதா புதன்கிழமை
விசேட இலக்கம் 2104
வெற்றி இலக்கங்கள் 19 36 37 64
ஆங்கில எழுத்து O
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 30,739,890/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 318
சீட்டிழுப்பு திகதி 29.01.2020 நீலம்
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 36 64 65
விதி எண் 09
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 50, 845, 536/=
31.01.2020 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, டாரன்லி கொஸ்மின் ஆர்.ஏ. சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
www.dlb.lk



## இன்றைய நாள்

**மேடம்:** சிலரது பேச்சு சங்கடத்தை உருவாக்கலாம். பந்தயங்களில் ஈடு படக்கூடாது. தொழிலில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். சேமிப்புபணம்முக்கிய செலவுகளுக்கு பயன்படும்.

**இடபம்:** பூர்வபுண்ணிய நற்பலன் துணை நிற்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறும். உபரி பணவருமானம் வரும். வீட்டு உபயோகப்பொருள் வாங்குவீர்கள்.

**மிதுனம்:** தொல்லை கொடுத்தவர் இடம் மாறிப் போவர். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**கடகம்:** மாறுபட்ட சூழல் உருவாகலாம். கவனமுடன் செயல்பட வேண்டும். தொழில், வியாபாரத்தில் வருகிற இடையூறுகளை சரி செய்வது நல்லது. குறைந்த அளவில் பணவரவு இருக்கும். உடல் நலத்திற்கு சிகிச்சை உதவும்.

**சிம்மம்:** பிறரைநம்பிஎவருக்கும்வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரம் சீராக கூடுதல் உழைப்பு அவசியம். சராசரி பணவரவு கிடைக்கும். அரசியல்வாதிகள் பதவி பெற நல்யோகம் உண்டு.

**கன்னி:** குடும்பத்தில் சுபநிகழ்வு உருவாகும். தொழில், வியாபாரம் செழித்து சமூகத்தில் புகழ்பெறுவீர்கள். பணவரவும், நன்மையும் அதிகரித்து வாழ்க்கைத்தரம் உயரும்.

**துலாம்:** மனதில் ஆன்மிக நம்பிக்கை வளரும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் உருவாகும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். மாமன், மைத்துனருக்கு தேவையான உதவி செய்வீர்கள்.

**விருச்சிகம்:** வழக்கத்திற்கு மாறான பணி தொந்தரவு தரலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். நிலுவைப்பணம் கூடுதல் முயற்சியால் கிடைக்கும்.

**தனுசு:** சிலரது பேச்சு உங்களை சங்கடப்படுத்தலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணச்செலவு அதிகரிக்கும். பயன்தராத பொருள் வாங்க வேண்டாம்.


**மகரம்:** வாழ்வில் வளம் பெற புதிய திட்டமிடுவீர்கள். நண்பரின் ஆலோசனை ஊக்கம் தரும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழிக்கும்.

**கும்பம்:** முக்கிய பணியை மறந்திடுவீர்கள். குடும்ப உறுப்பினர் உதவுவர். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை ஏற்படும்.

**மீனம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செயல்களில் பொறுப்புணர்வுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி உருவாகும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.

# கொரோனாவை ஒத்த வைரஸ் உருவாக்கம்

## தடுப்பு மருந்து தயாரிக்கும் முயற்சி துரிதமாகும் என்று நம்பிக்கை



**மெல்பேர்ன், ஜன.30**


**கொரோனா வைரஸைப் பிரதிபலிக்கும் வைரஸ்ஒன்றைஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். முக்கியமான இந்த முயற்சி காரணமாக கொரோனோ வைரஸ்க்கான தடுப்பு மருந்தைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் துரிதமாகலாம் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

மெல்பேர்னின் பீற்றர் டொகெட்ரி நிறுவகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளே கொரோனோ வைரஸினை பிரதிபலிக்கும் வைரஸ்களை உருவாக்கியுள்ளனர்.

தொற்று நோய்க்கு உள்ளான நபர் ஒருவர் மூலம் ஆய்வுகூடத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த வைரஸ் உலகம் முழுவதும் பரவி வரும் வைரஸ் தொடர்பான சரியான தகவலை பெற்றுக்கொள்ள உதவும் என எதிர்பார்ப்பு வெளியாகியுள்ளது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆராய்ச்சியாளர்களுடன் இந்த வைரஸை ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் பகிர்ந்துகொள்ளவுள்ளனர்.

டிசெம்பரில் குபேய் மாநிலத்தில் பரவத்தொடங்கிய கொரோனா வைரஸின் மரபணு வரிசையை சீனா விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர். தங்களுடைய முயற்சி கொரோனா வைரஸ் குறித்த பலவிடயங்களை அறிந்துகொள்வதற்கு மிக முக்கியமானதாக அமையும் என பீற்றர் டொகெட்ரி நிறுவகத்தின் தலைவர் யூலியன் டுரூஸ் தெரிவித்துள்ளார்.

எங்களிடம் உண்மையான வைரஸ் உள்ளதன் காரணமாக அனைத்து சோதனை முறைகளையும் மாற்றியமைத்து சரி பார்க்கவும், அவற்றின் உணர்திறன் மற்றும் தனித்துவங்களை ஒப்பிட்டு பார்க்கவும் முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)



# கொரோனாவை தடுக்க மந்திரம் உச்சரியுங்கள்!

## *தலாய் லாமா கூறுகின்றார்*

பீஜிங், ஜன.30

கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்த 'ஓம் தரே டுட்டாரி ட்டுரு சோஹா' என்ற மந்திரத்தை உச்சரியுங்கள் என்று தலாய் லாமா தெரிவித்துள்ளார்.

சீனாவிலுள்ள புத்த மதத்தை பின்பற்றும் சிலர் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்க அறிவுரை வழங்க வேண்டும் என்று தலாய் லாமாவிடம் முகநூல் மூலம் வேண்டுகோள் விடுத்தனர்.

இதையடுத்து, கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்ட மக்கள் 'ஓம் தரே டுட்டாரி ட்டுரு சோஹா' என்ற மந்திரத்தை தொடர்ந்து உச்சரித்து மன அமைதி மற்றும் கவலையில் இருந்து விடுபடலாம். இந்த மந்திரத்தை உச்சரித்தால் கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்தி நன்மையை அளிக்கும் என தலாய் லாமா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சீனாவில் உருவான கொரோனா வைரஸ் மேலும் 17 நாடுகளில் பரவியுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. சீனாவில் மாத்திரம் 5 ஆயிரத்து 974 பேர் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# பல வருட காலமாக மூளையில் நாடா புழு

நியூயோர்க், ஜன.30

கடும் தலைவலி மற்றும் வாந்தியால் பாதிக்கப்பட்ட நிலையில் பல வருட காலமாக துன்பப்பட்டு வந்த நட ரொருவரை தீவிர மருத்துவ பரிசோதனைக்குட்படுத்திய மருத்துவர்கள் அவரது தலையில் நாடாப் புழு ஒன்று இருப்பதைக் கண்டறிந்துள்ளனர். இந்த அதிர்ச்சிச் சம்பவம் அமெரிக்காவில் நடந்துள்ளது.

டெக்ஸாஸ் மாநிலத்தில் அஸ்டின் நகரில் வசிக்கும் கெரார்டோ என அழைக்கப்படும் அந்நபர் பல வருட காலத்துக்கு முன்னர் மெக்ஸிக்கோவில் வசித்தபோது முறையாக சமைக்காத பன்றி இறைச்சியை உண்டதையடுத்து அவருக்கு நாடாப் புழு தொற்று ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.


அதையடுத்து அவருக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொண்டு அவரது மூளையிலிருந்த நாடாப் புழு அகற்றப்பட்டது. அவர் சிகிச்சை பெறுவதற்கு இன்னும் தாமதமாகியிருக்கும் பட்சத்தில் அந்த நாடாப் புழுவும் அதிலிருந்து இனவிருத்தியடைந்த புழுக்களும் அவரது உயிருக்கு ஆபத்தை விளைவித்திருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ)



# கொரோனா அசுர வேகம்

**நேற்றுவரை சீனாவில் 132 பேர் சாவு**

**ஒரே நாளில் 1,500 பேருக்குப் பாதிப்பு**



கொழும்பு, ஜன.30

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நேற்று 132 ஆக உயர்ந்துள்ளது என்றும், ஒரே நாளில் ஆயிரத்து 500 புதிய நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் சீனாவின் தேசிய சுகாதார ஆணையம் தெரிவித்துள்ளது

கடந்த 24 மணித்தியாலங்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 26 ஆக பதிவாகியுள்ளது. அதே நேரத்தில் உறுதிப்படுத்தப்பட்ட புதிய நோயாளிகளின் எண்ணிக்கை ஆயிரத்து 459 அதிகரித்ததை அடுத்து மொத்த நோயாளர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 974ஆக உயர்ந்துள்ளது.

பாதிப்பு கண்டறியப்பட்ட 5 ஆயிரத்து 974 நோயாளர்களில் ஆயிரத்து 239 பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்றும், 103 நோயாளிகள் குணமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உறுதிப்படுத்தப்படாத நோயாளர்களின் எண்ணிக்கை 9 ஆயித்து 239 ஆக உயர்ந்துள்ளது என்றும் சீன ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

உலகளவில் இதுவரை 18 நாடுகளில் 82 நோயாளிகள் கொரோனா வைரஸ் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நோயை கட்டுப்படுத்துவதற்காக சீனாவில் வுஹான் உட்பட 15 நகரங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன.

அத்துடன் சீனா நேற்றுமுன்தினம் தமது நாட்டின் தலைநகருக்கான அதிவேக ரயில் சேவையை கட்டுப்படுத்தியுள்ளது. (எ)

# கொரோனாவிலிருந்து தப்பிய முதல் நோயாளி

கொழும்பு, ஜன.30

சீனாவில் பரவியதன் மூலம் உலகத்தையே அச்சம் கொள்ள செய்திருக்கும் கொரோனா வைரஸால் மக்கள் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர். இந்த நோய்க்கு இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படாததால் நாளாந்தம் இறப்புகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது.

கிழக்கு சீனாவின் ஜியாங்சி மாகாணத்தின் நாஞ்சாங்கில் உள்ள நாஞ்சாங் பல்கலைக்கழகத்தின் இணைப்பு வைத்தியசாலையிலிருந்து முதல் குணப்படுத்தப்பட்ட கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவர் குணமடைந்து நேற்றுமுன்தினம் வைத்தியசாலையில் இருந்து வெளியேறி உள்ளார். இவர், 37 வயதுடையவரெனவும், குறிப்பிட்ட நோயாளி வைரஸ் தாக்குதலுக்கு உள்ளாகி அதற்கான அறிகுறிகளுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நோய் குணமடைந்து வெளியேறியுள்ளார் என்றும் அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ)

# ட்ரம்பின் திட்டத்தை நிராகரித்தது பலஸ்தீன்

கொழும்பு, ஜன.30

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்வைத்துள்ள இஸ்ரேலுக்குச் சாதகமான மத்திய கிழக்கு சமாதான முயற்சியை பலஸ்தீன அதிகாரிகள் உடனடியாக நிராகரித்துள்ளனர். டொனால்ட் ட்ரம்பின் சமாதான திட்டம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள பலஸ்தீன ஜனாதிபதி முகமட் அப்பாஸ் ஜெருசலேம் விற்பனைக்கில்லை என்று தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:

எங்கள் அனைத்து உரிமைகளும் விற்பனைக்குரியவை அல்ல. அந்த உரிமைகள் குறித்து பேரம்பேச முடியாது. அமெரிக்க ஜனாதிபதியின் யோசனையை பலஸ்தீன, அராபிய கிறிஸ்தவ முஸ்லிம் குழந்தைகளால் ஏற்றுக்கொள்ள முடியாது.

நாங்கள் ஆயிரம் தடவை சொல்கின்றோம் இல்லை, இல்லை என்று. ஆரம்பத்திலிருந்தே இந்த யோசனையை நாங்கள் எதிர்த்துவந்துள்ளோம் எங்கள் நிலைப்பாடு சரியானது- என்றார்.

அதேவேளை டொனால்ட் ட்ரம்பின் திட்டத்துக்கு எதிராக ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இஸ்ரேலின் அனைத்து முக்கிய கோரிக்கைகளையும் உள்ளடக்கும் விதத்திலான திட்டத்தை ட்ரம்ப் முன்வைத்துள்ளார்.

இந்த திட்டம் இஸ்ரேல் மேற்கு கரையில் உள்ள அனைத்து குடியேற்றங்களையும் கையகப்படுத்துவதற்கு வழிவகுக்கும் விதத்தில் அமைந்துள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட இறைமையுடன் பலஸ்தீன தேசமொன்றை உருவாக்குவது தொடர்பாக டிரம்பின் திட்டம் தெரிவித்துள்ளது.

ஜெருசலேம் இஸ்ரேலின் பிரிக்க முடியாத தலைநகரமாக விளங்கும் என தெரிவித்துள்ள டொனால்ட் ட்ரம்ப் எதிர்கால பலஸ்தீன தேசத்தின் தலைநகராக கிழக்கு ஜெருசலேம் காணப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

யூத குடியேற்றங்கள் காணப்படும் பகுதிகள் உட்பட மேற்கு கரையின் பல பகுதிகள் மீதான இறைமையை அமெரிக்கா அங்கீகரிக்கும் என டிரம்பின் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் பாலஸ்தீன நிலப்பரப்பை இரட்டிப்பானதாக்கி கிழக்கு ஜெருசலேத்தில் பாலஸ்தீன தலைநகரம் அமையும் இங்கு அமெரிக்கா தனது தூதரகத்தை திறக்கும் எனவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (எ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரிமளம் இராசரட்ணம்



மண்ணில் 08.07.1925 — விண்ணில் 28.01.2020

கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரிமளம் இராசரட்ணம் நேற்று முன்தினம் (28.01.2020) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சு.இராசரட்ணம் (ஓய்வுபெற்ற தாதி) அவர்களின் மனைவியும், இராஜகுலேந்திரன் (லண்டன்), இராஜகுலசிங்கம் (லண்டன்), இராசநாயகி, இராஜகுலசேகரம் (லண்டன்), இராஜேஸ்வரி, இராசாம்பாள் (கனடா), இராஜேந்திரி ஆகியோரின் அன்புத் தாயும், யோகமணி (லண்டன்), தயா (லண்டன்), புவனதயாபரன், திலகா (லண்டன்), காலஞ்சென்ற அருமைத்துரை மற்றும் செந்தமிழ்ச்செல்வன் (கனடா), சுந்தரலிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2020) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**9/1, புதுவீதி (பாற்குளம் வீதி),**
**கொய்யாத்தோட்டம்,**
**யாழ்ப்பாணம்.**

(ల23307)(13.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### ஐயாத்துரை தங்கம்மா



தோற்றம் 02.10.1923 — மறைவு 28.01.2020

மீசாலை மேற்கு மீசாலை கேணியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை தங்கம்மா நேற்று முன்தினம் (28.01.2020 ) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையாம்பி - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும், தங்கராசா, செல்வராசா (பிரான்ஸ்), ராசபூபதி, சிவராசா, நடேசபிள்ளை, ராஜேஸ்வரி (கனடா), சிவப்பிரகாசம் (லண்டன்), நவரத்தினம் (ஜேர்மனி), ராதாதேவி ஆகியோரின் அன்புத் தாயும், சர்வோதயமங்கை, மல்லிகாதேவி, ராசதுரை, ரோகினி, வள்ளியம்மை, ஞானேந்திரன், லங்கா, சுகிர்தா, முருகையா ஆகியோரின் அன்பு மாமியும், பாஸ்கரன், டகிதா, பவிதா,செல்வசுதா, செல்வசுதன், செல்வசுதர்சினி, செல்வபகிந்தன், செல்வசுரேஸ், சிவானந்தராஜா, உதயானந்தா, சிறிரதி, யோகனந்தன், சிறிறூபா, பிரியா, சஜீவன், சர்மிகா, மிகிரன், முகுந்தன், டினேஸ், அனோஜா, நிலானி, மிசானி, நிசா, நிரு, நிதி, நீலாம்பரி, நீலாட்சனி, நீலாங்கனி, நீலாம்பரன், நீலாஜி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைதள் நாளை (31.01.2020) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கேணியடி,**
**மீசாலை மேற்கு, மீசாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 748 4356**

(cc1448) (13.17)



# சென். ஆன்ஸ் அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.30
மன்னார் மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தினால் புதிதாக இணைந்து கொண்ட துடுப்பாட்ட அணிகளுக்கு இடையில் நடத்தும் 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் வங்காலை சென்.ஆன்ஸ் விளையாட்டுக் கழக அணி 20 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

எருக்கலம்பிட்டி மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் வங்காலை சென்.ஆன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தாராபுரம் அல்ஜின்னா விளையாட்டுக் கழக அணி மோதியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற வங்காலை சென்.ஆன்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணி 37 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 229 ஓட்டங்களை பெற்றது. அணி சார்பில் டானியல் 60ஓட்டங்களையும் ஜோனந்தன் 38ஓட்டங்களையும், வசந்தன் 13ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் றியாஸ்,சிபார்,கசீம் ஆகியோர் தலா 4 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தாராபுரம் அல்ஜின்னா விளையாட்டுக்கழக அணி 50 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 209 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 20 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டனர். அணி சார்பில் றெஸ்றின் 26 ஓட்டங்களையும், சீபார் 25 ஓட்டங்களையும், பாஸ்மி 23 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்துவீச்சில் கிசோர் 4 இலக்குகளையும், நிறஞ்சன்,டானியல் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.(23)

## வீதியோட்டம்

வவுனியா,ஜன.30
வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின் ஒரு கட்டமாக மாணவர்களுக்கான வீதியோட்டம் நேற்று காலை 6 மணியளவில் பாடசாலை அதிபரின் தலைமையில் பாடசாலை முன்றிலில் ஆரம்பமாகி யகி ஹொரவபத்தான வீதியினூடாக மீண்டும் அதே வழியுடாக வவுனியா பாடசாலையை வந்தடைந்தது.

இதில் முதலாமிடத்தை இளங்கோ இல்லத்தைச் சேர்ந்த மிதுர்சிகனும், இரண்டாம் இடத்தை வள்ளுவர் இல்லத்தைச் சேர்ந்த ஹஸ்மிலனும், மூன்றாம் இடத்தை இளங்கோ இல்லத்தைச் சேர்ந்த மொரிசனும் பெற்றனர். (110)





## இன்றைய ஆட்டங்கள்

யாழ்.கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் ஏ.பி.சி பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தி வரும் லீக் சுற்றுக் கிண்ணத்துக்கான 2020 கால்பந்தாட்ட சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இதில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கியம் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஊரெழு பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குப்பிளான் ஞானகலா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
(23)

# இல்ல மெய்வன்மை போட்டி முடிவுகள்



யாழ்ப்பாணம்,ஜன.30
கிளிநொச்சி புதுமுறிப்பு விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தின் 2020ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வன்மை போட்டி நேற்றுமுன்தினம் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றன.

குறித்த விளையாட்டுப் போட்டிகள் பாடசாலை அதிபர் கண்ணபிரான் தலைமையில் புதிதாக அமைக்கப்பட்ட பொது மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தனியார் பல்கலைக் கழக பிராந்திய பணிப்பாளர் அன்றேவ் அன்ஸ்லி கௌரவ விருந்தினராக பிரதேச சபை உறுப்பினர் ச.ஜீவராசா, சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் தர்மரட்ணம், விவசாய ஆசிரிய ஆலோசகர் திருமதி தர்மகுலசூரியர் புதுமுறிப்பு கிராம அலுவலர் திருமதி பாலகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.(35)

◆ ◆ ◆



முல்லைத்தீவு ஆனந்தபுரம் அ.த.க பாடசாலையில் நடப்பாண்டுக்கான இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் கல்லூரி மைதானத்தில் பாடாசாலையின் அதிபர் ந.துரைராசாவின் தலைமையில் இடம்பெற்றன.

நிகழ்வில் விருந்தினர்களாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லை வலய ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆர். கணேசலிங்கம், தொழில் வழிகாட்டல் அதிகாரி திருமதி. சிந்தாமணி ஆனந்தராசா, விசேட கல்விக்கான ஆசிரிய ஆலோசகர் திருமதி.ந.தேவநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (246)

◆ ◆ ◆

கிளிநொச்சி,ஜன.30
கிளிநொச்சி குமுழமுனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை முதல்வர் திரு. ம. ரகுதீபன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.



நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் காந்திசெல்வன், முழங்காவில் இலங்கை வங்கியின் முகாமையாளர் சுபகயன், முழங்காவில் டொன் பொஸ்கோ தொழிற்பயிற்சி நிலையத்தின் இயக்குனர் அருட்பணி. பாரத் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

◆ ◆ ◆

குருநகர், ஜன.30
யாழ் திருக்குடும்ப கன்னியர்மடத் தேசிய பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நேற்று முன்தினம் யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அதிபர் அருட்சகோதரி அமிர்தா அன்ரன் தேவதாசன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் எஸ்.சுதர்சனும், கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் அருட் தந்தை எம்.பி.ரவிச்சந்திரன் அடிகளாரும், சிறப்பு விருந்தினராக யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்திரு எஸ்.திருமகன் அடிகளாரும் கலந்து கொண்டனர்.

கிளேயா இல்லம் 352 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், திரேசா இல்லம் 346 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், ஜோசேப்பின் இல்லம் 303 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும், மாட்டினா இல்லம் 204 புள்ளிகளைப் பெற்று நான்காமிடத்தையும், விசிற்ரேசன் இல்லம் 173 புள்ளிகளைப் பெற்று ஐந்தாம் இடத்தையும் பெற்றது. (51)

◆ ◆ ◆

சாவகச்சேரி, ஜன.30
சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அதிபர் திருமதி.ல.முகுந்நன் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சு.பரமானந்தம், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்வி உடற்கல்வி பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி.பிரதீபா கிருஷ்ணபிள்ளை, பழைய மாணவியும், கொழும்பு மாந



கரசபை உறுப்பினரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான திருமதி.உமாச்சந்திரா பிரகாஷ், மதிப்புறு விருந்தினராக சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற தலைவர் ந.சிவபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

போட்டியில் திருமகள் இல்லம் 352 புள்ளிகள் பெற்று முதலாமிடைத்தையும், மலைமகள் இல்லம் 302 1/2 புள்ளிகள் பெற்று இரண்டாமிடைத்தையும், கலைமகள் இல்லம் 302 புள்ளிகள் பெற்று மூன்றாமிடத்தையும், பூமகள் இல்லம் 271 புள்ளிகள் பெற்று நான்காம் இடத்தையும் பெற்றன. (131, 9)



# டைமன்ஸ்ரார் வி.க. அணி 123 ஓட்டங்களால் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜன.30
மன்னார் மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தினால புதிதாக இணைந்து கொண்ட துடுப்பாட்ட அணிகளுக்கு இடையில் நடத்தும் 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் நானாட்டன் டைமன்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 123 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.
எருக்கலம்பிட்டி மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் நானாட்டன் டைமன்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து எருக்கலம்பிட்டி அல்பலா விளையாட்டுக்கழக அணி மோதியது.
நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நானாட்டான் டைமன்ஸ்ரார் விளையாட்டுக்கழகஅணிதுடுப்பெடுத்தாடத் தீர்மானித்து.அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய நானாட்டான் டைமன்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 39.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 221 ஓட்டங்களை பெற்றது. அணி சார்பில் டிலோசன் 38 ஓட்டங்களையும், பிரசாந் 32 ஓட்டங்களையும், அபியுத் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சுஜீ 4 இலக்குகளை கைப்பற்றினார்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய எருக்கலம்பிட்டி அல்பலா விளையாட்டுக் கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 98 ஓட்டங்களை மட்டும் பெற்று 123 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. அணி சார்பில் சாகான் 23 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார்.பந்துவீச்சில கனிஸ்ரன் 4 இலக்குகளையும், பிரசாந் 3இக்குகளையும், சேவியர் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (23)



# பூப்பந்தாட்ட போட்டி முடிவு

யாழ்ப்பாணம்,ஜன.30
காரைநகர் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டுப் போட்டி வரிசையில் ஆண்களுக்கான பூப்பந்தாட்ட குழு நிலை ஆட்டத்தில் கோவளம் விளையாட்டுக் கழக அணி தங்கப் பதக்கத்தையும், காரைநகர் சலேஞ்சஸ் விளையாட்டுக் கழக அணி வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (23)

# பளு தூக்கும் போட்டி

யாழ்ப்பாணம், ஜன.30
யாழ். மாவட்ட பளுதூக்கும் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழக வீர வீராங்கனைகளுக்கான பளுதூக்கும் போட்டி மாசி மாத இறுதியில் நடைபெறவுள்ளது.
இந்தப் போட்டியில் பங்குபற்றும் கழகங்கள் யாழ். பளு தூக்கும் சங்க தலைவர், செயலாளரை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.(23)

# நியூசிலாந்து அபார வெற்றி

ஆக்லாந்தில் நடைபெற்ற பெண்கள் ஹாக்கிபோட்டியில் நியூசிலாந்து அணி 1:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.
இந்தியா - நியூசிலாந்து பெண்கள் ஹாக்கி அணிகளுக்கு இடையிலான போட்டி ஆக்லாந்தில் நடைபெற்று வருகின்றது. முதல் போட்டியில் இந்திய அணி 4:0 என வெற்றி பெற்றது. 2ஆவது போட்டியில் நியூசிலாந்து அணி 2:1 என்ற கணக்கில் வெற்றிபெற்று இரு அணிகளும் சமநிலையில் காணப்பட்டது..
இந்த நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 3ஆவது போட்டி நேற்று நடைபெற்றது.
இதில் நியூசிலாந்து அணி 1:0 என்ற கணக்கில் இந்திய அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது. முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் எந்தவித கோல்களையும் பெறவில்லை.
இரண்டாம் பாதி ஆட்டத்தில் இந்தியாவுக்கு அதிகமான பெனால்டி கோர்னர் கிடைத்தது எனினும் அவர்கள் அதனை சரியாகப் பயன்படுத்தவில்லை. ஆட்டத்தின் 37ஆவது நிமிடத்தில் நியூசிலாந்து அணியின் ஹோப் ரால்ப் கோல் அடித்தார். இதனால் ஆட்டநேர முடிவில் நியூசிலாந்து அணி 1:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.



# சங்கானை பி. செ. போட்டி முடிவுகள்



யாழ்ப்பாணம்,ஜன.30
சங்கானை பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டுப் போட்டி வரிசையில் ஆண்களுக்கான எல்லே தொடரில் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழக அணி தங்கப் பதக்கம் வென்றது.
கடந்த வாரம் விக்ரோறியா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆண்களுக்கான எல்லே போட்டியின் இறுதியாட்டத்தில் விக்ரோறி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய மூளாய் விக்ரோறி விளையாட்டுக்கழக அணி 35 பந்துகளில் 6 ஓட்டங்களைப் பெற்றது.
பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 32 பந்துகளில் 7 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.



பெண்களுக்கான எல்லே தொடரில் விக்ரோறி விளையாட்டுக்கழக அணி தங்கப் பதக்கத்தைத் தனதாக்கிக் கொண்டது.
கடந்தவாரம்சுழிபுரம்விக்ரோறியாவிளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான எல்லே போட்டியின் இறுதியாட்டத்தில் விக்ரோறி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய மூளாய் விக்ரோறி விளையாட்டுக்கழக அணி 25 பந்துகளில் 2 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 25 பந்துகளில் ஓர் ஓட்டத்தை மட்டும் பெற்றது.



பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரில் விக்ரோறி விளையாட்டுக்கழக அணி தங்கப் பதக்கத்தை தனதாக்கிக் கொண்டது.
கடந்த சனிக்கிழமை சுழிபுரம் விக்ரோறியா விளையாட்டுக்கழகமைதானத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான வலைப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் விக்ரோறி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதியது.
இதில் விக்ரோறி 18:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)

## ரோகித் சர்மா வாண வேடிக்கை

# சுப்பர் ஓவரில் இந்தியா த்ரில் வெற்றி




ரோகித் சர்மா அடுத்தடுத்து இமாலய சிக்சர்கள் விளாச இந்திய அணி 'சுப்பர் ஓவரில்' த்ரில் வெற்றி பெற்று 3:0 என தொடரை கைப்பற்றியது.

இந்திய அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 ரி-20 போட்டி, 3 ஒருநாள் போட்டி, 2டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்குமிடையில் நடைபெற்று முடிந்த இரண்டு ரி-20 போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்ற நிலையில் 3ஆவது போட்டி நேற்று இடம்பெற்றது.

டாஸ் வென்ற நியூசிலாந்து அணி முதலில் இந்திய அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. களம் இறங்கிய இந்தியா ரோகித் சர்மா (65), விராட் கோக்லி (38), கேஎல் ராகுல் (27) ஆகியோரின் ஆட்டத்தால் 5 விக்கெட் இழப்புக்கு 179 ரன்கள் எடுத்தது.

பந்து வீச்சில் ஹம்சி பென்ற் 3 விக்கெட்டையும், சன்நெர், கிராண்ட்ஸ்டோம் தலா ஓர் விக்கெட்டையும் கைப்பற்றினர்.

180 ரன்கள் அடித்தால் வெற்றி என களமிறங்கிய நியூசிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களை அடுத்தடுத்து ஆட்டமிழக்க செய்ய அணி தடுமாற ஆரம்பித்தது. மார்ட்டின் குப்தில் 31 ரன்னிலும், கொலின் முன்றோ 14 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். பின்னர் இணைந்த கேப்டன் கேன் வில்லியம்சன் அதிரடி காட்ட ஆரம்பித்தார். இதனால் வெற்றி நியூசிலாந்தின் பக்கமே இருந்தது. கேன் வில்லியம்சன் 28 பந்தில் அரைச்சதம் அடித்தார். இறுதி இரண்டு ஓவர்களில் நியூசிலாந்து அணி வெற்றி பெறுவதற்கு 20 ரன்களே தேவைப்பட்டது.

19ஆவது ஓவரை பும்ரா வீசி 11 ரன்களைக் கொடுத்தார். இதனால் நியூசிலாந்து அணிக்கு இறுதி ஓவரில் 9 ரன்கள் தேவைப்பட்டது. அணி எளிதாக வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 3ஆவது பந்தில் கேன் வில்லியம்சன் எதிர்பாராத விதமாக ஆட்டமிழந்தார். அவர் 48 பந்தில் 95 ரன்கள் விளாசியிருந்தார். அவரது ஆட்டமிழப்பு போட்டியை மாற்றிப் போட்டது.

இறுதிப் பந்தில் ராஸ் டெய்லர் போல்ட் முறையில் ஆட்டமிழக்க அணி 6 விக்கெட் இழப்புக்கு 179 ரன்கள் எடுத்ததால் போட்டி சமநிலையில் முடிந்தது. இதனால் 'சூப்பர் ஓவர்' கடைபிடிக்கப்பட்டது.

நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி 17 ரன்கள் எடுத்தது. ஒரு ஓவரில் 18 ரன்கள் அடிக்க வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது இந்திய அணி. ரோகித் சர்மா, கேஎல் ராகுல் ஆகியோர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களம் இறங்கினர். டிம் சவுத்தி பந்து வீசினார்.

முதல் பந்தில் ரோகித் சர்மா 2 ரன்களும், அடுத்த பந்தில் ஒரு ரன்களும் எடுத்தார். 3ஆவது பந்தை கேஎல் ராகுல் பவுண்டரி அடித்தார். ஆனால் 4ஆவது பந்தில் ஒரு ரன்னே எடுத்தார். இதனால் இறுதி இரண்டு பந்துகளில் 10 ரன்கள் தேவைப்பட்டது. ரோகித் சர்மா 5ஆவது பந்தை இமாலய சிக்சருக்கு அனுப்பினார். இதனால் இறுதிப் பந்தில் நான்கு ரன்கள் தேவைப்பட்டது. இறுதிப் பந்தையும் அவரே மீண்டும் சிக்ஸர் அடிக்க அணி த்ரில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி ஐந்து போட்டிகள் கொண்ட தொடரை இந்தியா 3:0 எனக் கைப்பற்றியது.

**வெளிநாடுகளுக்கான கடிதங்கள் பொதிகள் சேவை**
11kg இற்கு மேற்பட்ட பொதிகளுக்கு
UK.550/= France - 650/= Germany 650/= Netharland 650/=
Swiss 850/= Italy 700/= மற்றைய நாடுகளுக்கும் விஷேட சலுகைகள்
**T.C.N Express**
(#/11362)(11/17)
208,Galle Road, Colombo - 06 (நிபந்தனைகளுக்குட்பட்டது)
கிளைகள்:- யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி
077 7554528
குறிப்பு:- முகவர்கள் தேவை

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org
021 222 8093 17, Kandy Road, Jaffna

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 30.10.1957 | | 27.01.2020 |



### திருமதி அரியதாசன் பராசக்தி

அம்பனை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் மல்லாகம் தமிழ் (விசாலாட்சி) பாடசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரியதாசன் பராசக்தி 27.01.2020 அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அரியதாசனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் தவமணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் பூபதியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சங்கீதா, யனார்த்தனன், தேஷ்பிரியன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற பாலரஞ்சனா மற்றும் பத்மநாதன், புஸ்பநாதன், ஜெகதீஸ்வரன், பரமேஸ்வரன், பத்மினி, தயாளினி ஆகியோரின் அன்பு சகோதரியும் காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் செல்வராணி, தர்சினி, மஞ்சுளா, யசோதா, ரமணன், ஸ்ரீகரன், மரியதாஸ் ஈஸ்வரி (தேவி) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2020) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தமிழ் (விசாலாட்சி வித்தியாலயம்)**
**பாடசாலை ஒழுங்கை, மல்லாகம்.**
**தகவல் : குடும்பத்தனர்.**

**077 699 8683 / 077 8640 704**

**சிவப்பு மணல் விற்பனைக்குண்டு**
பள்ள நிலங்கள் சீர்செய்வதற்கும் கட்டட அத்திபாரங்கள் நிரப்புவதற்கும் ஏற்ற மிகச் சிறந்த சிவப்பு நிற மணல்மண் எம்மிடம் விற்பனைக்குண்டு. பளைப்பகுதி தொடக்கம் ஊர்காவற்றுறை, காரைநகர் மற்றும் யாழ் மாவட்டம் எப்பகுதியிலும் டிப்பர் மூலம் தங்கள் பகுதிக்கு நேரடியாக கொண்டுவந்து எம்மால் இறக்கமுடியும்.
தொடர்புகளுக்கு:-
077 649 1027, 077 940 0963

**பணியாளர் தேவை**
திருநெல்வேலியில் இயங்கும் Food City இற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.
1). கணக்காளர் (கணினி அறிவு அவசியம்) ஆண்/ பெண்
2). காசாளர் (20-35 வயது) கணினி அறிவு அவசியம். பெண்கள்
3). உதவியாளர்கள்
4).சாரதி
சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்
NORTHWAY FAMILY MART
184,பலாலி வீதி, திருநெல்வேலி. 077 764 7645

**பதவி வெற்றிடம்**
யாழ். நகரில் இயங்கும் பிரபல எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.
1. முகாமையாளர்
2. எரிபொருள் நிரப்புநர்
நேர்முகத்தேர்வுக்கு 01.02.2020 சனிக்கிழமை பி.ப 2.00 மணி தொடக்கம்.
சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.
**ராஜன் உமையாள் எரிபொருள் நிரப்பு நிலையம்**
இல.39, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
மேலதிக தகவல் : 021 222 0988, 077 3433 890



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.